# நான் கண்டெடுத்த பொன் மலரே



ரமணிசந்திரன்

# நான் கண்டெடுத்த பொன்மலரே

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

நரேந்திரன் கொதித்துப் போயிருந்தான். வீட்டுப் பெரியவர்கள் யார் முகத்தையும், அவனுக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை! இரவு உணவை மறுத்துவிட்டு, சற்று முன்னர்தான் கொண்டுவந்து நிறுத்திய காரில் மீண்டும் ஏறினான். பார் சீறிப் பாய்ந்தது! ஆனால், காரின் முழு ஏசியில் கூட, அவனது சூடு கொஞ்சமும் தணிவதாக இல்லை. சுனாமியாகப் பொங்கிய சினத்தில், காருக்குள் அவனுக்கு மூச்சு முட்டியது.

ஏசியை நிறுத்திவிட்டு, காரின் ஜன்னல் கதவுகளைத் திறக்கும் பட்டனை அழுத்தினான். நாலு கதவுகளின் வழியாகவும் காரின் வேகத்துக்கு எதிராகப் பாய்ந்து வந்த கடல் காற்று, முகத்தில் பல்லாயிரம் ஊசிகளாகக் குத்தியது.

ஆனால், சல்லடைக் கண்ணாகத் துளைக்கப் பட்டிருந்த நெஞ்சின் வலிக்கு முன், இது எம்மாத்திரம்?

காரை, அருகிருந்த “பார்க்கிங்”கில் நிறுத்திவிட்டு, இறங்கி கடலோரமாகச் சென்றான். இதமாக வருடிய மிதக் குளிர் காற்றும், அவனது இறுக்கத்தைத் தளர்விக்க முடியாமல் தோற்றது!

ஆனால், இந்தப் பெரியவர்கள், அவனைப் பற்றி என்னதான் எண்ணினார்கள்?

அவனது வாழ்வைக் கையில் எடுத்து, எந்த மாதிரிப் பந்தாட்டம் வேண்டுமானாலும், ஆடுவார்கள்., அவன் எதிர்த்து ஒரு மூச்சக் கூட விடாமல், அவர்கள் உதைத்த பக்கமெல்லாம் போய் விழுந்து கிடப்பான் என்றா?

அதற்கு, அவர்கள் வேறு யாரையேனும் பார்க்க வேண்டும்! அந்த இந்திரேசனைப் போல, ஒரு சோப்ளாங்கியை, முதலிலேயே தேர்நதெடுத்திருக்க வேண்டும்!

அவன் என்ன, நீலிமாவை மணக்க வேண்டும் என்று, எப்போதேனும் ஆசைப்பட்டானா? அவளைப் பார்த்தானா? பின்னால் அலைந்தானா? அவர்கள் யாரிடமேனும் கேட்டானா?

எதற்காக, அவனைப் பிடித்துப் போட்டுப் பந்தாடினார்கள்!

பெரியவர்களாகப் பார்த்து, இருவருக்கும் நல்ல பொருத்தம்., நிச்சயம் செய்யலாம் என்று இருக்கிறோம் என்று சொன்ன பிறகுதானே,

அவளை, அவன் சரியாகப் பார்த்ததே!

வெளேரென்ற நிறம்! அறியாத்தனம் நிறைந்த பெரிய கண்கள்! மொட்டுப் போலக் குவிந்த உதடுகள்! என்னவோ, அவனுக்காகக் காத்திருப்பன போன்ற தோற்றம்!

அதிலும், அந்த அறியாத்தனம் நிறைந்த கண்களே, அவனைப் பெரிதும் கவர்ந்தன. இவளை , அவனது விருப்பத்துக்கு ஏற்ப மாற்ற முடியும் என்ற நம்பிக்கை உண்டாகிவிட, அவளோடான திருமணத்துக்குத் தலையாட்டினான்.

ஆனால், யார் விருப்பத்துக்கும், நீலிமா மாறுவாள் என்று, அவனுக்கு ஏன் தெரியாமல் போயிற்று?

தெரிந்திருந்தால், இந்த அளவுக்குக் கற்பனை செய்திருக்க மாட்டானோ?

மாறிவிட்டாளே! ஆனால், அவனோடு எங்கெல்லாம் சுற்றினாள்?

இதோ, இந்தக் கடற்கரைக்குக் கூட வந்திருக்கிறாள்! சூரியன் மேற்கே மறைவதை, அவன் தோளில் சாய்ந்தபடி, அவனோடு சேர்ந்து ரசித்திருக்கிறாள்!

இப்போது, அந்த இந்திரேசன் தோளில் சாயும்போது, அந்த நினைவு வராமலா, போகும்? சஞ்சலம், சங்கடம் தோன்றாதா?

ஆனால் . . . அவளுக்குத் தோன்றாதோ? தோன்றவே இல்லையோ?

தோன்றியிருந்தால், "நீங்கள் பரிசளித்த வைர மோதிரம், எனக்கு ரொம்பப் பிடித்தமானது, தேவ்! என் விரலுக்கு ரொம்ப அழகாக இருக்கும். இந்தர் கூட, அப்படித்தான் சொல்கிறார். என் விரலுக்கென்றே செய்த மாதிரி இருக்கிறது என்கிறார். அதை, நானே வைத்துக் கொள்ளலாமா? நீங்கள், திருப்பிக் கேட்க மாட்டீர்கள் என்றுதான், இந்தரும் சொன்னார் . . . ப்ளீஸ், தேவ்!" என்று, பட்டாம்பூச்சியைப் போல, இமைகளைக் கொட்டிக் கொட்டி . . . அதே போல, கூடவே, மூச்சுக்கோர் "இந்தர்" போட்டு, அவளால் எப்படிக் கேட்க முடியும்?

அதே கள்ளமற்ற, குழந்தைப் பார்வை!

அல்லது, அது போலத் தோன்றும்படியாகப் பயின்ற பார்வையா? அவனுக்குத்தான் கண்டுபிடிக்கத் தெரியவில்லையா? பெரிதாகக் கெட்டிகாரத்தனமாகத் தொழில் செய்வதாகப் பெருமை வேறு பட்டுக்

கொள்வானே!

அவளையும் அழைத்துப் போய் வாங்கிய மோதிரத்தின் விலை வேறு நினைவில் வந்து உறுத்தியது.

அடுத்தவன் போட்ட நிச்சயதார்த்த மோதிரத்தைத் திருப்பிக் கொடுக்காமல் வைத்துக்கொள் என்று, அந்த இந்திரேசனும்தான், சொந்த மனைவியிடம் எப்படிச் சொன்னான்?

அவனுக்கும் அப்படித்தானா? மோதிரத்தின் மதிப்புதான் முக்கியமா?

ஏற்றுமதி விரிவாக்கத்துக்காக, வெளி நாட்டில் சில விற்பனை மையங்களோடு பேச்சு வார்த்தை நடத்த, அவள் கிளம்பியபோது, கண்ணீருடன் விடை கொடுத்த பெண்! நாற்பது நாட்களில் திரும்பி வரும்போது, அடுத்தவன் மனைவியாக நிற்க . . . எப்படி முடிந்தது?

அப்படி நின்றாள் என்பது, சத்தியமான உண்மை!

அதே போன்ற சத்தியமான உண்மைதான், அவனுக்கும், நீலிமாவுக்கும் நடந்த நிச்சயதார்த்தமும்.

மூன்று தலைமுறையைச் சேர்ந்த பல தொழிற் குடும்பங்கள் மொத்தமும் கூடியிருந்து நடத்திய நிச்சயதார்த்தம்!

மூன்று தலைமுறைகள் என்றபோதும், எண்ணிக்கையில், அப்படி ஒன்றும் அதிகம் கிடையாது. ஒவ்வொரு குடும்பத்துக்கும், ஒன்றிரண்டு பிள்ளைகளே!

அதிகப் பிள்ளைகள் பெற்றால், பங்கு பிரிக்கையில், அந்தக் குடும்பத்து அங்கத்தினரின் சொத்து மதிப்புக் குறைந்து போகுமாம்! அவனுடைய குடும்பத்தில் கூட, அவனுடைய தமக்கையும், அவனுமாக இரண்டே பேர்தான்.

அவ்வாறு குறையாமல் பார்த்துக் கொண்டதில், குஞ்சு குளுவானுக்குக் கூடக் குறைந்த பட்சமாக பலகோடி ரூபாய் மதிப்புக்கான சொத்து இருந்தது!

புதுப் புது தொழில்கள், அவற்றின் கிளைத் தொழில்கள் தொடங்கி, அததை  மேலும் விரிவுபடுத்துவார்கள். அப்படித் தொடங்கும்போது, உரிய பங்குதாரர்களின்  குடும்பங்களுள் திருமண உறவை ஏற்படுத்தி, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பையும், வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

எதிர் எதிராகத் தனித் தனியே தொழில் நடத்தி, எதிரிகளாகவும்

மாறக் கூடிய வாய்ப்பு மறைந்து போவதோடு, ஒருவருக்கொருவர் உதவி செய்வதால், இருவரின் தொழில்களும் ஓகோ என்று வளர்ச்சி பெறும் அல்லவா?

எல்லாம் சரிதான். அவனும், அதைத் தப்பாக ஒன்றும் கருதவில்லை.

அடிக்கடிப் பார்த்துப் பழகியவர்கள். சொந்த வாழ்விலும், யாரோடும் அநுசரித்துப் போவது கடினமாக இருப்பதற்கின்றிக் கிட்டத்தட்ட ஒரே விதமான வாழ்க்கை முறை!

இதென்ன . . என்று, ஆணோ, பெண்ணோ, பழக்கமற்ற எதற்கும் முகம் சுளிக்கத் தேவையிராது! அக்கம் பக்கத்திலேயே பெரிய பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு, எல்லோரும், அவர்களுக்குத் தெரிந்த வகையில், சந்தோஷமாகவே இருந்தார்கள்!

அவனுடைய தமக்கை ரூபமதி கூட, அப்படித்தான். அவர்கள் இருவரையும் போலவே, அவளுக்கும் இரு பிள்ளைகள். இப்போது, துறுதுறுவென்று இருக்கும் அவர்கள் வளர்ந்தபின் எப்படி இருப்பார்களோ?

இவர்களுள், நரேந்திர தேவன், சற்று வேறு விதமாகச் சிந்திப்பான். தனக்குப் பொருத்தமாக, நீலிமாவை மாற்றி விடலாம் என்கிற நம்பிக்கையாலேயே, அவளை மிகவும் பிடித்தும் போயிற்று!

ஆனால் . . வெளிநாடு சென்றதும், தினமும் நடந்த உரையாடல், மெல்லக் குறைந்து, அடியோடு நின்றும் போயிற்று!

அதை, அவன் பெரிதாக எண்ணவில்லை. அவனே, ஒரே அலைச்சலில் இருந்ததால், நின்று, நிதானமாய், வருங்கால மனைவியிடம் பேசுவதற்கு, அவனாலும் இயலவில்லை!

எண்ணிச் சென்றதை விட, மேலே பத்து நாட்களை, மேலே நாடுகளில் வேலையிலேயே கழித்துவிட்டு, வெற்றியோடு ஓடி வந்தால், விமான நிலையத்திலேயே, அவனுக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது.

தாங்க மாட்டாமல், ஏன், ஏன் என்று, நீலிமாவிடம் ஓடினான்.

“அப்பாவும், தாத்தாவும், கூடவே, உங்கள் தாத்தாவும், இதுதான் நல்லது என்றார்கள். அதனால்தான்! முன்னே கூட, இவர்கள் எல்லோரும்தானே, நமக்கு நிச்சயம் செய்தார்கள்?” என்றதிலேயே, இந்திரேசனோடான அவளது திருமணம் நியாயப் படுத்தப் பட்டுவிட்டதாக, அவளுக்கு எண்ணம்.

தொடர்ந்து, அவளுக்கு மிகவும் முக்கியமாகத் தோன்றிய மோதிர விஷயத்தை, மறக்காமல் அவனிடம் கேட்டாள் நீலிமா!

அங்கிருந்து, தாத்தாவிடம் போனான். அவனுக்குக் காரணம் தெரிந்தாக வேண்டியிருந்தது! நல்லவேளையாக, இன்னோரிடம் அலைய நேராமல், அவனுடைய தந்தையும், அங்கேயே இருந்தார்!

“ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்று அவர்களிடம் பாய்ந்தான், நரேந்திரன்.

“நீதான் காரணம்!” என்றார்கள் இருவருமாக.

திகைத்துப்போய், “நானா? நான் எப்போது, நீலிமாவை மணக்க மறுத்தேன்?” என்று வினவினான் சின்னவன்.

“தம்பி, நீ முதலில் என்ன தொழில் தொடங்கினாய்? மிக்சிக்காக சின்ன மோட்டார் மட்டும்தானே? நீலிமா வீட்டில், மிக்சி ஜார்களைச் செய்தார்கள். , இரண்டும், ஒன்றோடு ஒன்றாக ஒத்து வளரும் என்று, உங்கள் ஜோடியை முடிவு செய்தோம். ஆனால், நீ என்ன செய்தாய்? எங்கேயோ ஒரு சினேகிதனுக்கு உதவியோடு, உனக்கும் லாபம் பார்ப்பதாகச் சொல்லி, சைஸ் வாரிக்கு மோட்டார் செய்து, அதை நேராகவே விற்பதற்கு, வெளி நாட்டில் விற்பனை மையங்களும் ஏற்பாடு செய்துவிட்டு வந்து நிற்கிறாய்! இதுவும் மிக்சியும் இணைந்து நிற்க முடியுமா? இப்போது, மிக்சி “பாடி” செய்கிற இந்திரேசன் என்றால், இரண்டும் பொருந்திப் போகும் ! என்ன, அவளும் என் பெண் வயிற்றுப் பேத்திதானே? நல்லபடியாக வாழட்டும் என்று, இந்த ஏற்பாடு செய்தோம்.

“இப்போது, உன்னையும் நாங்கள் சும்மா விட்டு விடவில்லை. உன் சுதாராணி அத்தையுடைய பெண் சுனிலா இல்லை, அவளை உனக்காகப் பேசி முடித்துவிட்டோம். சுதா குடும்பமும் தொழிற்சாலை மோட்டார்கள் பொருத்துகிற தொழில்தான். வயதும், நல்ல பொருத்தம்! வாரக் கடைசியில் நல்ல நாள் இருக்கிறது. அன்றே மோதிரம் போட்டு நிச்சயவிழாவை நடத்திவிடலாம்! ஒவ்வொருவராகக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டாம் என்று, பத்திரிகைக்குக்கூடச் செய்தி அனுப்பிவிட்டேன். “ என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார் தாத்தா!

தாத்தாவுக்கு வயதாகி விட்டதால், உணர்ச்சி மழுங்கிவிட்டதோ என்று, நரேந்திரனுக்கு சந்தேகம் வந்தது.

எனவே, கேள்வியாகத் தந்தையைப் பார்த்தான்.

அவருக்கு என்ன புரிந்ததோ? “நீலிமா அளவு, சுனிலா நிறம்

இல்லைதான். ஆனால், நம் அழகு நிலையங்கள்தான், பெண்களை மின்னல் போலப் பளிச்சிட வைத்து விடுகின்றனவே! அத்தோடு, மூக்கு முழி எல்லாம், சுனிலாவுக்குத்தான் அதிக அழகாக இருப்பதாக, உன் அக்காவும், அம்மாவும் அபிப்பிராயப் படுகிறார்கள். எனவே, இதுவும் நல்லதற்குத்தான் என்று வைத்துக் கொள், நரேந்தர்!" என்றார் அவர்.

இவர்களுக்கு எல்லாம், மனதைப் பற்றிய எண்ணமே இராதா?

"ஆனால், இதில் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறதே, அப்பா!" என்றான் மகன், சற்றுக் கவலையோடு.

சற்றே மிரண்டு, "என்னப்பா?" என்று, பெரியவர்கள் இருவரும் சேர்ந்து கேட்டார்கள்.

இதுவும் தப்பாகிப் போனால், இதே போல இன்னொரு பெண்ணுக்கு எங்கே போவது என்று, அஞ்சினார்கள் போல! அத்தோடு, அவர்களே கொடுத்த பத்திரிகைச் செய்தியை என்ன செய்வது?

"அந்த மோதிரம்! நீலிமா, அதைத் தர மாட்டாள் போலத் தெரிகிறது. மூன்று லட்சம் ரூபாய்! இன்னொன்று வாங்க வேண்டுமே!" என்றான் வருத்தமாக.

இதுவாவது, இவர்களுக்குப் புரியுமா?

புரிந்தது. ஆனால், வேறு விதமாகப் பதில் வந்தது.

"மூன்று லட்சம் என்றதும், நீலிக் குட்டிக்கு அந்த மோதிரம் பிடித்துப் போய்விட்டது போல! " என்று செல்லமாகச் சொல்லிச் சிரித்துக்கொண்டார் தாத்தா.

"போகட்டும்ப்பா. அடுத்த மோதிரத்துக்கு வேணுமானால், நான் பணம் தருகிறேன். இரண்டாம் தடவையாக, நீ செலவு பண்ண வேண்டாம்."

கசந்து போயிற்று அவனுக்கு!

சற்று நேரத்திலேயே, அந்த சுனிலா ஃபோன் செய்தாள்.

வரப்போகும் அவர்களது திருமணத்தைக் கொண்டாட, ஓபராய்க்கு டின்னர் சாப்பிடப் போகலாம் என்று கூப்பிட்டாள்.

வரப்போகும் திருமணம்!

சுனிலாவும் முடிவே செய்துவிட்டாள்!

இரண்டு மாதங்களாக, இன்னொருத்தியை மணப்பதாக இருந்ததே, மனதை அவளுக்குக் கொடுத்து விட்டிருப்பானோ என்ற கவலை . . சிறு கலக்கம் கூடக் கிடையாது!

அவன் மனதில், தனக்கு இடம் இல்லாவிட்டால் . .என்று யோசிக்க வேண்டாமா?

அதற்கான அவகாசம் கொடாமல், அவனாகத் தொடர்பு கொள்ளும் உரிமை தராமல், எங்கே போவது என்று கூட, அவளே முடிவு செய்து, சொல்கிறாள்!

பத்திரிகைச் செய்தி கூட, இவள் வீட்டு ஏற்பாடாகவே இருக்கலாம்!

ஆனால், சுதாராணி அத்தையுடைய மகள், இந்த சுனிலா!

சில சமயங்களில், அவனுடைய தாய் நடத்தும் "கிட்டீஸ் பார்ட்டி"யில் கலந்து கொள்வதற்காக, சுதா அத்தை அவர்கள் வீட்டுக்கு வந்தது, உண்டு. மாடியில், அம்மாவின் பார்ட்டி ரூமுக்கு அவள் சென்று, கதவை மூடிய பிறகும், அவளது உடம்பில் அடித்திருக்கும் "பெர்ஃப்யூம்" வாசனை மறைய, மேலும் அரை மணி நேரமாவது, ஆகும்!

விலை உயர்ந்ததுதான். சுண்டு விரலில் பாதியே அளவுள்ள அந்த "பெரிஃப்யூ"மின் விலை, ஏழாயிரம் ரூபாய் என்று , அவனுக்கும் தெரியும்! பட்டும் படாமலும், லேசாகத் தடவிக்கொண்டால், மனதை மயக்கும்! அதையே, அளவு மீறிக் கொட்டிக்கொண்டால்?

மூச்சு முட்டிப் போய், அதிலிருந்து தப்புவதற்காகத் தோட்டத்துக்கு ஓடிப் போவான், நரேந்திரன்!

இப்போது, அவள்தான் மாமியாராமா? கஷ்டகாலம்தான்!

தொழில் ரீதியாக சந்திப்பு ஒன்று, தாஜில் இருப்பதாகச் சொன்னான் அவன்.

மறுப்பைப் புரிந்துகொண்டால் நல்லது என்ற எண்ணம் அவனுக்கு.

ஆனால், சுனிலா இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவள் ஆயிற்றே!

தொழில் முக்கியம். எனவே, அவர்கள் இருவரும் சேர்ந்து வெளியே செல்வதை, மறுநாள் வைத்துக் கொள்ளலாம் என்றாள்.

அந்த மறுநாளும், அவனுக்கு வசதிப்படுமா என்று, ஒப்புக்குக் கேட்கக் கூட, சுனிலாவுக்குத் தோன்றவில்லை!

அவனை என்ன, வெறும் தலையாட்டி பொம்மை என்று எண்ணினாளா? அதுவும், வெறும் தலையாட்டி பொம்மை இல்லை! சம்பாதித்துப் போடும் அடிமை பொம்மை!

ஆனால், தந்தையும் தாத்தாவுமே அவனுக்கு மனம் என்று ஒன்று

உண்டு என்று எண்ணாதபோது, சும்மாப் பார்ட்டிகளிலும், விழாக்களிலும் மட்டுமாகப் பார்த்து, வெறுமனே “ஹாய், பை” சொல்லும் ஒருத்திக்கு, அந்த அக்கறை இருக்கும் என்று எதிர்பார்ப்பது , சற்று அதிகப்படிதான்!

சற்று யோசித்துவிட்டு, பெற்றவளிடம் பேச, நரேந்திரன் முடிவு செய்தான்.

ஆனால், அன்னையோடு கூட, அந்த வீடுகளில், அப்படி ஒன்றும் இலகுவாகப் பேசிவிட முடியாது. அவளுக்கும் ஆயிரம் வேலைகள் இருக்கும்!

ஜிம், கிட்டீஸ் பார்ட்டி, சீட்டுக் கச்சேரி, கலை நிகழ்ச்சிகள், பிறப்பு, சாவுகள், அவை தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள், இவைகளுக்காகத் தயாராவது, இன்னும் முக்கியமாக அழகு நிலையங்கள்!

இத்தனைக்கும் இடையில் அவளுக்கு நேரம் இருந்தால் மட்டுமே, குடும்பத்தினர் சரோஜினியைப் பார்க்க முடியும்!

ஆனால், இப்போது அதையெல்லாம் விசாரித்து, நேரம் காலம் பார்த்துக் காத்துக்கொண்டு இருக்க முடியாது என்று, நரேந்திரன் நேராக, வீட்டில் சரோஜினி இருக்குமிடம் நோக்கிச் சென்றான்.

அவளது பகுதியின் பார்ட்டி ஹாலைத் திறக்கும்போதே, கும்மென்று இனிமையாக லாவண்டர்  மணம் வீசியது. அவனுடைய தாயாரிடம், அது ஒன்று! முகம் சுளிக்கவோ, மூச்சு முட்டவோ  வைக்கும்படியாக எதுவும் இராது!

இதமான வாசனையை நுகர்ந்தவாறே நடந்தால், “சார், சார் . . “ என்று சரோஜினியுடைய பிஏ ஓடி வந்தாள். “மேடம் வெளியே கிளம்பிக்கொண்டு இருக்கிறார்கள், சார். செல்வி ஸ்ரேயாவின் நாட்டிய அரங்கேற்றம். மேடம் வாழ்த்திப் பேச இருக்கிறார்கள்! அதனால் . . “ என்று அவன் பின்னோடு ஓடி வந்தாள்.

கிட்டத்தட்ட வழி மறிக்கிற நிலை!

இந்த எடுபிடிக்கு எவ்வளவு திண்ணக்கம் . .என்று ஆத்திரத்துடன் நரேந்திரன் ஏறிடும்போதே, அறைக் கதவு திறந்து, சரோஜினி வெளியே வந்தாள்.

வரும்போதே, “மாலி, என் கைப்பையில் எல்லாம் எடுத்து வைத்தாயிற்றா? முக்கியமாகப் பேச வேண்டிய பேச்சுக் குறிப்பு, கண்ணாடி, ஒப்பனைப் பொருட்கள்? அப்புறம், காரைக் கொண்டுவரச் சொல்லிவிட்டாயா? . .ஹாய் நரேன் டார்லிங், நீ எங்கே, இங்கே?

நேரமாகிறது. வரட்டுமா, கண்ணா?” என்று பேசியவாறே, வெளி வாயிலை நோக்கி நடந்தாள்.

நடையில் ஒரு வினாடித் தயக்கம் கூட இல்லை!

வெளிநாடு போய் வந்த மகன், என்ன சொல்ல வந்தானோ, என்னவோ, என்று, அது பற்றிய யோசனை கூட, முகத்தில் தெரியவில்லை!

பாதி வழியை மறைப்பது போலக் கூட நடந்தபடி, “உங்களிடம் முக்கியமாகப் பேச வேண்டும், அம்மா!” என்றான் மைந்தன் அடிக் குரலில்.

நல்லவேளையாக, சரோஜினியின் கைப்பையோடு, எடுபிடி மாலி, லிஃப்டுக்குள் சென்றுவிட்டாள். இல்லாவிட்டால், அவள் பார்க்கக் கெஞ்ச நேர்ந்திருக்கும்!

கையைத் தூக்கி, மகன் கன்னத்தில் தட்டினாள் சரோஜினி. “பேசலாமே! இப்போது நேரமில்லை. இரவிலும் . .ஊகூம், முடியாது. அரங்கேற்றம் முடிந்து, பார்ட்டி இருக்கிறது. காலையில், நீச்சல் முடிந்து வந்ததும், காலை உணவின்போது பேசுவோம். பைடாக் கண்ணா!” என்றவாறே, அவள் லிஃப்டுக்குள் கென்று கதவை மூடிக்கொள்ள, மகன் தனியே, வெளியே நின்றான்!

மூச்சில் அனல் பறந்தது, அவனுக்கு!

பெற்ற மகனின் பிரச்சினையை விட, ஏதோ ஓர் அரங்கேற்றமும், அடுத்துத் தொடரும் பார்ட்டியும்தான் முக்கியமா?

அல்லது, அவன்தான் என்ன, பத்து வயதுச் சிறுவனா, சின்னச் சின்னப் பிரச்சினைக்கெல்லாம் அன்னையிடம் போய் நிற்பதற்கு?

தமக்கையிடம் போகலாமா என்று ஒரு தரம் யோசித்துவிட்டு, அந்த எண்ணத்தை உடனே கைவிட்டான்.

ரூபா மட்டும் என்ன செய்து விடப் போகிறாள்?

இப்போதே, இரண்டு பிள்ளைகளுக்கும், தனித்தனி செவிலிகளை அமர்த்தி, அவர்கள் பொறுப்பில் மக்களை விட்டாயிற்று! கூடவே, அவளுக்கும் இந்த அரங்கேற்றத்துக்கு அழைப்பு வந்திருக்கும்! இதுதான் முக்கியமாகவும் இருந்திருக்கும்!

இருக்கட்டும். பொறுமையாக இன்னொரு முயற்சி செய்து பார்த்துவிட வேண்டும்!

கோபப் படக் கூடாது. இப்படியே வளர்ந்து, வாழ்ந்து பழகிவிட்டதால்,

உணவு, தூக்கம் போல, இதுவும் தவிர்க்க இயலாத முக்கியமாகப் படுகிறதோ என்னவோ?

காலையில், எப்படியாவது தாயிடம் பேசித் தன் மனநிலையை உணர்த்த வேண்டும்!

கல்யாணமாவது? மண்ணாங்கட்டியாவது? பெண் என்ற வார்த்தையே வெறுப்பாக இருக்கும் இப்போது, அவனை நிம்மதியாகத் தொழில் நடத்த விட்டாலே போதும்!

காலையில் , நரேந்திரன் சீக்கிரமே எழுந்துவிட்டான். தன் வேலைகளை முடித்துக்கொண்டு, நீச்சல் முடிந்து வரும் தாயாருக்காகக் காத்திருந்தான்.

நல்ல வேளையாக, அங்கே ஏதும் கூட்டம் போடாமல், சரோஜினி சீக்கிரமே வந்துவிட்டாள்.

முன் தினம், வழக்கத்துக்கு மாறாக, முன் அனுமதி இன்றியே, மகன் தன்னைத் தேடி வந்தது, அவளுக்குச் சற்று உறுத்தலாகவே இருந்தது.

கல்லூரிக் காலத்திலிருந்தே, நரேன் சற்று வேறு மாதிரிதான். தொழிலை வெற்றிகரமாகவே நடத்திபோதும், வீட்டுப் பெரியவர்களைக்கூட, உள்ளே புகுந்து பார்க்க விட்டதில்லை.

“நஷ்டம் வந்தால், ஏன் என்று கேளுங்கள்! லாபம் காட்டும்போது, ஒரு தப்புத் தண்டா இல்லாமல் நடத்தும்போது, அதற்குள்ளே யார், என்ன மூக்கை நுழைப்பது? நீங்கள், உங்கள் தொழில் வேலைகளை மட்டும் பாருங்கள், தாத்தா! அதிலே நஷ்டம் வந்தால், பழைய காலம் போல, ஒழியட்டும் என்று, வானப் பிரஸ்தத்துக்கு அனுப்பிவிடப் போகிறார்கள், ஜாக்கிரதை!” என்பான்.

“ஒழியட்டும் என்று இல்லையடா. அந்தக் காலப் பெரியவர்கள், காட்டுக்குத் தவம் செய்யப் போனார்கள்.” என்று சொன்னால், ஒத்துக் கொள்ளவே மாட்டான்.

“எல்லாம் கதை! அந்தக் காலத்தில், காட்டில் என்ன வசதி? ஒன்று, விலங்குகள் அடித்துத் தின்னும். அல்லது, காட்டுத் தீயில் மாட்டிச் சாவார்கள். படித்துப் பாருங்கள், அப்பா! மகாபாரதத்தில், கடைசியில், திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி எல்லோரும் எப்படிச் செத்தார்கள், என்று, ஒழுங்காகப் படித்துப் பாருங்கள். பேரனுக்குப் பட்டம் கட்டிவிட்டுப் பாண்டவர்களும், காட்டுக்குச் சாகத்தானே, போனார்கள்? இப்படியெல்லாம் துரத்திச் சாகடித்துவிட்டு, என்னமோ அந்தக் காலத்திலே வயதானவர்களைப் போற்றிப் பாதுகாத்த மாதிரியும்,

இப்போது பாசமே இல்லாமல் முதியோர் இல்லத்துக்கு விரட்டுகிற மாதிரியும், என்ன மாதிரிக் கதை விடுகிறார்கள்! ரொம்பவும் அநியாயம்!" என்று, ஒரே பிடிலேயே நிற்பான்!

பதில் சொல்லத் தெரியாமல், முழிப்பது, வீட்டுப் பெரியவர்களாகத்தான் இருக்கும்! இப்போது, பையனிடம் என்னமாதிரி, முழிக்க நேருமோ?

யோசனையோடு சரோஜினி சாப்பாட்டு அறைக்குள் செல்லும் போதே, மகனும் வந்துவிட்டான்.

பிள்ளையின் கண்களைச் சந்தியாமலே, டோஸ்ட் செய்த ரொட்டித் துண்டு ஒன்றை எடுத்து, பிய்த்தபடி, "வா. நீயும் சாப்பிடு." என்று அழைத்தாள் தாய்.

அருகே வந்து, அன்னையின் முன் இருந்தவற்றை ஆராய்ந்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினான் மைந்தன்.

"இந்த நாலைந்து காய்கறித் துண்டுகளையும், காய்ந்த ரொட்டித் துண்டுகளையும் சாப்பிட்டுப் பட்டினி கிடப்பதற்காகவா, அப்பா இவ்வளவு சம்பாதிக்கிறார்? அநியாயம் செய்கிறீர்களே!" என்றான் சிறு கவலையோடு.

"இப்படிச் சாப்பிடுவதால்தான், இடுப்பில் அதிகப்படியாகப் பத்து கிராம் சதை கூடப் போடாமல், இன்னமும் ஒட்டியாணம் அணிய முடிகிற மாதிரி, சிக்கென்று இருக்க முடிகிறது! " என்றாள் பெற்றவள் பதிலுக்குப் பெருமையாகவே.

"இடுப்பில் அதிகச் சதை இல்லாமல் இருக்கலாம். ஆனால், கன்னத்தில் இருந்த கதுப்பையும் காணோமே! அங்கே கால்கிலோ அரிசி போட்டு வைக்கலாம் போல, ஒட்டி அல்லவா கிடக்கிறது?" என்றான் மகனும் விடாமல்

"ஏய், என்னடா ஒரேயடியாக என்னை வாருகிறாய்? சொல்ல வந்ததைச் சீக்கிரம் சொல்லு. காலை உணவை முடித்துக்கொண்டு, நான் மகளிர் மண்டலிக்குப் போக வேண்டும். அங்கே ஒரு கட்டாயக் கல்யாணம் வழக்கு வருகிறது. " என்றாள் அன்னை.

நல்ல வாய்ப்பு! மகன் விடுவானா?

"கட்டாயக் கல்யாண வழக்குக்கு, அங்கே வரை போவானேன், அம்மா? நம்

வீட்டிலேயேதான், அப்படி ஒன்றைச் செய்வதாக ஏற்பாடு நடக்கிறதே!"

பையன் எங்கே வருகிறான் என்ற, சரோஜினிக்குப் புரிந்து போயிற்று.

ஆனால், அவனது மறுப்பு, அவளுக்குப் புரியவும் இல்லை.

இதை விடப் பொருத்தமான பெண் எங்கே கிடைப்பாள்?

மகன், இதற்கு ஒரு கேள்வியாலேயே பதில் சொன்னான். “இந்த சுனிலாவை விட அதிகத் தொழில் பொருத்தமாக இன்னொருத்தி கிடைத்தால், அப்போதும் மாற்றுவீர்களா, அம்மா?”

“அப்படிக் கிடைக்காது, கண்ணா. அவள் கிடைத்ததே அதிருஷ்டம் என்கிறார், அப்பா. வெளி நாட்டு விற்பனை எல்லாம், நீ தனி ஆளாகப் பார்ப்பதை விட, இனிப் பிரம்மாதமாக நடக்குமாம். நீலிமாவுக்கு இந்திரேசனும், ரொம்பப் பொருத்தம். உனக்கும் வசதியாக, இந்தக் குடும்பத்திலும்  பெண் தயாராக . . .”

“நல்ல வேளை, தாயாராக இல்லை ! “ என்று கிண்டல் போலத் தன் மறுப்பைக்  காட்டினான் நரேந்திரன்.

இலகுவாகவே எடுத்து, “உதை விழும்!” என்று செல்லமாக வைதாள் அன்னை!

“மாலையில் மோதிரம் வாங்கப் போவதாக, சுனிலா சொன்னாள். அப்படியே ஹோட்டலுக்குப் போகிறீர்களாமே! சந்தோஷமாகப் போய் வாருங்கள் . . . அடடா, நேரமாகிவிட்டதே! “ என்று, டிஷ்யூவால் கையைத் துடைத்தபடியே எழுந்து, “மாலீ, ஏய் மாலீ என் கைப்பையில் . . “ என்று, தன் எடுபிடிக்கு உத்திரவிட்டபடியே சென்ற தாயை வெறித்துப் பார்த்தான் பிள்ளை!

மோதிரம்! அதன் பிறகு ஹோட்டலாம்! யார் நேரத்தை, யார் திட்டமிடுவது?

அன்று மாலை மோதிரம் வாங்குவதற்காக, முன்னதாகப் பார்லருக்குப் போய்த்  தன்னை அலங்கரித்துக்கொண்டு வந்த சுனிலாவால், நரேந்திரனோடு தொடர்பு கொள்ளவே முடியவில்லை.

அவளால் மட்டுமல்ல. அவனுடைய பெற்றோர், உற்றார், யாராலும்!

# அத்தியாயம் -2

அவனது கொதிப்பும், கோபமும் ஓரளவு அடங்குவதற்கு, மூன்று நாட்களுக்கு மேலேயே ஆகிவிட்டது.

ஊருக்கும் உறவுக்கும் போக்குக் காட்டுவதற்காக, அங்கும் இங்குமாக அலைந்து திரிந்துவிட்டு, அவன்  சென்னையை அடைந்தபோது, கிட்டத்தட்ட அமைதி அடைந்திருந்தான் என்றே சொல்லலாம்!

ஆனால், இங்கே வந்து, வீட்டைத் திறந்து, உள்ளே சென்றதும் மறுபடியும் கோபம் கொதித்துக்கொண்டு கிளம்பத்தான் செய்தது.

இந்த வீட்டை அவன் எதற்காக வாங்கினான்? வீடு என்பதை விட, சிறு இரட்டைப் படுக்கையறை ஃப்ளாட் என்றால் பொருத்தமாக இருக்கும். இதையும், இந்தச் சின்ன காரையும், ஏகப்பட்ட கற்பனைகளோடு வாங்கியது நினைவு வந்து, இன்னமும் எரிச்சலை அதிகரிக்கத்தான் செய்தது.

ஆனால், அவன் ஒன்றும், தோற்று அடங்கிவிடவில்லை., கோலுக்கு ஆடும் குரங்காய், யார் விருப்பத்துக்கும் ஆடவுமில்லை! உரிய பதிலடி கொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறான்.

அப்படிப் பார்த்தால், ஜயித்தவன் அவனே!

இன்னமும் குமுறிக் கொண்டிருந்தால், அவன் எப்படி, வென்றவன் ஆவான்?

யார் குறுக்கீடும் இல்லாமல் நடத்த வேண்டும் என்று, அவன் தனியாகத் தொடங்கிய தொழில் இருக்கிறது., கார், வீடு எல்லாம் இருக்கின்றன. அப்புறம் என்ன?

எதற்காக இப்படி ஒரு முயற்சி செய்தான் என்று எண்ணிப் பார்க்கையில், அவனும் தோற்றவன்தான். ஆனால் இதையே, காலம் கடக்குமுன் தப்பித்ததாகவும், கொள்ளலாமே!

அந்த வகையில் பார்த்தால், வெற்றியடைந்தவன் அவன் மட்டுமேதான்.

உள்ளே புகையும் ஏமாற்றமும், அவமானமும் வலுவிழக்கும்போது, இந்த வெற்றியை, அவன் முழுமையாக உணர முடியும். உணர்வான்.

காலப் போக்கில் அது நடக்கும்வரை, பொறுமையாகக் காத்திருக்க

வேண்டும்!

சீக்கிரமே தன்னைச் சீர்ப்படுத்திக் கொள்ளும் முயற்சியாக, நடந்தே சென்று கடற்கரையில் வெகு நேரம் அமர்ந்திருந்தான்.

மாலை மயங்கி, இருள் பரவப் பரவ, இதயத்தைச் சுற்றி உள்ள இறுக்கங்கள் மெல்லக் குறைந்து, பளு குறைந்தாற்போல ஆகத் தொடங்கியது. பொதுவாகக் கடல் காற்றுக்கு அந்தத் தன்மை உண்டு என்றாலும், சென்னைக் கடற்கரைக்கு, அது ஒரு சிறப்பு என்று அவனுக்குத் தோன்றும்!

பழைய திட்டங்களின் நினைவில், முதலில் வருத்தமாகவே இருந்தபோதும், மெல்ல மெல்ல மனது, அடுத்துச் செய்ய வேண்டியன பற்றி யோசிக்கலாயிற்று.

தீனாவை, வெளி நாட்டு வேலைக்கு அனுப்ப வேண்டும். இங்கே, இவன் பொறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வளவ தூரம் வந்து, யாரும் வெளிப்படையாக அவனைத் தேடப் போவது இல்லை. அவனது எச்சரிக்கைக்குப் பிறகு, அப்படித் தேடி வரத் தைரியம் இருக்காது. ஆனால், அவர்களைப் பற்றிய, அவனது அபிப்பிராயம் சரி என்றால், இப்போதைக்கு, எதுவுமே நடக்காத மாதிரியே காட்டிக் கொள்வார்கள்.

ஆனளால், முன்னைப் போல, அவனுக்கு ஓர் அபிப்பிராயமே கிடையாது என்பது போல நடத்த மாட்டார்கள்! அந்த அளவுக்குப் பாடம் கற்றுக்கொடுத்தாகி விட்டது என்று சிறு கர்வத்துடனேயே நினைத்தாலும், உள்ளூர எரிந்த நெருப்பு அணைய மறுத்தது.

“வெந்து தணிந்தது காடு” என்ற பாரதியாரின் வரிகளைப் போல, அங்குள்ள உறவு எல்லாமே அழிந்துவிடுமா? அவனது சீற்றம், அது வரை தீராதோ?

வழியில், ஒரு சிறு ஹோட்டலில் இரவு உணவை வாங்கிக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அதிகம் நடந்ததாலோ, என்னவோ, நல்லவேளையாகப் பசித்தது.

நடையின் பயனாகத் தூக்கமும் வந்தது.

மூன்று நாட்களுக்குப் பிறகு, அன்று ஒன்பது மணிக்கே, அவன் படுத்ததோடு அல்லாமல், அயர்ந்து தூங்கியும் விட்டான்.

ஆனால், இரவு முழுவதும் அமைதியாகத் தூங்கவும், ஒருவருக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா?

சுமார் பத்தரை மணிக்கு, அவனது ஃப்ளாட்டின் அழைப்பு மணி, ஒரு தரம் ஒலித்தது.

என்னதான் அயர்ந்து உறங்கினாலும், அவன் தன்னை மறந்து தூங்குவது கிடையாது.

விழிப்புத் தட்டிப் புரண்டு படுத்தபோது, ஒரு கணம் எங்கே இருக்கிறோம் என்பதே, அவனுக்குப் புரியாமல் போயிற்று.

உடனேயே சுற்றுப்புறம் தெரிந்து போகவும், இங்கே யார் நம்மைக் கூப்பிடப் போகிறார்கள், பக்கத்து, எதிர் ஃப்ளாட்டுக்காக இருக்கும் என்று தெளிவற்று எண்ணியவாறே, மறு புறம் திரும்பிப் படுத்து, மறுபடியும் உறங்கிவிட்டான்.

“ஏய், சொன்னேன் அல்லவா? இதுவும், தூக்க மாத்திரைக் கேஸோ, என்னவோ? எல்லாம், உன்னால் வந்தது!” என்று, மேடை ரகசியமாக, ஒரு குரல் குறைப்பட்டது, கனவு போலத் தோற்றியது, அவனுக்கு!

கனவுதான் என்று, அவன் மீண்டும் ஆழ்ந்த உறக்கத்தினுள் புதையும்போது, அழைப்பு மணி மறுபடியும் அழுத்தப்பட்டது!

இந்த முறை, இரண்டு மூன்றுதரம் தொடர்ந்து, ஓர் அழுத்தத்துடன் விடாமல் அழுத்தினார்கள்.

“நன்றாகத் தூங்குகிறவனை எழுப்பினாயே என்று கோபப்பட்டால், உள்ளதும் கெட்டுவிடாதா? வாடி, போய்விடலாம்.”

“என்னை “டீ”ப் போட்டுப் பேசாதே எனவில்லை? ஆனால், போகக்கூடாது. என்ன கோபப்பட்டாலும், எழுப்பித்தாண்டா, ஆக வேண்டும்! ஆனாலும், இப்படி ஒரு தூங்குமூஞ்சிக் கும்பகர்ணன், இந்த உலகத்திலேயே இருக்க மாட்டான்! சை! இந்த அழைப்பு மணியை அழுத்தியே, கை வலித்து விடும்போல!” என்று, மறுபடியும், மறுபடியும் மணி அழுத்தப் பட்டது.

ஊகூம். நிச்சயமாக, இது கனவல்ல! ஆனால், என்ன அநியாயம்!

பல் வேறு மன அழுத்தங்களால், ஒரு மனிதன் சுமார் மூன்று நாட்களாகச் சரியாகத் தூங்கவில்லை. காலமும், கடல் காற்றும் செய்த மாயமாய், இன்றுதான் இமைதியாக உறங்க முடிந்திருக்கிறது! அதற்கும் இடையூறா?

அவன் எரிச்சலுடன் எழுந்து வந்து கதவைத் திறந்தால், அங்கே ஒரு பெண் நின்றாள். இளம்பெண்!

ஆனாலும், இந்தப் பெண்கள், எவ்வளவு கேவலத்துக்குத்தான்

இறங்குவார்கள்?

வெறுப்பும் ஏளனமுமான அவனது பார்வையில், “ஏ . .கிருபா . .” என்று அவள் சட்டெனப் பின்னடைய, “என்னடி . .” என்று ஒரு பையனும் வந்து சேர்ந்தான்.

“வாடி போய்விடலாம்” என்றவனா?

இது, புது வித உத்தியா?

துணை வந்துவிட்ட தைரியத்தில், அந்தப் பெண் பேசத் தொடங்கினாள். “தூதூங்கி விட்டீர்களா, சார்? சாரி .எழுப்பியதற்கு மன்னியுங்கள். . . “

“எழுப்பியதற்கு மன்னிப்புக் கேட்பதற்காகத்தான் எழுப்பினீர்களா? பிரமாதம்!” என்றான் அவன் ஏளனமாக. “சரி, மன்னித்துவிட்டேன். போங்கள்!” என்று கதவைச் சாத்தப்போனான்.

“ஐயோ, இல்லை சார். கதவைச் சாத்தாதீர்கள்.” என்று பதறினாள் பெண். “வந்து . . உங்களிடம், முக்கியமாக ஒன்று சொல்ல வேண்டும்!” என்றுரைத்துச் சற்றுத் தயங்கினாள்.

இதை நம்பி, பேசுவதற்காக, இவர்களை உள்ளே அழைக்க வேண்டுமாக்கும்! உள்ளே போனதும், இதுகள் இரண்டுமாகச் சேர்ந்து, என்ன நாடகம் நடத்துவார்களோ?

கதவு நிலையிலேயே சாய்ந்து நின்றவண்ணம், “என்ன பேச வேண்டும்? சொல்லுங்கள்.” என்று கேட்டான் அவன்.

“வந்து சார் . . .” என்றவாறு, கதவருகில் பதித்திருந்த பித்தளைத் தகட்டைப் பார்த்து, “வந்து, மிஸ்டர் நரேந்திரன் சார் . . .” என்று தொடங்கினாள் அந்தப் பெண்.

“ஏற்கனவே வந்தாயிற்று., இன்னும் எத்தனை தடவை, பேச்சிலேயும் வந்துகொண்டே இருப்பாய்?” என்று அலுப்புடன் அவன் கேட்க, சட்டென முகம் சிவந்தாள் அவள்.

“சீக்கிரம் சொல்லேன்! அவர் பாவம், சும்மாவே தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பி நிறுத்தியிருக்கிறோம்! இன்னும் நேரம் ஆக்காதேயேன்!” என்று, கூட வந்த பையன் கண்டித்தான் .

ஆனால், “அப்படி யோசிக்கிறவன், நீயே சொல்வதுதானே?” என்று அவள் எரிந்து விழவும், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, வெற்றிகரமாகப் பின்வாங்கினான்.

“யாராவது ஒருவர், சற்று சீக்கிரமாகச் சொல்லுகிறீர்களா? இது

இரவு. நான் தூங்க வேண்டும்!" என்றான் நரேந்திரன் சற்றுக் கடினமான குரலில்.

பையனை முறைத்துவிட்டு, "கீகீழே ஒரு தப்பு நேர்ந்துவிட்டது, சார். அதற்காக மன்னிப்புக் கேட்க வந்தோம். அத்தோடு . . . " என்றவளை இதை மறித்து, "

"உத்தி வித்தியாசமாக இருக்கிறது." என்றான் நரேந்திரன் உணர்ச்சியற்ற குரலில்.

புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, "சும்மா வெறும் மன்னிப்புக் கேட்க மட்டும் அல்ல, சார். பழுது பார்க்கிற செலவிற்குப் பணமும் கொண்டு வந்திருக்கிறோம். முழுச் செலவுக்கும் இது போதாது என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், இவன் அதிசயமாகச் செஸ் போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பார்ட்டி தர வேண்டும் என்று பத்து சினேகிதர்களைக் கூட்டி வந்ததில், கோக், கேக், பீட்சா பர்கர் . . " என்று அடுக்கியவளைக் குறுக்கிட்டான் பையன்.

"ஏய், அவரை போரடிக்காமல் விஷயத்துக்கு வா! இவள் எப்போதும் இப்படித்தான், சார். சொல்ல வேண்டிய விஷயத்தை விட்டுவிட்டு, ஊரெல்லாம் சுற்றுவாள். அதனால்தான் மதிப்பெண் குறைவது என்று அப்பா கூடச் . . " எனறவனை முடிக்க விடாமல், இப்போது, அந்தப் பெண் குறுக்கிட்டாள்.

"ஆமாமாம்! என்னை ஊரெல்லாம் சுற்றுவதாகச் சொல்லிவிட்டு, இப்போது உலகம் சுற்றுவது யாராம்? விஷயம் வேறு ஒன்றுமில்லை, மிஸ்டர் நரேந்திரன்., தப்பு எங்களது என்பதால், பழுது பார்க்கும் செலவுக்குப் பணம் கொடுக்க வந்தோம். கொகொஞ்சம் தொகை குறைவாக இருப்பதால், ஒஒன்றிரண்டு மாதங்களில் எப்படியாவது பணம் சேர்த்து, முழுத் தொகையையும் தந்து விடுகிறோம் என்று சொல்லி விட்டுப் போகலாம் என்று . . .என்றும் வந்தோம்." என்று ஒருவாறு பேச்சை முடித்துப் பெருமூச்சுவிட்டாள் அவள்.

"ஆமாம், சார். எங்கள் இருவரின் கைச்செலவுப் பணம், வேலைகள் செய்து சம்பாதிப்பது எல்லாம் சேர்த்து, முழுப் பணத்தையும் தந்து விடுவோம்., நம்புங்கள்." என்று, நெஞ்சாரக் கெஞ்சிக் கேட்டு, சட்டைப் பையில் இருந்து ஒன்பது நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான் பையன்.

இது, நிச்சயமாக வேறு விதம்தான். நல்லதா? கெட்டதா?

"ம்ம்ம் . . " என்று அவர்கள் இருவரையும் ஒரு தரம் நோட்டம்

விட்டான் நரேன்.

“அரைத் தூக்கத்தில் விழித்ததாலோ, என்னவோ, என் மூளை சரியான அளவில் வேலை செய்யவில்லை என்று, எனக்குத் தோன்றுகிறது! ஆனால், இன்னமும் எனக்கு, என் விஷயமாக என்ன தப்பு நடந்து, அதைச் சீர் செய்வதற்காக இந்தப் பணத்தை நீட்டுகிறீர்கள் என்று தெரியவில்லையே!” என்றவனின் குரல், அவர்களைக் கிண்டல் செய்தது. கிண்டலா, ஏளனமா?

இப்போது, இருவரின் முகங்களும் கன்றிச் சிவந்தன.

இப்படிப்பட்டச் சிவப்பை நடிப்பில் கொண்ட வருவது கடினம்தான் . . .

“சா . .ரி, சார். “ என்றனர் இருவரும்.

பையன் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ள, அவள் தொடர்ந்தாள். “கீழே . .கீழே உங்கள் கார் . . .”

“காருக்கு என்ன?”

“அது. . ,” என்று தயங்கியவள், ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, கடகடவென்று ஒப்பித்தாள். “சார், விஷயம் இவ்வளவுதான். அப்பா வழக்கம் போலத் தூக்க மாத்திரையைப் போட்டுக்கொண்டு, தூங்கப் போய்விட்டார். நாங்களும், வழக்கம் போலக் காரை எடுத்து ஓட்டிப் பார்த்தோம். திரும்பி வந்து நிறுத்தும்போது, கொகொஞ்சம் “ரிவர்ஸ்” எடுத்து நிறுத்த வேண்டியிருந்தது. அப்போது, எப்படியோ, உங்கள் கார் மேல், இடித்துவிட்டான். லேலேசாகத்தான், சார்! பழுது பார்க்க எவ்வளவு ஆகும் என்று தெரியாது. இரண்டு பேரிடமும் சேர்த்து, மொத்தம் தொண்ணூற்று நாற்பது ரூபாய்தான், இருக்கிறது. தொண்ணூறைக் கொண்டுவந்தோம். இன்னும் எவ்வளவு ஆகும் என்று, கேட்டுச் சொன்னீர்கள் என்றால் . . .”

“எந்த ஃப்ளாட்?”

“சா . .ர்!” என்று இருவரின் கண்களும் பயத்தில் விரிந்தன.

ஒரு பார்வைப் பரிமாற்றத்தின் பின், பெண்ணே பதில் சொன்னாள். “சி ஒன்று. முதல் தளம். உஉங்களுக்கு நேர் கீழேதான். ஆனால், நாங்கள் ஏமாற்ற மாட்டோம், சார்! எப்படியும் தந்துவிடுவோம். தயவு பண்ணி, அப்பாவிடம் போட்டுக் கொடுத்து விடாதீர்கள், சார்!”

“ஆமாம், சார். ப்ளீஸ், சார்! அப்பாவுக்குத் தெரியாமலே, நாங்கள்

பணத்தைக் கட்டாயம் தந்துவிடுவோம், சார். “ என்றான் பையனும்.

“மிஸ்டர் நரேந்திரன்” அடியோடு மறைந்து, “சார்” பல்கிப் பெருகவும், நரேந்திரனுக்கு வேடிக்கை பார்க்கத் தோன்றியது.

“சரி. பிறகு பார்ப்போம்.” என்று, சற்று மெப்பாகவே கூறிவிட்டு, உள்ளே செல்லத் திரும்பலானான்.

இருவரும் அரண்டு போனார்கள் போலும். “ஐயோ சார், முதலில் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். அப்போதுதான், எங்களுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். “ என்று கெஞ்சினார்கள்.

பணத்தைப் பெற்றுக் கொண்டால், அவர்களது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதாக அர்த்தமா?

நமட்டுச் சிரிப்புடன், “ஓகே! உங்கள் விருப்பம்! ஆனால், என் கார் எவ்வளவு பழுதாகி இருக்கிறது என்று, இன்னமும் எனக்குத் தெரியாது., அது நினைவிருக்கட்டும்.”

என்றவாறு, ரூபாய் நோட்டுகளை வாங்கிக்கொண்டு, உள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொண்டான் நரேந்திரன்.

சாத்தினாலே உட்புறமாகப் பூட்டிக் கொள்ளும் அமைப்புள்ள கதவு.

கதவைச் சாத்தினானே தவிர, நேரே உள்ளறைக்குச் சென்றுவிடவில்லை, அவன்.

இத்தனையும் நடிப்பாக இருக்குமோ என்ற ஐயம், இன்னமும் அவனுக்கு அடியோடு அற்றுப் போகவில்லை.

அசையாமல் நின்று, காற்றுக்காகத் திறந்து வைத்திருந்த ஜன்னல் வழியே, வெளியே நின்றிருந்தவர்களின் பேச்சை ஒட்டுக் கேட்டான்.

எரிச்சலோடு, பையனைத் திட்டினாள் பெண். “நிறுத்து, நிறுத்து என்று சொல்லச் சொல்லப் பின்னாலேயே, ஏண்டா வந்தாய்? எல்லாத் தொல்லையும், உன்னால் வந்ததுதான்!” என்றாள் ஆத்திரமாக.

தப்பு, தன் மீது இருந்ததால், பையன் தணிந்து போனான் . “ரொம்பக் கரெக்டாகப் பத்தே சென்டிமீட்டர் அளவில் விலக்கி நிறுத்த நினைத்தேன்டி. ஆனால் . . ச்சு!”

“ஏய், “டீ”ப் போட்டுப் பேசாதே என்றேனே! அப்படி ஏதும் முயற்சி செய்வதானால், ஏதாவது, சுவர்ப்பக்கம் போய்ப் பயிற்சி செய்திருக்கலாம், அல்லவா? இப்போது பார்! கண்ட கண்டவர்களிடம், காலில் விழாத குறையாகப் பணிந்து, கெஞ்ச வேண்டியதாகிவிட்டது. அதிலும், பெரிய மகாராஜா மாதிரி அந்த ஆள் பேசியதும், தூசு போல

நம்மைப் பார்த்ததும் . . போடா என்று கிளம்பிவிடலாம் என்று இருந்தது! ஆனால், தப்பு நம் பக்கம் என்பதால், பொறுத்து . . . “

தேய்ந்துகொண்டே போன குரல், அதற்கு மேல் கேட்கவில்லை. அடடா என்றிருந்தது நரேந்திரனுக்கு.

ஜன்னல் பக்கம் போய் எட்டிப் பார்த்தால், ஆட்களையும் காணவில்லை.

ஆனால், இந்த ஜன்னல் வழியேதான், முதலில் இவர்கள் பேசியதும், கனவில் போலக் கேட்டிருக்க வேண்டும்! இருந்த களைப்பில், படுக்கையறைக் கதவையும் சாத்தவில்லை. பேச்சு, கிட்டத்தட்டத் தெளிவாகக் கேட்டது, அதனால்தான் போலும்!

காரை என்ன பண்ணி வைத்திருக்கிறதுகளோ?

உடனே கீழே போய்க் காரைப் பார்க்கவும், அவனுக்கு மனம் வரவில்லை.

என்ன பெரிய விஷயம்? தெருவில் ஓட்ட முடியாத நிலையில் கார் இருந்தால், ஒரு டாக்சி ஏற்பாடு செய்து கொண்டால், போக்குவரத்துப் பிரச்சினை தீர்ந்தது!

பழுதுபார்க்கும் செலவை இன்ஷ்யூரன்சோ, அதை மீறினால் நிறுவனமோ பார்த்துக் கொள்ளும். இன்னும் வரிக் கணக்கிலும் எழுதலாம். எனவே,  பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

அதனால், எல்லாம் காலையிலேயே பார்த்துக் கொள்ளலாம் என்று, நரேந்திரன் படுக்கப் போனான்.

வழியில் இருந்த கண்ணாடியில் தென்பட்ட முகத்தைப் பார்க்கையில், நரேனுக்கு ஆச்சரியமாக இருந்தது!

அவனது முகமா, கண்ணாடியில் சிரிப்பது?

ரொம்ப நாளாக, இந்த முகத்தை அவன் பார்த்ததே இல்லையே!

வசுமதிக்குக் குடும்பத்தின் ஆரோக்கியம், ரொம்ப முக்கியம்!

ஆரோக்கியத்தின் அடிப்படை, உடல் பயிற்சிதான் என்பாள். அவளது நல்லகாலம், வீட்டிலிருந்து ஐந்து நிமிஷம் வேகமாக நடந்தால், கடற்கரை வந்துவிடும்.

கால் புதைய மணலில் நடப்பதோ, கடற்கரைச் சாலையில் “ஜாக்” பண்ணுவதோ, அவரவர் விருப்பம்! கணவர் ஞானமூர்த்திக்குச் பிரச்சினைகள் ஏற்பட்டதால், உரிய பயிற்சி எடுத்து, வீட்டிலேயே

யோகா பண்ணுவார்.

பிள்ளைகள் இருவருக்கும் காலையில், கீழ் வானம் சிவந்து, சூரியன் உதயம் ஆவதைப் பார்ப்பதில் ஆசை உண்டு என்பதால், கடற்கரை ஊட்டம் தொடர்ந்தது.

அன்று "ஜாகிங்" முடித்து, வீட்டுக்கு வந்தால், இருவருக்கும் பெரிய ஷாக்!

ஏனெனில், அந்த மேல் வீட்டுக்காரன், அவர்கள் இடித்த கார்க்காரன், அவர்களுடைய தந்தையோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்!

பாவி! பாவி  பணத்தையும் வாங்கிக்கொண்டு, போட்டுக் கொடுக்க வந்துவிட்டானே!

இவனையெல்லாம் . . . என்ன செய்வது? இப்போதைக்குக் கண்ணில் படாமல் ஓடி விடக் கூட வழியில்லை. அப்பா கண்ணில் பட்டாயிற்று!

"ஆஹா! நல்ல நேரம் பார்த்து, இருவரும் வந்துவிட்டார்களே! உள்ளே வாருங்கள். என்ன பார்க்கிறீர்கள்? சார், யார் என்றா? மேலே மூன்றாம் தளத்துக்குப் புதிதாகக் குடி வந்திருக்கிறாராம். பெயர் நரேந்திரன். இவள் என் மகள் நளினி, நரேந்திரன். பையன் பெயர் கிருபாகர்." என்று அறிமுகம் செய்து வைத்தார்.

இரு சாராரும் ஹலோ சொல்லிக் கொள்ளும் போதே, பிள்ளைகளின் மனம் வேகமாக வேலை செய்தது.

அப்படியானால், அவன் இன்னமும் வத்தி வைத்து முடிக்கவில்லையா? அதற்குள், இவர்கள் வந்துவிட்டார்களா? வாயை மூடிக்கொண்டு போய்விட்டான் என்றால் . . .

மேலே யோசிக்குமுன், "குட்டிம்மா, போம்மா. போய், சாருக்கு ஒரு நல்ல காஃபி போட்டுக் கொண்டுவா. அம்மா வீட்டில் இல்லையே., முதல் தடவையாக வந்த மனிதருக்கு எதுவும் கொடுக்காமல் எப்படி அனுப்புவது என்று, மனதில் சங்கடப் பட்டுக் கொண்டிருந்தேன்! அம்மா காஃபி மாதிரியே இருக்க வேண்டும்மா. பார்த்துப் போடு." என்று மகளை அனுப்பிவிட்டு, வந்தவனிடம் பேச்சைத் தொடர்ந்தார் தந்தை.

"இவர்கள் அம்மா, இப்போது, இங்கே வீட்டில் இல்லை, நரேந்திரன். மைத்துனி மகளுக்குத் திருமணம். கல்யாண வேலைகளில் உதவி செய்வதற்காக, அக்கா வீட்டுக்கு . .பெரம்பூருக்குப் போயிருக்கிறாள். அங்கிருந்து வந்து, வந்து போவது கடினம் என்று,

அங்கேயே ஒரு பத்திருபது நாட்கள் இருந்து, வேண்டியது பார்த்துச் செய்துவிட்டு வருவாள். பெண்ணும் நன்றாகச் சமைப்பாள். ஆனால், சும்மா இல்லை, சார். ஒரு நாள் சமையலுக்கு, அவளுக்கு ஐம்பது ரூபாய் கொடுத்து விட வேண்டும். எல்லாம், அவள் அம்மா ஏற்பாடு. பணம் வருகிறது என்றால், சமைக்கும் ஆர்வம் வந்து, மகள் சமையலை நன்றாகக் கற்றுக் கொள்வாளாம். அதே சமயம், உழைத்து வருகிற காசு என்பதால், வீண் செலவு செய்ய மனம் வராது., சேமிக்கிற பழக்கமும் வரும் என்று ஐடியா. . . .”

காஃபிக்கு டிகாக்ஷனைக் கப்பில் ஊற்றியவாறே, நளினி அடிக் குரலில் சீறினாள். “இந்த அப்பாவுக்குச் சும்மா இருக்க முடியாதாடா? நம் வீட்டு சரித்திரம் முழுவதையும், யாரோ ஓர் அன்னியன், அந்த ஆளிடம் ஒப்புவித்து விடுவார் போல இருக்கிறதே!” என்று எரிச்சல்பட்டாள்.

“உன் சரித்திரம் மட்டும்தான். நல்ல வேளை! என் பேச்சை எடுக்கவில்லை!” என்று கிருபாகர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, “அது போல நல்ல பழக்கங்கள் வளரட்டும் என்றுதான், கடை கண்ணிக்குப் போய் வருவதற்காகப் பையனுக்கும், இதிதற்கு, இவ்வளவு என்று பணம் கொடுப்பாள். சில சமயம், அது “சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்” என்பார்களே, அது போலக் கூட ஆகிவிடும்!” என்று ஞானமூர்த்தி நகைக்க, கூடச் சேர்ந்து நரேந்திரனும் சிரிக்க, “ஐய்யோ!” என்று தலையில் கைவைத்துக் குன்றினான், பையன்.

“எவ்வளவு நேரம்டி, ஒரு கப் காஃபியைப் போடுவாய்? சீக்கிரமாகக் கொடுத்து, அந்த ஆளை விரட்டாமல் . . .அவர் நம் கதையை அவிழ்த்து விடுமுன், சீக்கிரம்டீ!”

“ஒரே ஒரு கப் காஃபி என்றாலும், டிகாக்ஷன் இறங்க வேண்டாமா? “ என்றவாறு, சர்க்கரையைக் கலந்தவாறே, “ஆனால், இன்னொரு தரம் “டீ” போட்டாயோ, பேச வேறு விஷயம் இல்லாமல் போய், கார்ப் பேச்சு வரும்வரை, காஃபி தயாரே ஆகாது., ஜாக்கிரதை! அவரது காரை இடித்தவன் நீதான்!” என்று எச்சரித்தாள் தமக்கை.

“சாரிசாரிட் . . ப்பா. எப்படியோ வாயில் வந்து விடுகிறது!” என்று கிருபா இறங்கி வர, காஃபிக் கப்பை எடுத்து அவன் கையில் கொடுத்தாள் நளினி. “போ. கொண்டு போய்க் கொடு. எனக்கு, அங்கே வரப் பிடிக்கவில்லை!” என்றாள்.

தமக்கையின் முகத்தில் பிடிவாதத்தைக் காணவும், வேறு வழியில்லாமல் காஃபியைக் கொண்டு போய்க் கொடுத்தான் பையன்.

“சார், உங்களுக்கு?” என்று நரேந்திரன் சற்றுத் தயங்க, “காலையிலேயே குடித்தாயிற்று. ஃப்ளாஸ்கில் போட்டு வைத்து விட்டுத்தான், மகள் “ஜாகிங்” போவாள். காலைக் கோட்டா அவ்வளவுதான். நீங்கள் குடியுங்கள்.” என்று உபசரித்தார் பெரியவர்.

ஒரு வாய் அருந்தியதுமே, “காஃபி பிரமாதம், சார்.” என்று உரியவாறு பாராட்டினான் நரேந்திரன்.

வேறு வழியின்றியோ என்று குன்றினாள் பெண்.

ஆனால், அப்படியே ஒதுங்கிக் கொள்ளவும் முடியாமல், “நளினிம்மா, இங்கே வா. உன் காஃபி ரொம் நன்றாக இருப்பதாக, நம் காலனிக்குப் புதிதாகக் குடி வந்திருப்பவர் கூறுகிறார், பார்!” என்று, பெற்றவர் பெருமையோடு அழைத்தார்.

விதியே என்று முன்னறைக்குச் சென்று, “தாங்க்ஸ்!” என்றாள் மகள்.

“சும்மா ஒப்புக்காகச் சொல்லவில்லை. பெருமைப்படுவதற்கு, உங்கள் தந்தைக்கு முழு உரிமையும் உண்டு. காஃபி, உண்மையிலேயே, மிகப் பிரமாதம்! “ என்றான் நரேந்திரன்.

“அப்படியானால், அம்மாவைத்தான் பாராட்ட வேண்டும். நான், “காப்பிகேட்” மாதிரி, அம்மா சொன்னதை அப்படியே செய்தேன். அவ்வளவே.” என்று, ஒரு மரக்கட்டை முகத்துடன் உரைத்தாள் நளினி.

“சொல்லவில்லை? அவள் அம்மா அருமையாகக் காஃபி போடுவாள்! நல்லவேளை! செல்லமும்,அப்படியே படித்துக் கொண்டாள். இது மட்டுமல்ல. இன்னும் . . “ என்று, தந்தை மறுபடியும், மகளின் புகழ் பாடத் தொடங்கியதையும் தடுத்து, “அப்பா, அவருக்கு எத்தனை வேலைகளோ! சும்மா, நிறுத்தி வைத்துப் பேசிக் கொண்டே இருக்கிறீர்களே!” என்று, அவர்கள் இருவரின் உரையாடலை, ஒரு முடிவுக்கும் கொண்டுவந்தாள்.

இன்னும் தாமதித்தால், கழுத்தைப் பிடித்தே தள்ளிவிடுவாளா?

முறுவலித்தவாறே, ஞானமூர்த்தியோடு சேர்ந்து எழுந்தான் நரேந்திரன்.

“ஆமாம் சார். எனக்கு வேலைக்கு நேரம் ஆகிறது! காஃபியோடு, உங்கள் அன்பான பேச்சுக்கும், ரொம்ப நன்றி, சார்! நான் கிளம்புகிறேன்! முதலில், உங்கள் கார் இன்ஷ்யூரன்சை எப்படிப் போட்டிருக்கிறீர்கள் என்று பாருங்கள். அதில் செலவு அடங்காவிட்டால், எவ்வளவானாலும், நான் தந்து விடுகிறேன். எதற்கும், இப்போதைக்கு,

இதை வைத்துக் கொள்ளுங்கள். " என்று, ஓர் ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து, டீபாயில், சாசருக்கு அடியில் வைத்தான். "எப்படியும் என் தப்புதானே? இரவில் நிறுத்தும்போது, புது இடம் என்றதும், சற்றுக் குழம்பிப்போய் இடித்துவிட்டேன் என்று தோன்றுகிறது." என்று அவன் முடிக்கவும், சின்னவர்கள் இருவரும், "ஷாக்" அடித்தாற்போல, உடல் விறைத்தார்கள்!

அவர்களது தப்பை, அவன் தன்னதாக, ஏன் சொல்லுகிறான்? அப்படியானால், இவன் போட்டுக் கொடுக்க வரவில்லையா?

பிள்ளைகள் இருவரும் திகைப்புடன் "விலுக்கென"த் தலை தூக்கி நோக்க, "என்ன நரேந்திரன், வேண்டும் என்றா முட்டியிருப்பீர்கள்? போகட்டும். இன்ஷ்யூரன்ஸ எவ்வளவு போட முடியும் என்று கேட்டுச் சொல்லுகிறேன். " என்றவர் அத்தோடு நிறுத்தியிருக்கலாம்.

ஆனால், அப்படி இராமல், "எப்படியும், புது இடம் என்பதால், நீங்கள் இன்னும் கொஞ்சம் கவனத்தோடு வந்திருக்கலாம். எல்லாம் பாடம்தானே? இனி எப்போதும் கவனத்தோடு இருங்கள்." என்று இலவசமாக ஆலோசனை வேறு வழங்கவும், அக்கா, தம்பி இருவரும் குனிந்த தலை நிமிரவில்லை.

உதட்டோரம் நமட்டுச் சிரிப்போடு, "கட்டாயம், சார்!" என்று, பணிவு போலச் சொல்ல, அப்போதும், "இதற்குப் பயந்தே, நான் பிள்ளைகளிடம் காரைக் கொடுப்பதே இல்லை! உடம்பில் இன்னும் கொஞ்சம் நிதானம் வரவேண்டும். அதற்குப் பிறகு, எல்லாம் இவர்களுக்குத்தானே?" என்று ஞானமூர்த்தி மேலும் சொல்லவும், அவருடைய இரு மக்களுக்கும் தரைக்குள்ளேயே புதைந்துவிடலாம் போல இருந்தது.

இந்த அப்பா, இருந்திருந்து இவனிடம் போய், இதையெல்லாம் சொல்லவேண்டுமா?

ஆனால், அவன், அந்த நரேந்திரன் ஏன், அவர்கள் வீட்டுக்கு வந்தான்?

அக்கா, தம்பி இருவருக்கும் யோசித்து, யோசித்து மண்டை குழம்பியதுதான் மிச்சமாயிற்று!

# அத்தியாயம் -3

அவர்கள் வீட்டுக்கு நரேந்திரன் ஏன் வந்தான் என்பது மட்டும், நளினி கிருபாகரின் பிரச்சினையாக இருக்கவில்லை. அவர்கள் கொடுத்த பணத்தோடு, நூறு ரூபாயைச் சேர்த்து, தந்தையிடம் அவன் கொடுத்துவிட்டுப் போனது, இன்னும் பெரிய பிரச்சினை ஆகிப் போயிற்று.

இந்த ஆயிரத்தையும் சேர்த்தல்லவா, அவனுக்குக் கொடுத்தாக வேண்டும்?

பல்லைக் கடித்துப் பொறுத்திருந்தார்கள்.

ஒரு டாக்சி வரவழைத்து, ஞானமூர்த்தி வேலைக்குக் கிளம்பிச் சென்றதும், அவருடைய இரு பிள்ளைகளும், நரேந்திரனின் ஃப்ளாட்டுக்கு ஓடிச் சென்றார்கள்.

அவர்களை எதிர்பார்த்தவனே போல, ஒரு முறுவலோடு அவர்களை எதிர்கொண்டான் அவன். அந்த முறுவலில் இருந்தது . . . கேலி? கிண்டல்? அல்லது ஏளனமோ?

எதுவாக இருந்தாலும் எரிச்சலூட்ட, இருவருமே, அவன் மீது பாய்ந்தனர்.

“ஏன்சார், நீங்கள் ஏன்சார், ஏன் சா . .ர், எங்கள் வீட்டுக்கு வந்தீர்கள்? வந்து பணத்தை வேறு திருப்பிக் கொடுத்து . . . ஏன் சார், இந்த அனாவசிய வேலை? இதனால், எங்களுக்கு, எவ்வளவு கஷ்டம், தெரியுமா? “

இருவரும் மாறி மாறிக் கேட்டது, இதையேதான்!

பல விதமாகக் கேட்டு, அவர்கள் அலுத்து ஓயும் வரை பொறுத்திருந்துவிட்டு, “புத்திசாலிகள்!” என்றான் அவன்.

நிச்சயமாக ஏளனமாகத்தான்.

அதாவது, அவர்களை, முட்டாள்களே என்று அழைக்கிறான்!

ஆத்திரத்துடன், அவர்கள் பேச வாய் திறந்தபோது, “படபடவென்று வாய் பேசினால் மட்டும் போதுமா? அதில் பாதி அளவேனும் மூளையையும் பயன்படுத்தலாம் அல்லவா? காரைக் கொணர்ந்து இடித்தால், இடிபட்ட என் கார் மட்டுமா . . . “ என்று அவன் சொல்லும்போதே, “ஐயோ, ஆமாம்!” என்று இருவரும் விழி விரித்துக்

கோரஸ் பாடினர்.

“அதேதான், கதை! இடிபட்ட என் கார் மட்டுமின்றி, இடித்த காரும் சேர்ந்துதான் பழுதாகும். அதனால்தான் காலையிலேயே போய்ப் பார்த்தேன். உங்கள் காரின் பின்புறம் நசுங்கி இருந்தது. ஏதாவது சொல்லி சமாளிக்கலாம் என்று, உங்கள் வீட்டுக்குப் போனேன். சும்மாச் சொல்லக் கூடாது! கூடை நிறையப் புத்திமதி கிடைத்தது! “ என்று கீழ்க் கண்ணால் நோக்க, நரேந்திரன் எதிர்பார்த்தது போலவே, உடன்பிறந்தோர் இருவரும் அசடு வழிந்தனர்.

புன்னகையை அடக்கிக்கொண்டு, “ஆமாம், தினமும் காரை எடுப்பதாகச் சொன்னீர்களே, பெட்ரோல் காலியாவதை, அப்பா கவனிக்க மாட்டாரா?” என்று பேச்சுக் கொடுத்தான்.

நளினி யோசனையிலேயே இருக்க, கிருபா பதில் சொன்னான். “ரொம்ப ஓட்ட மாட்டோம், சார்! தூரம் போக, எங்களுக்கே பயம். அப்போதுமே கணக்குப் போட்டு, ஒரு லிட்டர் பெட்ரோல் போட்டு வைத்து விடுவோம்.” என்றான் விளக்கமாக.

“அதிருக்கட்டும். நீங்கள் ஏன் சார், அந்தப் பணத்தை அப்பாவிடம் கொடுத்தீர்கள்? அதுவும், நூறு ரூபாய் அதிகம் போட்டு! அதுவும், அப்பா கேட்கவே இல்லாதபோது, ஏன் சார், இந்த வேண்டாத வேலை?” என்று நளினி எரிச்சல் பட்டாள்!

“அதையும் சேர்த்தல்லவா, இப்போது நாங்கள் திருப்பித் தரவேண்டும்!”

“ஐயோ, ஆமாமில்லை? ரொம்பக் கஷ்டம்!” என்றான் பையன்!

“பரவாயில்லை. தரவேண்டாம்.” என்றான் நரேந்திரன், சர்வசாதாரணமாக.

“ஐயையோ, கூடாது., கூடாது!” என்று கோரஸ் கேட்டது. “யாருக்கும் கடனாளியாக இருக்கக் கூடாது என்று, எங்கள் வீட்டில் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். . .”

“நான்தான் தர வேண்டாம் என்கிறேனே!”

“இனாமும், ஒரு வகைக் கடன்தானாம்., அதனால் உறுதியாகப் பணத்தைத் திருப்பித் தந்தே தீருவோம், சார். இன்னும், உங்களுக்கு அதிகப் பணம் செலவானால், அதையும் நாங்கள் திருப்பிக் கொடுத்தே தீருவோம். உங்கள் பணம், எங்களுக்கு எதற்கு? வேண்டவே வேண்டாம்!” என்று நளினி அழுத்தமான குரலில் சொல்லி முடித்தாள்.

அந்த மோதிரம், என் விரலுக்கு மிகவும் அழகாக இருக்கும்! .

.அதை நானே வைத்துக் கொள்ளலாமா . . . இந்தர் கூட . . .

“எஎன்ன சார்?” என்று, சிறு திகைப்புடன் கேட்டாள் நளினி.

“ஒன்றுமில்லையே!” என்ற பிசிரற்ற குரலில் கூறி மறுத்தான் நரேந்திரன். அதையே உறுதிப்படுத்தும் விதமாக, “தொழிலில், எத்தனையோ வகைகளில் பணம் வீணாவதுண்டு. அதை, யோசித்துப் பார்த்தேன்! அவைகளில், திரும்பக் கிடைத்தது, ரொம்பவே குறைவுதான். அது போல, இதையும் விட்டு விடலாம்.” என்றான் தொடர்ந்து.

“அதற்கெல்லாம் தேவையே இல்லை!” என்றாள் நளினி, பழைய அழுத்தக் குரலிலேயே. “எப்படியாவது, சீக்கிரமாகச் சேமித்து, முழுத் தொகையையும் திருப்பித் தந்துவிடுவோம். அம்மா வேறு, வீட்டில் இல்லாததால், விரைவாகவே பணத்தைச் சேர்த்து விடலாம்.” என்று அவள் முடித்தபோது, மோசமாக ஓர் அபசுரம் தட்டியது போல உணர்ந்தான் நரேந்திரன்.

அம்மா வீட்டில் இல்லததால் பணம் சீக்கிரமாகச் சேரும் என்றால், பொய்க் கணக்கா? ஒன்றைப் பத்தாக்கிக் கணக்கைக் காட்டுவார்களா? என்னவோ நினைத்தானே!

குரலில் எதையும் காட்டாமல், “எப்படி சேமிப்பீர்கள்? “ என்று விசாரித்தான் அவன்.

“அதுதான், அப்பா சொன்னாரே, சார்!” என்றான் கிருபாகர். “சமையல் செய்வதற்கு, நளினிக்கு ஐம்பது ரூபாய். கேக் செய்ய இருபது. கடைக்குப் போக, எனக்குப் பத்து! கேக் செய்ய உதவினால், அதற்குத் தனி. அப்புறம் . . . அயர்ன் பண்ணினால், ஒரு துணிக்கு மூன்று ரூபாய். சேமிக்கிற பழக்கம் வரட்டும் என்று அம்மா போட்ட திட்டம். மாசக் கடைசியில் பார்த்தால், , அப்பாவின் கைக்குட்டை கூட, பெட்டி போட்டதாக இருக்கும்! இதற்குப் புதிதே வாங்கி விடலாம் என்று, அப்பா சொல்லுவார்!” என்று அவன் சிரிக்க, மற்றவனும் இணைந்து கொண்டான்.

“ஆமாம். எல்லவற்றையும், அப்பாவுக்கு மேல் ஒப்பித்துவிடு. எப்படியும் மிஸ்டர் நரேந்திரன், மிஞ்சினால் மூன்று மாதங்களில், உங்கள் பணம் திரும்பி வந்துவிடும். அதனால், நிம்மதியாக இருங்கள். “ என்று நிமிர்வோடு கூறித் திரும்பி, அங்கிருந்து வெளியேறத் தொடங்கினாள், நளினி.

சின்னவனைப் போல சகஜமாகப் பேசாமல், நளினி கௌரவம்

பாராட்டுவது போல, நரேந்திரனுக்குத் தோன்றியது.

ஏன் என்று புரியாமல், அதை உடைக்கும் விருப்பமும் வந்தது.

எனவே, “மூ . . . ன்று மா . . . தங்களா? குறைந்த பட்சமாகத் தொண்ணூற்று ஒரு நாட்கள்! அவ்வளவு நாட்களுக்கு, என் வட்டி என்ன ஆவது?” என்று அவன் புருவம் உயர்த்திக் கேட்க, சின்னவர்கள் திகைத்தனர்.

கிருபாகர் கூர்ந்து அவனை நோக்க, “எவ்வளவு என்று சொன்னால், அதையும் சேர்த்துத் தந்து விடுகிறோம்!” என்றாள் நளினி விறைப்பாக.

“அதிலும் கஷ்டம் இருக்கிறதே! தொகையே என்னவென்று தெரியாமல், வட்டியை எப்படிக் கணக்கிடுவது? ஒரு வேளை . . மகள் கணக்கை முக்கியப் பாடமாக எடுத்துப் படித்ததாக, உங்கள் அப்பா சொன்னாரே., அதனால், நளினி, ஒருவேளை உனக்குத் தெரியுமோ?” என்று, அவளிடம் நேரடியாக விடை கேட்டான் நரேந்திரன்.

அவன் தங்களைப் பார்த்து நகைக்கிறான் என்பது நன்றாகப் புரிந்துவிட, நளினி தலை சரித்து அவனைப் பார்த்தாள். இவனுக்கு மட்டும்தான், இப்படி மடக்கத் தெரியுமா?

“நானெல்லாம், இப்போதுதான் படிப்பை முடித்தவள், நரேந்திரன் சார். அதை, அனுபவத்தில் செயல்படுத்திப் பழக்கம் இல்லாத வெறும், ஏட்டுச் சுரைக்காய்! ஆனால், உங்களுக்குப் படிப்போடு, அனுபவமும் இருக்கும் போலத் தெரிகிறதே! விடையை நீங்களேதான் சொல்லுங்களேன்!” என்று முடித்தாள்.

ஆனால், அவனும் அசரவில்லை. “தாராளமாக! நீ சொன்னது போல, ஆறு ஆண்டுகளாகத் தொழில் நடத்திய அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். கொடுக்கல் வாங்கலைப் பணமாக மட்டுமின்றிப் பொருளாகவும் பெறலாம். அந்த வகையில், இந்த தெரியாத் தொகைக்குச் சரியான வட்டி என்ன என்றால் . . . நான் எப்போதேனும், உங்கள் வீட்டுக்கு வர நேர்ந்தால், காலையில் தந்தது போல, அருமையான காஃபி ஒரு கப் தர வேண்டும்! வட்டித் தொகை சரியாகிப் போகும்! அவ்வளவுதான்! “ என்று இலகுவாக முடித்தான் நரேந்திரன்.

பார்த்துக்கொண்டே இருந்த கிருபாகர் சிறு வியப்புடன், “ஹையோ, இதற்குத்தான் இவ்வளவுமா? இப்படி, இல்லாத கணக்கெல்லாம் போடத் தேவையே கிடையாது, சார். எங்கள் வீட்டில், உங்களுக்குச் சும்மாவே, காஃபி கிடைக்கும்!” என்றான்

“ஆனால், இப்போதுதானே, யாரோ இனாமெல்லாம் வாங்கக் கூடாது., அதுவும் கடன்தான், அப்படி, இப்படி என்றெல்லாம் அளந்தார்கள்? அதில் மிரண்டுதான், நான் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கணக்குப் போட வேண்டியதாயிற்று!”

கண்ணில் சிரிப்பும் பாவனையுமாக அவன் சொன்ன விதத்தில், தம்பியோடு சேர்ந்து சிரித்துவிட்டபோதும், விரைவிலேயே சிரிப்பை அடக்கிக்கொண்டு, “இது இனாம் கணக்கில் சேராது. விருந்தோம்பல் முறை. தமிழ் நாட்டுத் தனிச் சிறப்பு!” என்று எடுத்துரைத்தாள் நளினி.

தளராமல், “போச்சுடா! விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்றும் தமிழ் நாட்டுப் பழமொழி ஒன்று உண்டே! அதாவது, மூன்றே மூன்று நாட்கள் கொடுத்துவிட்டு, அத்தோடு  காஃபியை நிறுத்தத் திட்டமா? வேண்டாம்ப்பா, வேண்டாம்! நான், என் வட்டிக் கணக்கென்றே வைத்துக் கொள்கிறேன்!” என்று நரேந்திரன் முடிக்க, நளினி திகைத்தாள்.

“பலே!” என்று கைதட்டிச் சிரித்துவிட்டு, “அக்கா, சாரைப் பேச்சில் மடக்கவே முடியாது போலத் தெரிகிறதே! சரிதான் என்று, அவரது திட்டத்துக்கே ஒத்துக்கொண்டு விடலாமா?” என்றான்  கிருபாகர்.

தோளைக் குலுக்கி, “வேறு வழி?” என்றாள் தமக்கை. “இல்லாவிட்டால், மனிதர், பேசிப் பேசியே, நம்மை அறுத்துத் தள்ளிவிடுவார் போல இருக்கிறதே! அதற்குப் பயந்தேனும், அவருக்குக் காஃபி கொடுத்து விடலாம். ஆனால், விருந்துபசாரமாக நாம் கொடுப்போம். வட்டிக் கணக்காக அவர் குடிக்கட்டும்! ஒன்றில் இரண்டு!” என்று, கிண்டல் போல முடித்தாள் அவள்.

கிண்டலாகவே எடுத்து, மற்ற இருவரும் சிரிக்க, மெல்ல அவளும் அதில் கலந்துகொண்டாள்.

எப்படியும், அறுவைக் கேஸ் என்று, அவனுக்குப் பட்டம் சூட்டி விட்டாள்தானே?  புரிந்து கொள்கிறானா, பார்ப்போம்!

ஆனால், என்னதான் அவனோடு சேர்ந்து சிரித்தாலும், ஞானமூர்த்தியுடைய மக்கள், கடனைத் திருப்புவதில் மட்டும், தீவிரமாகவே இருந்தார்கள்.

இரண்டு நாட்களிலேயே, கிருபாகர் ஒரு நூறு ரூபாயைக் கொண்டுவந்து கொடுக்க, நரேந்திரனுக்கு அதை வாங்கக் கை கூசியது. ஆனால், ஒரு கொள்கைப் பிடிப்போடு செய்கிறவர்களைத் தடுக்கவும், அவனுக்குப் பிடிக்காததால், மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

ஞானமூர்த்தியின் கார் ரிப்பேருக்கு, இன்ஷ்யூரன்ஸ் மூலம் வரக் கூடிய தொகையை விட, சற்று அதிகமாகவே ஆனதால், அந்த ஆயிரம் ரூபாய் அவரிடமே நின்றுவிட்டது.

ஆனால், நரேந்திரனின் சொந்தக் காருக்குக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் செலவாயிற்று. அதை மறைத்து, தொள்ளாயிரமே என்றான், சின்னவர்களிடம்.

ஒன்றுமே இல்லை என்றால், நம்ப மாட்டார்களே என்ற காரணத்தினால்தான், அவன் இந்த அளவு சொன்னதே! அவர்களுடைய தந்தையிடமே கொடுத்திருந்தாலும்,  நளினி, கிருபாகருக்கு, அவர்கள் முதலில் கொடுத்த அந்தப் பணம் நஷ்டம்தானே? எனவே, செலவைக் குறைத்துச் சொன்னதன் மூலம், தங்களுக்கு இடையேயான கணக்கு சரியாகிவிட்டது என்பது, அவனுக்கு.

அத்தோடு, அவனது ஆழ் மனக் காயங்கள் ஆறிய வேகத்துக்குக் கோடி கொடுத்தாலும், போதாதே! பிடிவாதமாக நினைத்துப் பார்த்தால் ஒழிய, அந்த ஞாபகமே வருவதில்லை!

மறுநாள் முன்மாலையிலேயே, நரேந்திரன் திரும்பி வந்துவிட்டான். லாப்டாப்பை வைத்துக்கொண்டு, தனியாக இருந்து செய்ய வேண்டிய வேலை.

கணக்கீடுகளை முடித்து, தேவையானவர்களோடு பேசி, வேலையை முடிக்கும்போது, கீழே இருந்து, நிறையச் சத்தம் கேட்டது.

காற்றுக்காகக் கதவு ஜன்னல்களைத் திறந்து வைத்தால், இதை சகித்துத்தான் ஆக வேண்டும்!

“ஏய் . . . அவுட்தான்., அவுட்டேதான்!” என்று கத்திய குரல் . . .

எழுந்து சென்று, பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தான், நரேந்திரன்.

அது, நளினியின் குரலேதான். அக்காவும் தம்பியும் யாருடனோ சேர்ந்து ஷட்டில் விளையாடுவது, தெரிந்தது.

ஓய்ந்து, உட்காரவே மாட்டாளோ?

. . . சாயங்காலம், தாரிணி வைக்கும், குர்த்தா கண்காட்சி! பார்லருக்குப் போய் வந்தது, ஒரே அசதி! படுக்கப் போகிறேன். நீயும், நன்றாகத் தூங்கி, ஓய்வெடுத்துக்கொண்டு

வா, ரூபாம்மா. . . .ஆனால், இரண்டு காய்ந்த ரொட்டித் துண்டுகளோடு, ஒரு வேளை உணவை முடிக்கிறவர்களுக்கு, அசதியாகத்தான் இருக்கும்.

. .

தலையை உலுக்கி விட்டுக் கொண்டு பார்த்தால், அக்காவும் தம்பியுமாகக் கீழே இருந்து அவனைத்தான் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவரகளது சைகையைச் சரியாகப் புரிந்து, வருவதாகப் பதில் தெரிவித்துவிட்டு, அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த இடம் நோக்கிச் சென்றான், அவன்.

இன்னும் பலருக்கு, அவனை அறிமுகம் செய்து வைத்தார்கள். எல்லோரும் சேர்ந்து, இரண்டு செட் போட்டு விளையாடினார்கள்.

இப்படிப் பெர்முடாவில் விளையாடிப் பழக்கமில்லை என்றாலும், இதற்கான உடை, இதுதான் என்ற கட்டுத் திட்டம் இல்லாமல், இயல்பாகப் பேசிச் சிரித்து விளையாடியது, நரேந்திரனுக்கு மிகவும் பிடித்தது.

வெளிச்சம் மங்கத் தொடங்குகையில், “மணி ஆறரை! அம்மா ஃபோன் பண்ணுவார்கள். நாங்கள் போகிறோம்!” என்று அக்காவும் தம்பியும் கிளம்பினார்கள்.

“நேற்று, டீவி பார்த்துக்கொண்டே இருந்து, நீ நுழைவுத் தேர்வுப் பாடம் எதையும் படிக்கவே இல்லை! அம்மாவிடம் சொல்லப் போகிறேன், பார்!”

“ஏய், ஏய், இல்லைடி, இன்று சேர்த்துப் படித்து விடுகிறேன். ப்ளீஸ், அம்மாவிடம் போட்டுக் கொடுத்து விடாதேம்மா! என் தங்க அக்கா இல்லை? என் பொன்னு அக்கா . . “

“ரொம்பத்தான் ஐஸ் வைக்காதே! சளிப் பிடிக்கும். அது எனக்குப் பிடிக்கா . . .”

இருவரும் வாதாடியவாறே விரைவதை, அவனைப் போலவே, வேறு சிலரும் ரசிப்பதைக் கண்டு, ஏனோ, நரேந்திரனுக்குப் பெருமையாக இருந்தது!

“அவர்கள் அம்மா கூப்பிடுகிற நேரம் என்றால், பாதி விளையாட்டில், அவர்களே ஜெயிக்கிற நிலை என்றாலும், இரண்டு பேரும் ஓடி விடுவார்கள்!” என்று, ஒரு மத்திய வயதுக்காரர் பாராட்டிச் சொன்ன போதும், அப்படியே!

தமக்கையும் தம்பியும் சேர்ந்து அடிக்கும் லூட்டியும், பேச்சும் சிரிப்பும், பிள்ளைகள், மனைவி பற்றி, ஞானமூர்த்தியின் பெருமிதமும்,

எல்லோருமே இயல்பாகப் பழகுவதுமாக, அந்த வீட்டுக்குள் போனாலே, ஏதோ பூந்தோட்டத்துக்குள் போய் சுத்தமான இயற்கைக் காற்றை சுவாசித்து வருவது போன்ற உணர்வுதான், அவனுக்கு!

அதற்காகத் தினமும், அவர்கள் வீட்டுக்குள் போய் நிற்க முடியாதில்லையா?

அதுவும், காஃபி பற்றி, அவ்வளவு பேசிவிட்டு!

ஆனால், அவர்களைச் சந்திக்கும். . .குறைந்த பட்சமாகக் கண்ணால் பார்க்கும் வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்டான், அவன்.

காலையில், உடம்புக்குப் பயிற்சி வேண்டும் என்று, அவர்களோடு கடற்கரையில் ஓடினான். மாலையில் சீக்கிரமாக வந்தால், ஷட்டில்.

அந்தக் குடியிருப்பின் விதிமுறைகளைக் கேட்பதற்காக, பால், பத்திரிகை, வேலையாள் ஏற்பாடு செய்யும் விதம் பற்றி அறிய, அவர்கள் வீட்டுக்கே சென்றான்.

ஞானமூர்த்தியும், அவனைக் கூட்டிப்போய், குடியிருப்பின் செகரட்டரிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"லிஃப்ட்" நேரே கீழே தரைத் தளத்துக்குப் போய்விடுகிறது என்று, சுற்றிச் சுற்றிச் செல்லும் படிகளிலேயே, முடிந்த வரை இறங்குவான்.

அன்றும், அப்படி இறங்கி வந்தால், முதல் தளத்தில் காலடி எடுத்து வைக்கும்போதே, கும்மென்று, கேக் மணம்! உயர் ரக "பேக்கரி"களில், இதே வாசனையை நுகர்ந்திருக்கிறான்.

ஞானமூர்த்தியின் ஃப்ளாட்டிலிருந்துதான் வந்தது.

தாண்டிச் சென்று அடுத்த வரிசைப் படிகளில் இறங்காமல், ஃப்ளாட் வாசலிலேயே நின்று, சற்று நேரம் வாசம் பிடித்தான்.

எதிர்பாராத விதமாகக் கதவு திறந்து, கிருபாகர் எதிரே நின்றான்.

நரேந்திரனைக் கண்டதும், "சார், நீங்களா?" என்று வியப்புடன் வினவினான். "ஏதேனும் வேண்டுமா, சார்?" என்று கேட்டான்.

லேசாக அசடு வழிய, "எதுவும் வேண்டாம், கிருபா. படிகளில் இறங்கிப் போய்க் கொண்டிருந்தபோது, இந்தக் கேக் வாசம் அப்படியே, சுண்டி இழுத்தது. கொஞ்சம் வாசம் பிடித்துவிட்டுப் போகலாம் என்று நின்றுவிட்டேன். ஆனால், வாசம் பிடிப்பதால், கேக்கின் அளவு, சுவை எதுவும் குறைந்துவிடாது . . ." என்று ஏதோ வாயில் வந்ததைச் சொல்லலானான் நரேந்திரன்.

“குறையாது, சார். ஆனால் வரும்! “

“வருமா? என்ன வரும்?”

“இதைச் சாப்பிடுகிற எங்களுக்கு வயிற்றுவலி! முதலில் உள்ளே வாருங்கள், சார். எப்போதாவது, கேக் செய்ததுமே எடுத்து, சூடாகச் சாப்பிட்டது உண்டா, சார்? ஒரு துண்டு சாப்பிட்டுப் பாருங்கள். வெகு ருசியாக இருக்கும்! “ என்று, அவனை உள்ளே அழைத்துச் சென்று, ஹாலில் அமர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த சூடான கேக்கில் ஒரு பெரிய துண்டை வெட்டி, தட்டில் வைத்துப் பெரியவன் கையில் கொடுத்தான்.

ஒரு வாய் ருசி பார்த்ததுமே, “சூப்பர்!” என்றான் நரேந்திரன்.

“இங்கே வந்து, இதைப் பார்த்தபடியே சாப்பிடுங்கள், சார். ஷட்டில் போட்டியில், ஜெயித்ததற்காக, எனக்குக் கிடைத்த கப்! முதல் பரிசு! ஹாலுக்கே கொண்டு வந்து காட்டியிருப்பேன். ஆனால், கப் வைக்கும் தாங்கி சரியாக இல்லை. திடுமென விழுந்து விடுகிறது. “க்விக்ஃபிக்ஸ்” போட்டு நாளைக்கு ஒட்டித் தருவதாக, அக்கா சொன்னாள். அவள் ஒட்டினால், “கம்” வெளியே தெரியாமல், ஒட்டி விடுவாள் . . .” என்று, அவனது படிக்கும் மேஜை மேல் இருந்த பெரிய கப்பைக் கிருபாகர், நரேந்திரனுக்குக் காட்டிக் கொண்டிருக்கும்போதே, வெளி கிரில் கதவைத் திறக்கும் ஒலி கேட்டது.

“அக்காதான் . . “ என்று கிருபாகர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, “ஏய் கிருபா!” என்று நளினியின் அதட்டலும் கேட்டது.

என்ன கோபமாக இருக்கும் என்று எட்டிப் பார்க்குமுன், படபடவென்று பொரிந்துவிட்டாள் அவள்.

“அதற்குள் நாக்கை அடக்க முடியவில்லையா? “ஐசிங்” வாங்கப் போனவள் வருமுன், இப்படிப் பண்ணிவிட்டாயே. இப்போது, இந்த “ஐசிங்”கை உன் தலையிலா . . . “ என்று கத்திக்கொண்டே வந்தவள், நரேந்திரனைக் கண்டதும், கப்பென்று அடங்கினாள்.

அடுத்து, அவன் கையில் கேக்கைக் காணவும், கன்றிச் சிவந்து போனாள்.

“வாசமாக இருக்கிறது என்று சார் சொன்னதால், இந்தக் கேக் சூடாகச் சாப்பிட்டால் நன்றாக இருக்குமே என்றுதான். சும்மாவே, சாரும் பிரமாதம் என்றார். . . “ என்று இழுத்தான் கிருபாகர்.

“தப்பு என்னுடையது போலத் தெரிகிறது. நான் நின்று வாசம்

பிடித்திருக்கக் கூடாது., சாரி! “ என்ற நரேந்திரன், மேலே நின்று சாப்பிட முடியாமல், கையிலிருந்த கேக் தட்டை வைக்கப் பார்வையால் இடம் தேடவும், நளினிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

பிரமாதம் என்று ஆசையாகச் சாப்பிடத் தொடங்கியவன்!

வேகமாக யோசித்து, “வைத்து விடாதீர்கள் சார்!” என்று அவசரமாகக் குறுக்கிட்டுத் தடுத்தாள். “இந்தக் கேக்குக்கு ஒரு தனி “ஐசிங்” பண்ணினால், இன்னும் ரொம்ப ருசியாக இருக்கும். இவனுக்குப் பார்த்து வாங்கத் தெரியாதே என்று, அதை வாங்கி வர, நான் போனேன். வருவதற்குள் வெட்டிவிட்டானே என்று, அதனால்தான். . . நீங்கள் வேண்டுமானால் . . . “ஐசிங்”கோடு சாப்பிட்டுப் பாருங்களேன். . .” என்று அருகில் வந்து, பையிலிருந்து, “ஐசிங் கோனை” எடுத்து, அவனது தட்டிலிருந்த கேக் மீது, எஸன்ஸ் கலந்த சர்க்கரைக் கலவையைப் பரப்பினாள்.

“இப்போது சாப்பிட்டுப் பாருங்கள்.” என்று அவன் முகத்தைப் பார்த்தவள், அவனது முகம் வெகு அருகில் இருப்பதை உணர்ந்து, சட்டெனப் பின்னடைந்து, “உ உட்கார்ந்து சாப்பிடுங்கள் . .. “ என்று சிறு தடுமாற்றத்துடன் மொழிந்தாள்.

செய்வது அறியாதவள் போல ஒரு கணம் விழித்துவிட்டு, “வீட்டுக்கு வந்தவர்களிடம், நிற்க வைத்தே, சாப்பிடச் சொல்வாயாடா?” என்று தம்பியிடம் பாய்ந்தாள்.

நரேந்திரன் ஹாலில் இருந்து கேக்கை உண்டிருந்தால், அவள் இப்படிக் கத்தியே இருக்க மாட்டாளே! அப்புறமும், அவனுக்கு மிகவும் அருகில் . . . அவனது “ஆஃப்டர் சூஷவ் லோஷன்” வாசனை மூக்கில் தாக்குகிற அளவு பக்கத்தில் நின்று . . . அவளுக்கு இன்னும் படபடப்புத் தீரவில்லை!

தமக்கை பாய்ந்ததன் உண்மைக் காரணம் புரியாமல், “என் பரிசைக் காட்டலாம் என்று கூட்டிப் போனேன்!” என்று, உண்மையைச் சொன்னான் தம்பி.

“பெரிய பரிசு! என்னமோ உலக சாதனை மாதிரி . . . “ என்று விடாமல் சினந்தவளுக்கு, அவனது முகம் வாடவும், அதுவும் கஷ்டமாகிப் போயிற்று.

“அதில்லை கிருபா, இதை அம்மா என்ன சொல்வார்கள் என்று, நினைத்துப் பார்! அதனால்தான் சொன்னேன்.” என்றாள் சமாதானமாக.

“நீ போய் மூட்டிக் கொடுத்தால் தவிர, அம்மா ஒன்றும் சொல்ல

மாட்டார்கள். . .”

எதிர்பாராத விதமாக, “உங்கள் அம்மா உங்கள் யாரையும் எதுவும் சொல்ல மாட்டார்கள்!” என்று, நரேந்திரன் குறுக்கிட்டான். “ஏனென்றால், மிக ருசியாக இருந்ததைக் கீழே வைத்துவிட்டுப் போக மனமில்லாமல், கையில் கேக் தட்டோடு, பரிசுக் கப்பைப் பார்க்கப் போனவன், நான்தான். அதனால், திட்டுவதானால், எனனைத்தான் திட்ட வேண்டும். அத்தோடு, பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பில், அடுத்ததையும் சொல்லி விடுகிறேன்., இந்த “ஐசிங்” போட்டு, இது மாதிரி சுவையான கேக் நான் சாப்பிட்டதே இல்லை. அதனால், இனி, இந்தக் கேக் செய்யும்போதெல்லாம், எனக்கும் கொஞ்சம் தர முடியுமா? சும்மா வேண்டாம். பணம் தந்து விடகிறேன். உங்கள் சேமிப்பும் கூடுமே!” என்றான்.

பயங்கரமான இந்த ஐஸ் வைப்பில், அவன் விரும்பிய பலன் விளைந்து, அக்கா தம்பி வாக்குவாதம் நின்றது. “உங்கள் பணத்தைத் திருப்புவதற்காகத்தான், இப்படி வேக வேகமாகச் சேர்ப்பதே. அதெப்படி, உங்களிடமே பணம் வாங்கி, உங்களுக்கே தருவது? இந்தக் கேக் சும்மாவே தருகிறோம். “ என்றாள் நளினி.

“ஆமாம் சார். காஃபி மாதிரி, இதையும் வட்டியாக நினைத்துக் கொள்ளலாம். செய்யும் போது எல்லாம், நானே, கொண்டு வந்து தருகிறேன்.” என்று, பழியைத் தன் மீது ஏற்றுக் காத்தவனுக்கு நன்றி காட்டினான், கிருபாகர்.

ஒருவாறு பேச்சு இணக்கமாக மாறிவிடவே, நரேந்திரன் விடை பெற்றுக் கிளம்பினான்.

ஆர்வமும், கலக்கமுமாக அருகில் நின்று நோக்கிய விழிகள் மனதில் அப்படியே நின்றன. அந்தக் கண்களில்தான், எத்தனை பாவங்கள்!

சீற்றம், திகைப்பு, கலக்கம், ஆர்வம், மகிழ்ச்சி!

அத்தனை பாவங்களிலும் எவ்வளவு உயிர்த் துடிப்பு!

வழக்கம் போலவே, பூந்தோட்டத்துக்குள் போய் வந்த புத்துணர்வுடன், தன் வேலைகளைப் பார்க்கப் போனான் , நரேந்திரன்.

குடும்பத்தினர் வெளியே தெரியாமல் தன்னைத் தேடியிருப்பார்களா? தேடி, இங்கே சென்னையில் இருப்பதைக் கண்டுபிடித்திருப்பார்களா என்றெல்லாம் யோசனை தோன்றியது.

ஒரே குறியாகத் தேடினால், கண்டுபிடிக்க முடியாமல் போகாது!

ஆனால், அவனது கடிதத்தின்படி, உறவு ஒரேயடியாக அறுந்துவிடுமோ என்று நினைத்துத் தயங்கியிருக்கலாம்.

அல்லது, அவனை, அவன் போக்கில் விட்டுவிடவும், முடிவு செய்திருக்கலாம்! ஊகூம். அப்படி எளிதில் விட்டுவிட மாட்டார்கள்! ஆனாலும், பார்க்கலாம்.

அவர்கள் விருப்பம் போல ஆட்டி வைக்க, அவன் ஒன்றும், அவர்கள் கயிற்றில் கட்டி வைத்திருக்கும் குரங்கு அல்ல என்று, எல்லோருமே தெரிந்து கொள்ளட்டும்!

ஏதாவது தொல்லை செய்தால், அதற்கும் அவன் மருந்து தயாராகத்தான் வைத்திருந்தான்!

இரண்டு தெரு தள்ளி இருந்த சூப்பர் மார்க்கட்டில், இரவு, காலை உணவுக்காக, ரொட்டி, சீஸ், பழங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு, நரேந்திரன்  வெளியே வந்தான்.

அங்காடி வாயிலில் நடந்த சிறு தகராறு, அவனது கவனத்தைக் கவர்ந்தது.

“இதோ, இரண்டு தெரு தள்ளி இருக்கிற துவாரகா காலனிக்குப் போவதற்கு, நூறு ரூபாயா? ஆனாலும், இந்த அநியாயம் பண்ணக் கூடாதுப்பா! விலை வாசி ஏற்றம் யாருக்குத்தான் பிரச்சினையாக இல்லை? எதிலும், ஒரு நியாயம் வேண்டும்ப்பா. . . .”

ஆட்டோ ரிக்ஷாக்கரனோடு வாதாடிக் கொண்டிருந்த பெண்மணியின் முகம் எதையோ நினைவூட்ட, அவர்கள் அருகில் சென்றான் நரேந்திரன்.

“மேடம், நானும் துவாரகா காலனிக்குத்தான் போகிறேன். அங்கேதான் வீடு.

வருகிறீர்களா, கூட்டிப் போய் விட்டுவிடுகிறேன்.” என்று அழைத்தான்.

அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “அங்கே , நான் உங்களைப் பார்த்தது இல்லையே!” என்றாள் பெண்மணி.

“புதிதாகக் குடி வந்து, பத்து நாட்கள்தான் ஆகிறது. மூன்றாவது தளம். என் பெயர் நரேந்திரன். அங்கே, மிஸ்டர் ஞா னமூர்த்திக்கு என்னைத் தெரியும். அவருடைய பிள்ளைகளுக்கும்! வேண்டுமானால், அவர்களோடு பேசிப் பாருங்கள். “

அந்தப் பெண், அவனைச் சந்தேகமாகப் பார்த்தது, அவனை வருத்தவில்லை. இன்றைய உலகில், அது போன்ற எச்சரிக்கைகள்,

மிகவும் அவசியமே! அது, இல்லாததாலேயே, எத்தனையோ கொடுமைகள் நிகழ்ந்து கொண்டும், இருக்கின்றன.

அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "ரொம்ப நன்றி." என்றவாறு, சாமான் பைகளைத் தூக்கக் குனிந்தாள் அந்தப் பெண்மணி.

அதே அங்காடியில்தான் சாமான்கள் வாங்கியிருக்கிறாள் என்று, பைகள் காட்டின.

"நீங்கள் ஏறுங்கள் மேடம்." என்று பைகளை உள்ளே வைக்க உதவினான் நரேந்திரன்.

"எந்த "ப்ளாக்"?" என்று கேட்டவாறே, "ஏ" பகுதியில் காரை நிறுத்தினான்.

"சரியாகத்தான் நிறுத்தியிருக்கிறீர்கள்." என்றுரைத்து அவள் இறங்க, சாமான் பைகளை, வீட்டு வாசலில் கொண்டு வந்து வைத்தான் அவன்.

அவள் கேள்வியாக நோக்க, "எல்லாம் ஒரு சின்ன ஊகம்தான்." என்று முறுவலித்தான் அவன்.

பதிலாக விரிந்த புன்னகையோடு, "உங்களிடம் கெட்டிக்காரத்தனம் தெரிகிறது என்று ஞானா சொன்னார். உள்ளே வாருங்கள். ஒரு காஃபி குடித்துவிட்டுப் போகலாம்." என்று சாவி கொண்டு கதவைத் திறந்து, அவனை உள்ளே அழைத்தாள் வசுமதி. திருமதி ஞானமூர்த்தி. நளினி, கிருபாகருடைய அன்னை.

அவன் பைகளை உள்ளே கொண்டு வைக்கையில், சமையல் அறையில் காஸ் அடுப்பு பற்ற வைக்கும் ஒலி கேட்டது. கூடவே, "உட்காருங்கள்." என்ற அசரீரியும்.

விரைவிலேயே, அவனுக்கும் தனக்குமாகக் காஃபியோடு வந்து அமர்ந்து, "அப்புறம்? காரை இடித்தது பிள்ளைகள்தானா? இரண்டில் எது? கிருபாவா?" என்று வசுமதி கேட்கவும், காஃபியை அருந்தப் போனவன், அவசரமாக அதைக் கீழே வைத்துவிட்டு, அவளைப் பிரமிப்புடன் பார்த்தான்.

"மே .மேடம்? உ . .உங்களுக்கு . .தெரியுமா?" என்று தடுமாறினான்.

"எல்லாம் ஒரு சின்ன ஊகம்தான்!" என்றவளின் சிரிப்பில் அவனால் கலந்துகொள்ள முடியவில்லை.

# அத்தியாயம் -4

கார் இடித்த விவகாரம் பற்றி, வீட்டில் யாரிடமும், எதுவும் சொல்லக் கூடாது என்று, அக்காவும், தம்பியும், நரேந்திரனிடம் பலமுறை வற்புறுத்திக் குறியிருந்தனர்.

அதிலும், தாயார் முன்னிலையில், வாயே கிறக்கக் கூடாது என்பது, இளவல்களின் உத்திரவு, வேண்டுகோள் எல்லாம்!

பின்னே, இந்தப் பெண்மணிக்கு எப்படித் தெரியும்? தெரிந்திராமல், வெறும் ஊகம், இவ்வளவு சரியாக இருக்க முடியுமா?

அவனது திகைப்பைப் பார்த்துவிட்டு, “காஃபி ஆறுமுன் குடியுங்கள். எப்படி என்று சொல்கிறேன். இரவில் அவர்கள் காரை ஓட்டிப் பழகுவது, எனக்குத் தெரியும். லைசன்சை வாங்கி வைத்துக்கொண்டு ஓட்டக் கூடாது என்றால், எப்படி இருக்கும்? தூரமாகப் போகக் கூடாது என்று சொல்லாமல் சொல்லி வைத்திருக்கிறேன். கார் நசுங்கல் பற்றி, அவர் சொன்னதுமே, எனக்குப் புரிந்துவிட்டது. பிள்ளைகள் சேமிக்கிற வேகத்தைப் பார்த்ததும், நிச்சயமாகத் தெரிந்து போயிற்று. ஆனால், கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டேன். செய்கிற தப்பைச் சீர் செய்யவும் தெரிய வேண்டும்தானே?”

வாவ்! என்றது, நரேந்திரனின் மனம். இந்தத் தாயின் மக்களாக வளர்வதால்தான், இரு பிள்ளைகளும், வெகு இயல்பாய், அத்தோடு நேர்மை உள்ளவர்களாகவும் வளர்கிறார்கள் போல! கொடுத்து வைத்தவர்கள்!

மனதில் நினைத்ததை அவன் கூற, “நீங்களும் அவர்களைக் காட்டிக் கொடுத்து விடவில்லை என்றுதானே, தெரிகிறது! நன்றி, தம்பி. அவர்கள் தருகிற பணத்தையும், தடை சொல்லாமல் வாங்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கஷ்டப்பட்டால்தான், எதையும் பின் விளைவு யோசித்துச் செய்கிற பழக்கம் வரும்.” என்றாள் அன்னை.

“நீங்களும் யோசித்துதான் வளர்க்கிறீர்கள்!” என்றான் அவன்.

மேலுக்குக் கூட மறுக்காமல் முறுவலித்தாள் அந்த அன்னை. “உண்மை, தம்பி. பிள்ளை வளர்ப்பது, இருபத்துநாலு இன் டு ஏழு என்பார்களே! அது போல, வாரத்தில் ஏழு நாட்களும், அந்த ஏழு நாட்களின் இருபத்துநாலு மணி நேரமும் யோசித்துச் செய்ய வேண்டிய ஒன்று. கெட்ட தன்மைக்கும், ஆர்வக் கோளாறுக்கும் வேறுபாடு கண்டு

பிடித்து, அதற்கேற்ப நடத்த வேண்டும். கண்டிப்பும் வேண்டும். விட்டுக் கொடுக்கவும் வேண்டும். நியாயமான விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுத்து . . .” என்று சொல்லிக்கொண்டே போனவள், அவனது சற்றுத் திகைத்த முகத்தைக் காணவும், சட்டெனப் பேச்சை நிறுத்தித் தலையசைத்தாள். “சாரி தம்பி. உங்களைப் போரடித்துவிட்டேன். “ என்று வருத்தமும் தெரிவித்தாள்.

“ஐயோ, போர் எல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் இரண்டு பிள்ளைகளும், இவ்வளவு கெட்டிக்காரர்களாக, அதே சமயம் நல்லவர்களாகவும் இருக்கிறார்களே, எப்படி என்று அவ்வப்போது யோசிப்பேன். இப்போது காரணம் தெரிகிறது. ஆனால் . . .இரண்டு பேரையும் காணோமே?” என்று வினவினான் நரேந்திரன்.

“அவரவர் தையல்காரரிடம் துணி வாங்கப் போயிருப்பார்கள். என் அக்கா மகள் திருமணத்துக்கு அணிய வேண்டியவை. அணிந்து பார்த்து, தப்பாக இருந்தால் சரி செய்து வாங்கி வர நேரமாகிறது என்று நினைக்கிறேன். “என்று, வாயிலைப் பார்த்தாள் வசுமதி.

விடை பெற்றுச் சென்று, சோஃபாவில் சரிந்தவனுக்குச் சற்று நேரம் ஒன்றுமே ஓடவில்லை.

ஏழு நாட்கள், இருபத்துநாலு மணி நேரம்!

அவன், அவ்வப்போது உணர்ந்த வெறுமை இதுதானோ?

தாயின் கவனம்!

அவனுடைய தாயாருக்கும், மகனிடம் அன்பில்லை என்று சொல்ல முடியாது.

மகனைக் கவனிப்பாள்! ஆனால், அதற்குத் தனியாக நேரம் ஒதுக்கிக் கவனிப்பாள். ஒதுக்கப்பட்ட நேரத்துக்குள், நன்றாகவே கவனிப்பாள்!

சரோஜினி, தன் முழு நேரத்தையும், மகனான தனக்காகவே செலவு பண்ண வேண்டும் என்று, நரேந்திரன் எதிர்பார்க்கவில்லை. அந்த அளவு சுயநலம், அவனுக்கு நிச்சயமாகக் கிடையாது! அந்த சமூகத்தில், அவளது நிலைமைக்கு, அது முடியவும் முடியாது.

ஆனால், அவனது விருப்பு வெறுப்பு பற்றிய அக்கறை . . . அவனுக்கு மனம் என்று ஒன்று இருக்கிறது என்ற எண்ணமே, பெற்றவள் உட்பட அங்கே யாருக்கும் இல்லையே என்பதுதான் அவனது குறையாக இருந்தது!

ஆனால், அது பற்றி, இன்று வருந்தி என்ன பயன்?

ஒரு பெருமூச்சுடன் “லாப்டாப்”பை எடுத்து, தன் வேலைகளில் மூழ்கினான் நரேந்திரன்!

இதற்குள், நரேந்திரனுக்குப் பலரும் பழக்கமாகிவிட்ட போதும், விளையாட்டு போரடித்தது போல, அவனுக்குத் தோன்றியது.

வழக்கம் போல, இரண்டு “செட்” போட ஆட்களும் குறையவே, “நாளை பார்ப்போம்.” என்று கிளம்பிவிட்டான்.

அக்கா, தம்பி இருவருமே ஏன் வரவில்லை என்று, அவன் மனம் குழம்பியது. யாருக்கும் உடம்பு சரியில்லை என்றால் . . .

போய்க் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வழக்கம்போலப் படிகளில் ஏறலானான். பாதிப்படி ஏறும்போதே , முதல் தளத்தில் கதவு திறந்து, “நான் போய்க் காரைத் திறக்கிறேன், அப்பா!” என்று நளினியின் குரலும் கேட்டது.

எங்கேயோ வெளியே போகிறார்கள் போலும். அதனால்தான் . . . என்பது வரைதான், நரேந்திரன் எண்ணம் ஓடியது.

அப்புறம், கண் முன்னே தெரிந்த தோற்றத்தில், அவன் கற்சிலையாகிப் போனான்.

வீட்டுக் காரைத் திறந்து வைப்பதற்காக, அந்த வீட்டுப் பிள்ளைகளுள் எப்போதுமே, ஒரு போட்டி நடக்கும். ஞானமூர்த்தி வேலைக்குக் கிளம்பும்போது, ஒருவர் மாற்றி ஒருவர் காரைத் திறந்து வைப்பார்கள். இப்படிச் சேர்ந்து வெளியே செல்லும்போது, யார் முதலில் கிளம்புகிறார்களோ, அவர்கள்! பெற்றவர் அனுமதித்தால், குடியிருப்பை விட்டு வெளியே செல்ல வசதியாகக் காரைத் திருப்பிக் கொணர்ந்து விடுவதும் உண்டு.

இன்று நளினி முதலில் கிளம்பி விடவே, கார்ச்சாவி, அவள் கைக்குக் கிடைத்து, காரைத் திறந்து வைப்பதற்காக, முன்னே ஓடி வந்தாள்.

பெரும்பாலும், ஜின்சும் டாப்புமாகப் பார்த்துப் பழகிய பெண்! ஜிலுஜிலுவென்று சம்கி வேலை செய்த சேலையில், உரிய நகைகள், அலங்காரத்துடன் பார்க்கையில், ரதியாகத் திகழ்ந்தாள்.

பாதிப் படிகள் ஏறிய நிலையில், பிரமிப்புடன் பார்த்தவாறு நரேந்திரன் நடு வழியில் அப்படியே நிற்க, வேகமாக இறங்கி வந்த நளினியும், மேலே செல்ல வழியின்றி நிற்கும்படி ஆயிற்று.

என்ன . . என்பது போலக் கேள்வியாக அவனை நோக்கியவளுக்கு, அவனது விழுங்கும் பார்வையில் முகம் சிவந்து போயிற்று.

வழி கேட்க அவளுக்கோ, வழிவிட அவனுக்கோ தோன்றவில்லை!

இப்படி எவ்வளவு நேரம் நின்றிருப்பார்களோ?

“சே! இந்த டை சரியாகக் கட்ட வராமல், என்னை லேட்டாக்கிவிட்டதே. . . “ என்ற கிருபாவின் எரிச்சல் குரல், இருவரையுமே தட்டி எழுப்பியது எனலாம்.

பெற்றவர்களும் வெளியே வருவது தெரியவும், நரேந்திரனுக்குச் சட்டென உணர்வு வந்து, நிலைமையைச் சமாளித்தான்.

ஒதுங்கி நின்று, நளினிக்கு வழி விட்டபடி, மேலே கதவைப் பூட்டிக் கொண்டிருந்த ஞானமூர்த்தியைப் பார்த்துப் பேசினான். “சார், இந்தக் குடியிருப்பு அசோசியேஷன் செயலாளரிடம் இருந்து ஒரு கடிதம் . . . .அதைத்தான் நளினியை நிறுத்திக் கேட்கத் தொடங்கினேன். ஆனால், நீங்கள் வெளியே போகிறீர்கள் போல இருக்கிறது. பரவாயில்லை., நாளைக்கு, வீட்டுக்கே வந்து கேட்டுக் கொள்கிறேன்!” என்று, மேலே படியேறிச் சென்றான்.

பார்வை வட்டத்துள் தெரிந்த அளவில், நளினியின் அகன்ற கண்களில் நன்றி மலர்ந்தது, தெரிந்தது.

நின்று, திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொள்வது சரியல்ல என்று உணர்ந்து, மேலே நடந்தவன், கிருபாவிடம் நின்று, அவனது டையை இறுகக் கட்டி, கோட்டுக்குள் சரியாக இழுத்து விட்டான்.

“எல்லோருமாகச் சேர்ந்து வெளியே போகிறீர்கள் போல!” என்றான் பொதுவாக.

கிரில் கதவின் பூட்டை இழுத்துப் பார்த்துவிட்டு, “ஆ . . மாம், நரேந்திரன். மைத்துனி மகளுக்குத் திருமணம் என்றேனில்லையா? இன்று, மாப்பிள்ளை அழைப்பும், பட்டுக் கட்டுதலும். நாளைக்குத் திருமணம். முழுதாக எங்கள் குடும்பம் அங்கே நிற்க வேண்டும் அல்லவா? அதுதான் கிளம்பிக் கொண்டிருக்கிறோம். வரட்டுமா? உங்கள் கடிதம் பற்றி, நாளைக்குப் பார்ப்போம். நாளைக்கும், மதிய உணவு முடிந்துதான் புறப்பட முடியும். அதன் பிறகு பார்ப்போம். “ என்று விடைபெற்றுச் சென்றார்.

முறுவலித்துவிட்டு வசுமதியும், டையைத் தொட்டுக் காட்டி, “தாங்க்ஸ்” என்று முணுமுணுப்புடன் கிருபாவும், வீட்டுத் தலைவரைப் பின் தொடர்ந்தனர்.

அவசரமாக மாடியேறிச் சென்று, பக்கவாட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

ஞானமூர்த்தி காரைத் திருப்பிக் கொணர்ந்து நிறுத்தியிருக்க, குடும்பத்தினர் அதில் ஏறிக் கொண்டிருந்தனர். கடைசியாக ஏறியது, நளினி!

கட்டிப் பழக்கமற்ற சேலை, தட்டி விடாமல், கவனமாக ஏறியதில் தாமதம் ஆகியிருக்கலாம். கொசுவங்கள் கார்க் கதவில் மாட்டிக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டுக்கொண்டு ஏறி, கார்க் கதவை மூடப் போனவளின் பார்வை, மின்னலாய் அவனது ஃப்ளாட் பக்கம் உயர்ந்து பாயத் தொடங்கி, சட்டென அடக்கப் பட்டது போல உடனேயே இறங்கிவிட, கதவு மூடப்பட்டுக் கார் கிளம்பியது.

என்னவோ மனதுக்குள் இம்சை செய்தது, அவனுக்கு.

அவன் பார்த்தது, அவளுக்குப் பிடித்திருந்ததா? மறுபடியும் பார்க்கிறானா என்று, ஆவலாக நோக்கினாளா?

ஆனால், பாராமலே போய்விட்டாளே! ஏன்?

எந்தக் கேள்விக்கும், அவனிடம் பதில் இல்லை.

ஆனால், இது போன்ற அலங்காரங்களுடன், நளினியை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற ஆசை மட்டும், ஒரு பேரலையாக அவனுள் எழுந்தது. அடக்க முடியாத . . . அடக்க மனம் வராத அலை!

விரும்பிய விதமாகப் பார்ப்பது, அப்படி ஒன்றும் கடினமான பெரிய விஷயமும் இல்லை!

மறுநாள்தான் அந்தத் திருமணம். அதற்கும், இப்படி அலங்கரித்துக் கொண்டுதானே, கிளம்புவாள்?

எப்போது திருமணம்?

அவசரமாகச் சென்று, தினசரி காலண்டரை எடுத்து மறுநாளைய விவரம் பார்த்தான்.

நல்ல நேரம், முகூர்த்த நேரம் எல்லாம் எப்போது என்று ஓர் ஓரமாகக் குறிக்கப் பட்டிருந்தது.

காலை ஒன்பதிலிருந்து, பத்தரை வரை முகூர்த்த நேரம்!

இவர்கள் கூடவே இருக்க வேண்டியவர்கள்! அதனால், சீக்கிரமே கிளம்பி விடக் கூடும்.

காலையில் கடற்கரைப் பக்கம், இருவரையும் காணாதது,

நரேந்திரன் எதிர்பார்த்ததுதான். ஆனால், காலை உணவுக்கே ஞானமூர்த்தி குடும்பம் திருமண

மண்டபத்துக்குச் செல்லக் கூடும் என்று தோன்றியதும், அதற்கு மேல், அவனுக்குக் கடற்கரையில் இருக்க முடியவில்லை.

குடியிருப்பின் ஒரு புறத்தில், சிறுவர்களுக்காகச் சிறு பூங்கா ஒன்று பராமரிக்கப்பட்டு வந்தது.

அதனுள் ஓர் இருக்கையில் அமர்ந்து, பத்திரிகை படிக்கிற பாவனையில், நளினி வீட்டை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்.

அவன் எண்ணியது போலவே, ஏழு மணிக்கே, நளினி குடும்பம் வீட்டை விட்டுக் கிளம்புவது போலத் தோன்றவும், விரைந்து வந்து, ஆனால், மெல்லப் படியேறலானான்.

அவனுக்கு, நளினியை அருகில் பார்க்க வேண்டும். முன் தினம் போலவே! பக்கத்தில்! தெளிவாக!

எப்படியோ, இன்றும் நளினியே முதலில் அலங்காரம் முடிந்து வெளியே வந்தாள்.

சேலையே. ஆனால், நல்ல ஜரிகைப் பட்டுச் சேலை! காதுகளில் ஜிமிக்கி, மாட்டல்! கழுத்தில் அட்டிகை! இரு கைகளிலும் நிறைய வளையல்கள். இல்லையோ என்பதான இடுப்பை இருப்பதாகக் காட்ட, மெலிதாக ஓர் ஒட்டியாணம்! சின்னதாக ஒரு நெற்றிச் சுட்டியும்!

பேரழகுதான் என்றாலும், எதிர்பார்த்திருந்ததாலோ, என்னவோ, இப்போது நரேந்திரனால் பேச முடிந்தது.

“எப்படி” என்று கேட்பவள் போல, ஆவலாக அவன் முகத்தைப் பார்த்தபடி, அவளும் நின்றாள்.

பிரமாதம் என்பதைச் சொக்கினாற்போலக் கண் மூடித் திறந்து காட்டிவிட்டு, “ஆமாம், இப்படிப் போய் நின்றால், யார் மணப்பெண் என்று குழப்பம் வந்துவிடாதா? எதற்கும், மணமகன் கிறங்கிப் போய், உன் கழுத்தில் தாலியைக் கட்டிவிடாமல், கவனமாக இரு!” என்று அவன் எச்சரிக்க, நளினிக்குக் கலீரென்று சிரிப்பு வந்தது.

“ஐயோ! அதற்கெல்லாம், என் அக்கா விட்டுவிட மாட்டாள்!” என்றவள் மறுபடியும் நகைத்தாள்.

“என்ன?” என்று வந்த வசுமதியிடம் விவரம் கூற, அவளும் சேர்ந்து நகைத்தாள்.

“அப்படிப் பார்த்தால், ஐந்து ஒன்றுவிட்ட சகோதரி உறவுப்

பெண்கள், இன்று, இதே அலங்காரத்தில் இருப்பார்கள்! ஆனால், நீங்கள் சொன்ன குழப்பம் மட்டும் வராது. ஏனென்றால், மணப் பெண்ணின் சேலை மட்டுமே கொடிப்பட்டு! " என்று விளக்கினாள்.

ஆனால், விளக்கத்தில், அவன் இன்னமும் அதிகமாகக் குழம்புவதைக் கண்டு, "கொடிப்பட்டு என்றால், மணப் பெண்ணின் சேலையில், கொடிகளில் இலைகள், பூக்கள், காய் கனிகள் என்று ஜரிகையால் வேய்ந்திருக்கும். அதைப் போலத் தழைத்து வாழ வேண்டும் என்பது ஆசை!" என்று தெளிவுபடுத்தினாள் தாய்.

நளினியின் அருகாமையை விட்டு நகர மனமற்று, நரேந்திரன் பேச்சுக் கொடுத்தான். "நேற்று, ஃபுல் சூட்! இன்று கிருபாவுக்கும் பட்டு வேஷ்டியா .. " என்று அவன் கேட்டு முடிக்குமுன், நளினி கலகலவென்று சிரிக்கத் தொடங்கினாள்.

"அப்புறம், நீங்கள் சொன்ன மாதிரி, யார் மாப்பிள்ளை என்று குழப்பம் வருவதற்கா?அதெல்லாமில்லை. அவன் என் சுரிதாரை எடுத்து மாட்டிக் கொண்டிருக்கிறான்!" என்று மேலும் நகைத்தாள் அவள்.

"ஏய், சும்மா இருடி! சும்மாவே, மற்றவர்களோடு ஒத்து இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே, கிருபா இந்தக் கமீஸ் அணிகிறான். நீ வேறு, கேலி செய்து, அவனுக்கு மூடைக் கெடுக்காதே! " என்று மகளை அதட்டினாள் வசுமதி.

சமயத்தில் கிருபா வந்து "அம்மா, இந்த உருமால் நிற்க மாட்டேன் என்கிறதே!" என்று தலையை நீட்ட, "அது துப்பட்டா பையா. உருமால் என்று சொன்னால் மட்டும் ஆண்கள் உடையாகி விடுமா? இது, எங்கள் சுரிதாரேதான்! " என்று நளினி மேலும் கேலி பண்ண, அவன் முகம் கன்றிச் சிவந்தது.

"அம்மா, எல்லாம் உங்களால்தான். எதற்காக, இந்த உடைக்குச் சரி என்றீர்கள்?" என்று தாயிடம் பாய்ந்தான் பையன்.

அவன் மேல் இரக்கம் கொண்டு, "இந்த உடைக்கு என்ன, கிருபா? குடும்பத்தில் ஒரு முக்கியமான விழா என்றால், வித்தியாசமாக இப்படி அணிவதுதான். என் அக்காவின் திருமணத்தின்போது, நானும் இது போலத்தான் அணிந்திருந்தேன். அதிலும் பளபளவென்று, டிஷ்யூ துணி! பழைய முகலாய மன்னர்கள் மாதிரி, தலையில் வேறு, எதையோ மாட்டி விட்டிருந்தார்கள். கடவுளே! அது இடையில் கீழே விழுந்துவிடாமல் சமாளிக்குமுன் நான் பட்டபாடு! அந்தக் கஷ்டம் தவிர, அக்கா திருமணத்தைப் பற்றி, வேறு எதுவுமே எனக்கு நினைவுக்கே வருவதில்லை!" என்று நரேந்திரன் கூற,

அந்தக் கற்பனையில், எல்லோருமாகச் சேர்ந்து நகைத்தார்கள்!

சிரிப்பினூடே, “சார் எங்கே, ஆன்ட்டி? எப்போதும், முதல் ஆளாகத் தயாராகி, உங்களை விரட்டிக் கிளப்பியதாகக் கூறுவாரே!” என்று நரேந்திரன் கேட்க, அங்கே இன்னொரு சிரிப்பு வெடித்தது.

“எப்போதும் அப்படித்தான். இன்றும் காலையிலேயே எங்களை எழுப்பிவிட்டது ஞானாதான். “நீங்கள் எல்லோரும் கிளம்புங்கள்., எனக்கு இரண்டே நிமிஷம் போதும்” என்று எங்களை விரட்டிக் கிளப்பியதும், அவரேதான். ஆனால் . . .” என்று வசுமதி இழுக்க, “டொட்டடாய்ங்!” போட்டார்கள் மக்கள்.

“ஐயோ, விஷயத்தைச் சொல்லுங்களேன்ப்பா! எனக்கு ஆவல் தாங்க முடியவில்லையே!” என்று அவசரப்பட்டான் நரேந்திரன்.

“பெரிதாக ஒன்றுமில்லை! குடும்பத் தலைவர்கள் எல்லோருக்கும், பட்டு வேஷ்டி ஷர்ட்! வேஷ்டியோடு, அய்யா இப்போது மல்லாடிக்கொண்டு இருக்கிறார். எங்கள்

திருமணத்துக்குப் பிறகு, இப்போதுதான் கட்டுகிறாரா, அங்கும் இங்கும் இழுத்துக்கொண்டு போகிறதாம். இந்த வால்களுக்குச் சிரிப்பு வருகிறது. . . .”

“ஆஹா! எங்களுக்கு மட்டுமா சிரிப்பு வந்தது? நீங்கள் எப்படியாம்?” என்று கிருபா கண்ணை உருட்ட, தாயின் புன்னகை விரிந்தது. “சிரிப்பை அடக்க முடியவே இல்லை, நரேந்திரன். அதுதான், இவன் ரெடியானதும், நானும் சேர்ந்து வெளியே வந்துவிட்டேன். “ என்றாள் பெற்றவள்.

எல்லோருமாகச் சிரித்துக் கொண்டிருந்தபோதே, ஞானமூர்த்தி வெளியே வந்துவிட, எல்லோர் கவனமும், அவரது வேஷ்டிமீது பாய்ந்தது.

கவனித்து, அசடு வழிந்தாலும், “என் வேஷ்டி புராணத்தைப் பாடி முடித்து விட்டார்கள் போல! அப்பாடியோவ்! ரொம்ப காலமாக, வேஷ்டியை மறந்தே போய் விட்டுவிட்டது, இவ்வளவு நேரம், வேலை வாங்கிவிட்டது! பட்டு என்பது வேறு! இன்னும் ரொம்ப மோசமாகத்தான் இருக்கிறதா, நரேந்திரன்?” என்று, அவனிடம் அபிப்பிராயம் கேட்டார் ஞானமூர்த்தி.

மனைவி மக்களிடம் கேட்டால், மறுபடியும் கேலியைத் தொடங்கி விடுவார்கள் என்ற பயம் போலும்!

காலை ஒட்டிக் கீழே ஒரு சீராக இல்லாமல், அங்கங்கே தழைந்து

தொங்கினாலும், மொத்தத்தில் பரவாயில்லை என்றுதான், நரேந்திரனுக்குத் தோன்றியது. அத்தோடு, கல்யாணப் பரபரப்பிலும், கூட்டத்திலுமாக, அப்படி அவரது காலையே யார் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

அவன் சொன்னதும், அவருக்கு நிம்மதியாகிவிட்டது.

“சரியாகச் சொன்னீர்கள். என்னோடு பேசுகிறவர்கள், என் முகத்தைப் பாராமல், காலையா பார்த்துப் பேசுவார்கள்? ஆனால், ஒன்று, பையன்கள் எல்லாரும், அவ்வப்போது வேஷ்டி கட்டிப் பழகிக் கொள்ள வேண்டும். நீங்களும்தான் நரேந்திரன்! இல்லாவிட்டால், உங்கள் திருமணத்தன்று திண்டாட்டமாகிவிடும். பெரியவன் சொல்கிறேன். நினைவு வைத்துக் கொள்ளுங்கள்.” என்றவாறு, கதவைப் பூட்டலானார் ஞானமூர்த்தி.

மற்ற மூவருமே அவனைப் பார்த்து சிறு நகை செய்தபோதும், நளினியின் பார்வையில் தனியாக என்னவோ இருப்பது போல, நரேந்திரனுக்கு மனம் பரபரத்தது.

என்ன இது, விடலைப் பையனைப் போல என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்ட போதும், விலகிச் செல்லவும், அவனுக்கு மனம் வரவில்லை.

“ஐயையோ, இந்தக் கமீசே உயிரை வாங்குகிறது. இதில் வேஷ்டி வேறேயா? இந்த வேஷ்டி கட்ட வேண்டியிருக்கும் என்பதாலேயே, நான் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை. எல்லாருக்கும் சொல்லிவிட்டேன். யாரும், என்னைத் திருமணம் செய்யச் சொல்லிக் கேட்கவே கூடாது!” என்று கிருபா அறிவிக்க, எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

“ஆமாமடா. பதினேழு வயதில், ரொம்ப அவசரமான அறிவிப்புதான்!” என்று வசுமதி கூற, அவன் அசடு வழிந்தான்.

இந்தக் கலகலப்பில் கலந்துகொண்டு, குடும்பத்தோடு கூடவே நடந்து சென்று, அவர்கள் கிளம்புகையில், கையாட்டி விடை கொடுத்தான், நரேந்திரன்!

அன்றிலிருந்து, மெல்ல அவர்கள் பழகும் விதத்தில், ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டது.

ஞானமூர்த்தியின் வீட்டுக்கு, நரேந்திரன் அடிக்கடி சென்றான்.

நண்பன் அனுப்பிய மாம்பழம் தர, ஃபாக்டரியில் ஒரு பெரிய வேலை முடித்ததைக் கொண்டாடுவதற்காக இனிப்புக் கொடுக்க என்று

வந்து வைப்பான்.

வாங்கி வைத்துக்கொண்டு சும்மா அனுப்ப முடியுமா? காஃபி, சிற்றுண்டி பேச்சு . .எல்லாம் நடக்கும்.

அவனது வீட்டில் சில மாறுதல்கள் செய்ய, தானே காஃபி போட்டுக்கொள்வது பற்றி அறிய, நூடுல் போலச் சில எளிய வகைச் சமையல் செய்யும் விதம் கேட்க, என்று அவனுக்குப் பல தேவைகளும் ஏற்பட்டன.

விடுமுறை நாட்களில், குடியிருப்பு நிர்வாகக் குழுவின் அறிக்கைகள், விதி முறைகள், சந்தா போன்று, ஞானமூர்த்தியிடம் விசாரிக்கவும், விவாதிக்கவும், வேண்டியிருந்தது.

அத்தோடு, கேரம், ஸ்கிராபிள் என்று சின்னவர்களோடு விளையாட்டிலும் கலந்துகொள்வான்.

பொதுவாக, உணவு வேளைகளில் வரமாட்டான். ஓரிரு முறை அழைத்தபோதும், உணவுக்கென்று, அங்கே உட்காரமாட்டான். ஏதாவது காரணம் சொல்லிக் கிளம்பி விடுவான்.

மற்றபடி, அலுவல் நேரம் முடிந்து வந்தால், பெரும்பான்மைப் பொழுது, அவனுக்கு, நளினியின் வீட்டில்தான் கழிந்தது!

இதனிடையே, நரேந்திரனின் “சார், மேடம்” காணாமல் போய், “அங்கிள், ஆன்ட்டி” ஆனதை, யாருமே கவனிக்கவில்லை.

அன்று கேரம் விளையாடும்போது, நளினியின் கையைப் பற்றித் தடுத்து, “இப்படி அடித்தால் மைனஸ்தான் விழும். பார்த்து அடி.” என்றான் நரேந்திரன்.

சும்மா என்றால், விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த வசுமதி, இதைப் பற்றி ஒன்றும் நினைத்திருக்க மாட்டாள்.

இந்தக் காலத்தில், அருகில் அமர்வதையோ, இப்படி, இயல்பாகத் தொடுவதையோ, யாரும் பெரிதாகக் கருதுவது இல்லை. பெண்ணுக்கும் ஆணுக்கும் . .ஒரு தோழிக்கும் தோழனுக்கும், இன்றைய இளம் மக்கள் வேறுபாடு காண்பது கிடையாது.

ஆனால், நளினி, அதன்பின் சரியாக விளையாடவே இல்லை! தற்செயலாகவே கூட இருக்கலாம். ஆனால், நரேந்திரன் பற்றிய இடத்தை மறுகையால், மகள் ஒரு தரம் தடவியதைப் பார்த்த பிறகு, ரொம்ப நேரம், அவளுக்கு அதே நினைவாக இருந்தது.

வசுமதியின் மனம் சற்றே அலைபாயத் தொடங்கியது.

நளினியைக் கண்டதும், நரேந்திரன் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியும், உற்சாகமும், உண்மைதானா? அதே போல மகள் முகமும் மலருகிறதோ?

அல்லது, இதெல்லாம் அக்கறையுள்ள தாய் மனதின் அதிகப்படியான கற்பனையா? ஏனெனில், கிருபாவிடமும், நரேந்திரன் அதே உற்சாகத்தோடுதான் பழகினான். சொல்லப் போனால், அவனுக்குச் சில பாடங்கள் கூடக் கற்றுக் கொடுத்தான்.

அவன் அடிக்கடி வருவது கூட, இங்கே அவனோடு பழகத் தொடங்கிய முதல் குடும்பம் என்பதாலும் இருக்கலாமே!

ஆனால், அவசரப்பட்டு எதையும் கேட்டு விடவும், அவளுக்கு மனமில்லை. தாய் மனதின் ஆதங்கத்தில், இயல்பாகப் பழகும் ஒரு நல்ல மனிதனை நோகடிக்கவும், அவளுக்குப் பிடிக்கவில்லை.

பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொள்ளும் என்பார்களே, அது போலப் பெரிய தப்புத் தவறு ஏதும் நேரக் கூடும் என்ற பயம் அவளுக்குக் கிடையாது.

பெற்ற மகளை, அவள் முழுமையாக நம்பினாள். அதே போல, நரேந்திரனின் கண்ணியத்திலும், அவளுக்கு உறுதி இருந்தது.

ஆனால் மகளின் மனதில், ஈடுபாடு ஏற்பட்டுவிட்டால்?

அலைபாய்தலை வெளியே காட்டிக் கொள்ளாமல், ஆனால் மிகுந்த கவனத்துடன் இருக்கத் தொடங்கினாள் தாய்!

ஒரு நாள், தொண்டை வலி என்று, கிருபா "ஜாகிங்" செல்லவில்லை. பெண் மட்டும் தனியாகச் செல்ல வேண்டாம் என்பது, வசுமதிக்கு.

"அவன் உடம்புக்கு எதையாவது இழுத்துக் கொண்டால், என்னையும் மருந்து குடிக்கச் சொல்வீர்கள் போலிருக்கிறதே! அம்மா, ப்ளீஸ்!" என்று சிணுங்கினாள் பெண்.

"அதென்ன "தனி"? சும்மாப் பொத்திப் பொத்தி வளர்த்துப் பயங்கொள்ளியாக ஆக்கக் கூடாது. நம் குடியிருப்புப் பகுதி ஆட்களே. நிறையப் பேர் கடற்கரையில் நடக்கிறார்கள். நரேந்திரன் வேறு, இந்த நேரத்தில்தான் போகிறார். உன் மகளுக்கு ஒன்றும் ஆகிவிடாது. சும்மா அனுப்பு." என்று ஞானமூர்த்தியும் சொல்லி விடவே, நளினி மட்டும் ஒரு துள்ளலோடு கடற்கரைக்குச் சென்றாள்.

"ஜாக்" பண்ணத்தான் போனாள். ஆனால், எதற்கு இந்த

அதிகப்படித் துள்ளல்?

நளினி திரும்பி வருவதற்கு, வழக்கத்தை விடவும் கிட்டத்தட்ட அரை மணி நேரம் அதிகம் ஆகிவிடவும், வசுமதிக்கு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை.

போய்ப் பார்த்துவிட்டு வருமாறு மகனை அனுப்பலாமா என்று யோசித்தாள்.

ஆனால், "உன் பெண் என்ன குழந்தையா, கடற்கரையில் தொலைந்து போவதற்கு? யாருடனாவது பேசிக் கொண்டிருப்பாள். சீக்கிரமே வருவாள். " என்று தன் யோகாசனத்தை முடித்தார் ஞானமூர்த்தி.

ஆனால் மனைவியின் பரபரப்புத் தாளாமல் எட்டிப் பார்த்தவர், மனைவியைக் கூப்பிட்டுக் காட்டினார்.

ஏதோ பேசியபடி, நரேந்திரனும், நளினியும் படியேறி வந்து கொண்டிருந்தனர்.

இருவர் துணிகளும் முட்டி வரை நனைந்திருந்தன.

இதுவும்தான் எனக்குப் பிரச்சினை என்று எண்ணியதைச் சொல்லாமல் அவள் பேசாதிருக்க, எல்லோரிடமும் ஒரு புன்னகையைச் சிந்திவிட்டு, நரேந்திரன் மேலே படியேறிச் சென்றான்.

அவனுக்குப் பதிலாகக் கையாட்டிவிட்டு, "என்னடாம்மா, இவ்வளவு நேரம்? உன்னைக் காணோமே என்று எட்டிப் பார்த்துப் பார்த்து, அம்மாவுக்குக் கழுத்து வலியே வந்துவிட்டது. " என்றார் ஞானமூர்த்தி.

"அலையில் நின்று, நரேனும் நானும் பேசிக் கொண்டே இருந்தோமா, நேரம் போனதே, தெரியவில்லைப்பா." என்றவாறு மிதியடியில் கால் மணலை நன்றாகத் தட்டிவிட்டு, வீட்டினுள் சென்றாள் மகள்.

நரேனும்!

ஆனால், இதிலும்தான் பெரிதாக என்ன இருக்கிறது? பழகப் பழக, இந்தப் பெயர்க் குறுக்கம், தானாக வந்துவிடுகிறது. கிருபா கூட, நரேன் சார் என்றுதான் சொல்கிறான்! நரேந்திரன் சார் என்று நீட்டி முழக்குவதில்லை.

காலை உணவின்போது, சாதாரணமாகப் பேசுகையில், "கடற்கரையில் அவ்வளவு நேரம், அப்படி என்னடி பேசினீர்கள்? "

என்று குரல் மாறாமல் கேட்டாள் அன்னை.

“அது . . “ என்று சொல்லத் தொடங்கி, புருவம் சுருக்கிச் சற்று யோசித்துவிட்டு, “என்ன பேசினோம் என்று ஒன்றும் தெரியவில்லையேம்மா! ஆனால், ஏதோ வேடிக்கையான பேச்சு. அதனால், நிறையச் சிரித்தோம் என்பதுதான் நினைவு வருகிறது.” என்றாள் பெண்.

வசுமதியின் வயிற்றுக்குள் என்னவோ பகீரென்றது!

# அத்தியாயம் -5

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம்!

அதில் பாதிப் பொழுது, நளினி கடற்கரையில் ஓடினாலும் ஓடியிருக்கலாம்.

ஓடி முடித்தால், நேரே வீட்டுக்கு வராமல், அதென்ன பேசிக்கொண்டு நிற்பது?

பேசியது என்ன என்று ஓரளவேனும் தெரிந்திருந்தால் கூட, வசுமதிக்கு, இவ்வளவு கவலை ஏற்பட்டிராது! ஒன்றுமே நினைவு இல்லை என்றால்?

“ஸ்வீட் நத்திங்ஸ்”“ என்பார்களே, அது போன்ற பேச்சா? அதுதான், இப்படி என்னவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத, இனிப்புப் பேச்சு! அதுதான், இப்படி மனதில் இனிமையை மட்டும் விட்டுவிட்டு, அடியோடு மறைந்து போவது!

அவளும், அந்த வயதைத் தாண்டி வந்தவள்தான். வண்டின் ரீங்காரம் போலக் கணவனும் மனைவியுமாகப் பேசியதில், எதுதான் தெளிவாக நினைவில் நிற்பது?

தாயின் மனம் மிகவும் உளைந்தது.

அவளுக்கே தெளிவில்லாதபோது, கணவனிடம் எதைச் சொல்லவும், வசுமதிக்கு விருப்பம் இல்லை. ஆனால், ஒத்த மனமுள்ள கணவர் அல்லவா?

இரு தினங்கள் கவனித்துவிட்டு, ஞானமூர்த்தியே, மனைவியிடம் என்னவென்று விசாரித்தார்.

வசுமதியின் கலக்கத்தை அறிந்ததும், “பூ!” என்று சிரித்தார். “குட்டிம்மா சின்னக் குழந்தையடி! பிள்ளை மனம்! அவளைப் போய்க் கண்டபடி பேசுகிறாயே!” என்றார், ஞானமூர்த்தி.

“எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால், அவளுக்கு வயது இருபத்தியிரண்டு. அதை மறக்கக் கூடாது! என்று, தாயார் நினைவூட்டினாள்.

“அதற்கென்ன? இன்னும் இரண்டு ஆண்டுகள், சுதந்திரமாகச் செல்லம் நம்மோடேயே இருக்கட்டும். அப்புறம் கல்யாணத்தைப் பார்க்கலாம். “ என்றார் தந்தை.

திடுமென, “நரேந்திரனை வேண்டுமானால், வீட்டுப் பக்கம் வர வேண்டாம் என்று சொல்லி விடவா?” என்று கேட்டு மனைவியை அதிர வைத்தார் ஞானமூர்த்தி.

“ஐயோ வேண்டாம்!” என்றாள் மனைவி. “நிச்சயமான எதுவும் தெரியாமல், எதற்காக, நடவடிக்கை எடுப்பது! நரேந்திரனைப் பார்த்தால், தப்பானவராகவும் தெரியவில்லை. அத்தோடு, எல்லாமே, பாச மனதின் அனாவசியக் கவலையாகவும் இருக்கக் கூடும் என்பதும், இருக்கிறதே! நமக்கே ஒரு தெளிவில்லாதபோது . . .”

“நமக்கு என்று சொல்லாதே. உனக்கு என்பதோடு நிறுத்திக் கொள். அவர்கள் சின்னப் பிள்ளைகள். கள்ளமற்று, இயல்பாகப் பழகுகிறார்கள். அதைப்போய், நீயும் குழம்பி, தெளிவாக இருக்கிற என்னையும் குழப்பியடிக்காதே. இத்தோடு, இந்த விஷயத்தை மற!” என்று தீர்ப்பு வழங்கிவிட்டு, நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினார் ஞானமூர்த்தி.

கொட்டக் கொட்ட விழித்திருந்தாள், பெற்றவள்.

வசுமதியின் இந்தச் சஞ்சலம், விரைவிலேயே ஒரு முடிவுக்கு வந்தது.

அன்று, நளினி “கல்ச்சுரலி”ல் கற்ற ஒரு வகை பிஸ்கட்டைச் செய்வதில், வீடு முழுக்க ஈடுபட்டிருந்தது. மாவுக் கலவையை நளினி தயாரித்து வைக்க, அவளோடு சேர்ந்து மற்றவர்களும், ஆளுக்குக் கொஞ்சம் மாவை எடுத்து, பிஸ்கட்டுகளாக வடிவமைத்துக் கொண்டிருந்தனர்.

“இது கையெல்லாம் ஒட்டுகிறதே, எப்படி நட்சத்திரம் போலச் செய்ய முடியும்?” என்று கேட்டு, என்னென்னமோ விதமான வடிவங்களை, ஞானமூர்த்தி தட்டிக் கொட்டிச் செய்து கொண்டிருந்தார்.

வசுமதியும், நளினியும், சரியான வடிவில் செய்து அடுக்க, கிருபாவின் நட்சத்திரமும், பார்க்கப் பரவாயில்லாமல் வந்தது.

நளினியின் நெற்றியில் விழுந்த ஒரு கற்றை முடி, அவளை ஒழுங்காக வேலை செய்ய முடியாமல், குறுக்கிட்டது.

கையால் அதை ஒதுக்கியபடியே, பிஸ்கட் செய்ய, அவளுக்குச் சற்று சிரமமாக இருந்தது. ஆனால், எழுந்து சென்று கையைக் கழுவிவிட்டு, மயிர்ச் சுருளைச் சரியாக ஒதுக்கி விட்டுக்கொண்டு வரவும், அவளுக்கு மனமில்லை. முடிந்த அளவு மாவு படாமல், கூந்தலை ஒதுக்கி விட்டவாறே, வேலையில் ஈடுபட்டாள்.

அயனான இந்த நேரத்தில்தான், இயற்கை உரம் போட்டு வளர்ந்த பூவாம் என்று சொல்லிக்கொண்டு, கோவையிலிருந்து வந்த ஒரு பெரிய காலிஃப்ளிவரோடு, நரேந்திரன் வந்து சேர்ந்தான்.

நாலு பேரும் சேர்ந்து வேலை செய்வதைப் பார்த்ததும், “ஓ! அன்று சொன்னாயே, ஜாம் பிஸ்கட் என்று, அதுவா? பரவாயில்லை., மூன்று பணியாட்கள் இருப்பதால், உன் வேலை சீக்கிரம் முடிந்துவிடும். ஆனால் . .” என்று நளினியைப் பார்த்தே பேசியவாறு, அவள் அருகில் சென்றான்.

“சற்று அசையாதிரு.” என்றவன், அவளைத் தொல்லை செய்த கூந்தல் கற்றையைக் காதின் பின்புறமாக ஒதுக்கி விட்டான்.

அவள் விழி மலரப் புன்னகைக்கவும், “இன்னும் சற்றுப் பொறு.” என்று, தன் கைக்குட்டையை எடுத்து, கூந்தலை ஒதுக்கும் அவளது முயற்சியின்போது நெற்றியில் பட்டிருந்த மாவையும் துடைத்துவிட்டான்.

பார்த்துக் கொண்டிருந்த பெற்றவர்கள் இருவரும் பிரமிப்பில் வாயடைத்து, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

நரேந்திரன் செய்த எல்லாமே, நன்றாகப் பழகத் தொடங்கிவிட்டவன் இயல்பாகச் செய்ததாகக் கூட, கஷ்டப்பட்டு ஒரு விளக்கம் சொல்லிக் கொள்ளலாம்.

ஆனால், ஏதோ, அந்த ஹாலில், அவர்கள் இருவர் மட்டுமே இருப்பது போல, அவர்கள் இருவரின் அந்தப் பார்வை!

அதற்கு வேறு விளக்கம் ஏது?

மாவைத் துடைத்துவிட்டவாறே, “நாங்கள் எல்லாம், பிஸ்கட் எப்போது தயாராகும், ஒரு வெட்டு வெட்டலாம் என்று காத்துக் கொண்டிருந்தால், இப்படி மாவாகவே காலி பண்ணிக் கொண்டு இருக்கிறாயாக்கும்! ஆனால், இது என்ன புது, டெக்னிக்? வாயால் உண்ணாமல், நெற்றி வழியே சாப்பிடுவது?” என்று கேலி பேசினான் நரேந்திரன்.

செல்லச் சிணுங்கல் போலத் தலையசைத்தாள் நளினி.

“ஐயோ, இது புது மாதிரி “ஃபேஷியல்” நரேன் சார். அக்கா ஆசையாகப் போட்டதை, அநியாயமாகத் துடைத்துவிட்டீர்களே!” என்று கிருபா ஊடுபா ஓட்ட, “அச்சச்சோ, அப்படியா விஷயம்? தெரியாமல் துடைத்துவிட்டேனே! சாரிமா! சாரிமா!” என்று நரேந்திரன் மன்னிப்புக் கேட்பது போல நடிக்க, மூவரும் கலகலவென்று

நகைக்கலாயினர்.

திகைப்பும் கோபமுமாக ஏதோ சொல்லத் தொடங்கிய கணவரைப் பார்வையால் தடுத்தபடி, “இது ஊட்டி பூவா, நரேந்திரன்? அங்கேதான், இவ்வளவு பெரிய பூக்கள் கிடைக்கும் என்பார்கள்.” என்றாள் வசுமதி.

தனிமையில் மனைவியைக் காய்ந்தார் ஞானமூர்த்தி.

“பெற்றவர்கள் அங்கேயே இருக்கிறோம். நம் கண் முன்னாலேயே, மகளை . . .மகளிடம் . . . வந்து . .நளினியை வளைக்கப் பார்க்கிறான். நீ சும்மா இருக்கச் சொல்கிறாயே!” என்று எரிச்சல்பட்டார்.

“பின்னே, கண் மறைவாகக் கூட்டிப் போய் வளைக்க வேண்டும் என்கிறீர்களா?”

“உதை விழும்!”

“ஒளித்து, மறைத்து, கள்ளத்தனம் செய்யாமல், நம் முன்னிலையிலேயே இயல்பாகப் பழகியதால்தான், தப்பான நோக்கம் இல்லை என்கிற கருத்து, எனக்கு.” என்றாள் மனைவி.

“நீ பேசுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு வரை, அவ்வளவு கவலைப்பட்டாய்!”

“இப்படியா, அப்படியா என்ற குழப்பம், அப்போது. நளின் மனம் நோகும்படிப் பண்ணிவிடுவானோ, என்கிற பயம். . . “

“இப்போது எல்லாம் தெளிந்து விட்டதாக்கும்!”

“இல்லை . . .” என்றாள் வசுமதி கவலையுடனேயே. “ஆனால், அவர்கள் இருவருக்கும் இடையே, ஒரு பொறி பற்றியிருப்பது மட்டும், தெளிவாகத் தெரிகிறது.

யோசித்துப் பாருங்கள், நம் மகளுக்கும் திருமணம் செய்ய வேண்டும்தானே? ஒரு நல்ல பையனைத் தேடி அலைய வேண்டும். அப்படித் தேடிக் கண்டுபிடிக்கிற பையனை, அவளுக்குப் பிடிக்க வேண்டும். அப்புறம் . . அப்புறமும் எத்தனையோ! இதுவரை, நரேந்திரனைக் குற்றம் சொல்ல எதுவுமில்லை. அவளுக்கும் . . .நம் எல்லாருக்குமே, பிடித்துதானே, இருக்கிறது?”

“அப்படியானால் . . . நரேந்திரனையே பார்க்கலாம் என்கிறாயா?”

“முதலில் அவரைப் பற்றி விசாரியுங்கள். இதுவரை அது போல ஒன்றும் சொல்லாவிட்டாலும், அவர் ஏற்கனவே திருமணம் ஆனவர் இல்லை என்று, நமக்கு என்ன நிச்சயம்? “

திகைப்புடன் நிமிர்ந்து, “ஏய், என்னடி குண்டு போடுகிறாய்?” என்றார் ஞானமூர்த்தி.

“அதில்லைப்பா. அவருடைய குடும்பம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதே என்றேன். அவரைப் பற்றி, நன்கு விசாரியுங்கள். எல்லாம் பொருந்தி வந்தால் . . . அப்புறம், இறைவன் அருள்!” என்றாள் பெற்றவள், விழிகளில் நீர் மல்க.

“பார்க்கிறேன்மா.” என்றார் ஞானமூர்த்தியும் அமைதியாக. “இங்கே வந்த புதிதில், நரேந்திரன் தந்த கார்டு இருக்கிறது. அதை வைத்துத் தொடங்குகிறேன்.” என்றார்.

நாலைந்து நாட்கள் எப்போதும் போலக் கழிந்தன.

கிருபாவைப் படிக்கச் சொல்லியிருந்தார்கள். எப்போதுமே, அவன் படித்த பாடத்தில் கேள்விகள் கேட்பது, நளினியின் பொறுப்பு. படிப்பு விஷயத்தில், இருவருமே எந்தத் தகராறும் பண்ண மாட்டார்கள்.

அன்றும் அதுபோல, தம்பி படித்ததும் கேள்வி கேட்கும்படி அவளைப் பணித்துவிட்டுப் பெற்றவர்கள் இருவரும், படியிறங்கிப் போனார்கள்.

“யார் வீட்டிலும் கூப்பிட்டிருந்தார்களோ?”

“சி வரிசை ஃப்ளாட்டுகளில், ஒரு புதுப் பாப்பா வந்திருக்கிறது. அதைப் போய்ப் பார்த்துவிட்டு வருவார்கள் என்று நினைக்கிறேன்.”

அக்காவும் தம்பியும் பேசுவதைக் கேட்டவாறே படியிறங்கியவர்கள், நேரே “லிஃப்ட்”டை அடைந்து, மூன்றாம் மாடிக்குப் போனார்கள்.

அழைப்பு மணியை அழுத்தியதும், நரேந்திரன் வந்து கதவைத் திறந்தான்.

ஞானமூர்த்தி தம்பதியைப் பார்த்ததும், முறுவலோடு பின்னே நகர்ந்து, “உள்ளே வாருங்கள்.” என்று அழைத்தான்.

“சொல்லியிருந்தால், நானே வந்திருப்பேனே!” என்று உபசாரமாகக் கூறியவன், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதைக் கவனித்து, “ஓ! பிள்ளைகள் அறியாமல் பேச வந்தீர்கள் போல!” என்று கேட்டு, “முதலில் உட்காருங்கள்.” என்று சோஃபாவைக் காட்டினான்.

இருக்கையில் அமர்ந்து, அவனை நேராகப் பார்த்தார், ஞானமூர்த்தி.

“பிள்ளைகளாகத்தான், நீங்கள் நினைக்கிறீர்களா?” என்று, மொட்டையாகக் கேட்டார். “அதாவது, இரண்டு பேரையும்!”

ஒரு கணம், நரேந்திரனின் பார்வை தடுமாறியது. இருவருக்கும் எதிரே கிடந்த இருக்கையில் அமர்ந்து, அவரை நேராகப் பார்த்தான். பார்த்தபடியே பதில் சொன்னான் “இல்லை, அங்கிள். நளினியை, நான் அப்படி நிச்சயமாக நினைக்கவில்லை . ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மை!” எனறான் அவன்.

முன் அனுபவம் இல்லாததாலோ, அல்லது ஏதாவது சொல்லி சமாளிப்பான் என்று எண்ணியிருந்ததாலோ, இந்த வெளிப்படையான பேச்சில், பெரியவர்கள் இருவரும் சற்றுத் திகைத்துப் போயினர்.

சொல்வது அறியாதது போல, இருவரின் பார்வைப் பரிமாற்றம், மீண்டும் நடந்தது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நரேந்திரனே தொடர்ந்து பேசினான்.

“இது பற்றி, நானே, உங்களிடம் வந்து பேச நினைத்திருந்தேன். கிருபா, நளினி முன்னிலையில் வெளிப்படையாகப் பேசக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. . .”

ஒருவாறு சுதாரித்துக்கொண்டு, “அதுதான், தனியாக வந்துவிட்டோமே., இப்போது சொல்லலாம் இல்லையா? சொல்லுங்கள், நரேந்திரன், நளினி பற்றி, உங்கள் நோக்கம் என்ன என்று, எங்களுக்குத் தெளிவாகத் தெரிந்தாக வேண்டும். அவள் வருத்தப்பட்டால், வருத்தப்பட நேர்ந்தால், என் . . . எங்களால், கொஞ்சமும் தாங்க முடியாது!” என்று, அழுத்திப் பேச வந்தவர், குரல் தழுதழுக்கச் சொன்னார்.

வசுமதி சிறு வியப்புடன் கணவனைப் பார்க்கும்போதே, “என்னாலும் தாங்க முடியாது.” என்றான் நரேந்திரனும்.

இப்போது, பெரியவர்களின் பார்வையில், திகைப்போடு குழப்பமும் இருந்தது. ஆனால், “திருமணம் தவிரத் தவறான நோக்கம் எதுவும் எனக்குக் கிடையாது.” என்றான் நரேந்திரன், பிசிரற்ற குரலில், தெளிவாக.

தொண்டையைச் செருமி, குரலைச் சரிப்படுத்திக்கொள்ளக் கணவனுக்கு அவகாசம் கொடுத்து, “அப்படியானால், உங்களைப் பற்றிய உண்மைகள் அனைத்தையும், மறைக்காமல் சொல்லுவீர்கள்?” என்றாள் வசுமதி.

“உங்களுக்கு என்ன தெரியவேண்டும்?” என்று நரேந்திரன் வினவினான்.

தன் கேள்விக்குப் பதிலாக, அவன், ஆம் என்றோ, இல்லை என்றோ, தெளிவான பதில் சொல்லவில்லையே என்று, அவள் யோசிக்கையில், “நீங்களே, என்னைப் பற்றி, வெளியே விசாரித்தீர்கள்தானே?” என்று நரேந்திரனே கேட்டான்.

“ஆமாம். கேட்டோம். “ என்றார் ஞானமூர்த்தி.

நரேந்திரனைப் பற்றி, அவனுடைய தோழனிடமே விசாரிக்கும்போது, அவன், தன் நண்பனிடம், அதைச் சொல்லாதிருக்க வாய்ப்பில்லை.

எனவே, விசாரித்ததை ஒப்புக்கொண்டுவிட்டு, ஞானமூர்த்தி மேலே பேசினார். “உங்கள் ஃபாக்டரியின் பெரும் பகுதி, உங்களுக்குச் சொந்தமானது. நல்ல லாபத்தில் இயங்குகிறது என்று உங்கள் நண்பர் சொன்னார். கூடவே, இந்த வீடு இருக்கிறது. கார் வைத்திருக்கிறீர்கள்! இந்தப் பொருளாதார நிலை, எங்களுக்கு உகந்ததே. ஆனால் . . “

“ஆனால் என்ன, சார்?” என்று நரேந்திரன் முகம் கறுத்தான். “உங்களுக்கு, வேறே என்ன தெரியவேண்டும்?”

“உங்கள் குடும்பம்.” என்றாள் வசுமதி. “பெற்றவர்கள், மற்றவர்கள்! ஒரு மூத்த சகோதரி உண்டு என்று, உங்கள் பேச்சின் மூலம் கண்டுபிடித்திருக்கிறோம். மற்ற அங்கத்தினர் யார், யார்? அவர்கள் யாரும் இல்லாமல், நீங்கள் ஏன் இங்கே தனியாக இருக்கிறீர்கள்? இதெல்லாம் எங்களுக்குத் தெரிய வேண்டாமா?”

“அது பற்றியும், அங்கிள், மனோகரிடம் கேட்டார்தானே?”

தன்னைப் பற்றித் தனக்குத் தெரியாமல் விசாரணை நடக்கிறது என்றால், உவப்பாக இராதுதான். ஆனால், நரேந்திரனின் குரலில் அது பற்றிய எந்த உணர்ச்சியும் தெரியவில்லை.

ஆனாலும், “கேட்டோம். தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.” என்றார் ஞானமூர்த்தி சமாதானமாக. தொடர்ந்து, “திரும்பவும் சொல்கிறேன், தப்பாக எடுத்துக் கொள்ளாமல் ஒரு பெண்ணைப் பெற்றவனின் கவலையாகப் பார்க்க வேண்டும். சொல்லுங்கள் நரேந்திரன், சொந்த ஊரில், நீங்கள் ஏதாவது தப்புத் தண்டா செய்துவிட்டு, இங்கே வந்து மறைந்து வாழவில்லை என்று, எங்களுக்கு என்ன நிச்சயம்? நல்லவராகத்தான் தெரிகிறீர்கள் என்றாலும், மகளின் வாழ்க்கை பாருங்கள்! அதனால், அவரிடம் வற்புறுத்தியே

விசாரித்தோம். ஆனால், நீங்கள் நல்லவர் என்று, அவர் அடித்துச் சொல்கிறார். பெரிய குடும்பம்., சொத்துத் தகராறு என்று எதுவும் கிடையாது., சொத்துக்களின் விஷயத்தில் எந்த விதமான வில்லங்கமும் கிடையாது என்கிறாரே தவிர, அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியாது என்கிறார். நீங்களே, சொல்லுங்கள். வெறுமனே இந்த வார்த்தையை நம்பி, எப்படி வீட்டில் பழக விடமுடியும்? " என்று ஞானமூர்த்தி கேட்டார்.

முகத்தில் சிறு நகை இலங்க, ஒப்புதலாகத் தலையாட்டினான், அவன்.

"நீங்கள் சொல்லும்போது சரியாகத்தான், தெரிகிறது. அதுவும் இப்போது, தெரிந்து கொள்ளும் உரிமை உங்களுக்கு நிச்சயமாகவே இருக்கிறது. " என்று ஒத்துக்கொள்ளும் போதே, நரேந்திரனின் முகபாவம் சற்றுத் தீவிரமடைந்தது.

முந்திய தலைமுறை ஆவலோடு காத்துக் கொண்டிருக்க, அவனது பார்வை ஒரு தரம், அந்த அறையை . . அங்கிருந்து கண்ணில் படும் இடமெல்லாம் சுற்றி வந்தது.

சிறு யோசனையின் பின், நரேந்திரன் மெல்லத் தொடங்கினான். "இதை எப்படிச் சொல்லி உங்களுக்குப் புரிய வைப்பது என்று, எனக்குத் தெரியவில்லை, அங்கிள். பெரிய குடும்பத்தில் பிறந்துவிட்டு . . . தாத்தாக்கள், பாட்டிகள் எல்லோரும் இருக்கும்போது, இங்கே வந்து, தனியாக வாழ்கிறேன் என்றால் . . அங்கே, நான் பிறந்து வளர்ந்த அந்தச் சூழ்நிலை எனக்குப் பிடிக்கவில்லை என்பதுதான் முக்கியமான காரணம். குடும்பத்தில் நாலே பேர் இருந்தாலும், அந்த நாலு பேருமே தனித் தனித் தீவுகள் போல வாழும் அந்த வாழ்வை, என்னால் சகிக்க முடியவில்லை. . . . அன்பில்லை என்று சொல்ல மாட்டேன். பிள்ளைகள் நலம் யோசித்துதான், எதையும் செய்வார்கள். ஆனால், பணநலத்தைச் சற்று அதிகமாக யோசிப்பார்கள். அதுவும், பிள்ளைகளின் பிற்கால உயர்வு கருதித்தான். ஆனால், அப்பா, அம்மா, நான் என்று எங்கள் வீட்டில் இருக்கும் மூன்றுபேருமே, ஒருவரை ஒருவர் எப்போது சந்திப்போம் என்று . . . அதை விட, என்றைக்குச் சந்திப்போமோ என்றால் சரியாக இருக்கும்., அதையே சரியாகச் சொல்ல முடியாது. நினைத்தால், போய்ப் பார்த்துப் பேசுவது என்று நினைக்கவும் முடியாது. முன்னரே சொல்லி, நேரம் ஒதுக்கி . . வேறு வழியிராது. அவரவருக்கு எத்தனையோ பொறுப்புகள்!

"என் அக்கா கொஞ்சம் யோசித்து, வாரத்துக்கு ஒரு நாள் குடும்பம்

சேர்ந்திருப்பதற்கு என்று வைத்திருந்தாள். இப்போது, அவளும் ஆறு வயது மகளை, பள்ளி விடுதிக்கு அனுப்பப் போகிறாளாம். காரணம், மகளைப் பார்த்து வளர்க்க நேரமில்லையாம்! ஆறு வயதுக் குழந்தை, தாய், தந்தை, தம்பியைப் பிரிந்து என்ன பாடு படும்? கொஞ்ச நாளில் பழகி விடும்தான். என்றாலும் . . .ஆனால், அங்கே உள்ள சூழ்நிலைக்கு, அப்படித்தான் வாழ முடியும்.

“அந்த வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை, அங்கிள். அதனாலேயே, அங்கே யாருக்கும் தெரியாமல், நண்பன் பெயரில், அவனோடு இங்கே ஒரு “பாக்டரி”யைத் தொடங்கினேன். பிறகு, என் சொந்த வருமானத்தில், சின்னதாக இந்த ஃப்ளாட்டையும் வாங்கிக்கொண்டு . . . “

“எஎன்ன சொல்லுகிறீர்கள்? இஇது சின்ன ஃப்ளாட்டா?” என்று, தடுமாற்றத்துடன் குறுக்கிட்டார் ஞானமூர்த்தி.

உயர்ந்த வேலையில், நல்ல வருமானத்தில் சேமித்து, வசதியான வீடு, கார் என்று, ஊர் உறவு மெச்ச, சிறப்பாக வாழ்வதாக அவருக்கு எண்ணம்.

அவரதே அளவு ஃப்ளாட்தான், அவனதும். அதைச் சின்னது என்றானானால் . .?

“அப்படியானால், அங்கே ரொம்பப் பெரிய . . பெரிய பணமா?” என்று திகைப்புடன் கேட்டார்.

வசுமதியின் முகத்தில் சிறு கலக்கம் தெரிந்தது.

பெருமைப் படவோ, வெறுத்து ஒதுக்கவோ இல்லாத சாதாரணத் தொனியில், “ஆமாம் அங்கிள்.” என்றான் அவன்.

“ஆனால், உங்கள் வீட்டில் இருப்பது போல, எப்போதும் ஒருவரை ஒருவர் பார்த்து வாழ, எனக்கு ஆசை! பாருங்கள், நீங்கள் எல்லோரும் பொதுவாக ஹாலில் இருக்கிறீர்கள். வீட்டின் எங்கே இருந்தாலும், அடுத்தவரோடு பேச முடியும். பேசுகிறீர்கள். சமையல் அறையில் கேக் செய்தால், ஹாலுக்கு வெளியேயும் வாசம் வரும். அன்று, எல்லோருமாகச் சேர்ந்து பிஸ்கட் செய்தீர்கள், பாருங்கள்! எவ்வளவு அற்புதமான காட்சி! என்ன அன்பான நெருக்கம்! இந்த அன்பின் பலம் இருப்பதாலோ, என்னவோ, எல்லோருக்கும் உள்ளூர ஒரு நேர்மையும், அதில் உறுதியும் இருப்பதாக, எனக்குத் தெரிகிறது. இதிலும், பல கெட்டவர்களும் இருக்கலாம். ஆனால், உங்கள் பிள்ளைகள், நல்லதை மட்டுமே எனக்குக் காட்டினார்கள்.

“கிருபா என் தம்பி போல. ஆனால், நளினி என் தேவதை. என் வாழ்வின் ஒரே தேவதை. இது உறுதி! ஆனால், இப்போதும், நீங்கள் என் வார்த்தையை மட்டும் நம்பி முடிவு சொல்ல வேண்டாம். என் பாஸ்போர்ட், ஐடி கார்டு கொடுக்கிறேன். நீங்கள் நன்கு விசாரித்து, அப்புறமாகச் சொல்லுங்கள், போதும். ஆனால், நான் இங்கிருப்பது தெரியாமல் விசாரியுங்கள். மற்றவர்களைப் போலப் பணம் என்கிற சாட்டைக்கு ஆடுகிற பம்பரம் நான் அல்ல என்று, என் குடும்பத்துப் பெரியவர்களுக்குத் தெரிய வைக்க வேண்டும். அதுவரை, நான் இங்கிருப்பது, அங்கே யாருக்கும் தெரிய வேண்டாம். எப்போதும், நான் எல்லை மீற மாட்டேன் என்று உறுதி கொடுக்கிறேன். அதுவும் பெறும் வாய் வார்த்தையே என்றாலும், அங்கிள், ஆன்ட்டி, நீங்கள் இருவரும் என் பேச்சை நம்ப வேண்டும். “ என்று முடித்தான் நரேந்திரன்.

பெரியவர்கள் இருவரும் திகைத்துச் சிலை போல அமர்ந்திருக்க, உள்ளே சென்று, பாஸ்போர்ட், அடையாளச் சீட்டு, இரண்டையும் எடுத்து வந்து கொடுத்தான்!

“இரண்டும் அசல். ஒரு வேளை, தேவைப் படும் என்றால், என்னிடம் ஒரு நகல் இருக்கிறது. நீங்கள் இவைகளை வைத்துக்கொண்டு, திருப்தியாகிற வரை நன்றாக விசாரித்துவிட்டு, அப்புறமாக, என்னிடம் திருப்பித் தாருங்கள்.” என்றான்.

இருவரும் விடை பெற்று, “லிஃப்ட்” வழியாகவே கீழே வந்தார்கள்.

ஆனால், நேரே வீட்டுக்குச் செல்ல, அவர்களுக்கு மனமில்லை.

எல்லாக் குடியிருப்புகளும் சேர்ந்து பராமரிக்கும் சிறு பூங்காவில் சென்று அமர்ந்தார்கள்.

சிறு மௌனத்தின் பின், “பிரச்சினை இல்லாத இடமே இருக்காது போலத் தெரிகிறது. இன்னும் கொஞ்சம் நிறையப் பணம் இருந்தால், நளினிக்குப் பெரிய இடத்திலிருந்து தேடி வருவார்கள் என்பாய். இங்கே பார்த்தால், ஒரு பெரிய இடம், அது வேண்டாம் என்று கிளம்பி, இதுதான் சொர்க்கம் என்று நம் பக்கத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறது! இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல, மனிதனுக்குத் திருப்தியே வராது போல!” என்று மனோதத்துவம் பேசினார் ஞானமூர்த்தி.

“அப்படிச் சொல்லாதீர்கள்.” என்று மறுத்தாள் மனைவி. “இந்த வீட்டுக்காக, நடுவில் நாம் கொஞ்சம் கஷ்டப்பட்டுச் சேமிக்க நேர்ந்தது. அந்தக் கஷ்டம் நளினி பட வேண்டாமே என்று, இன்னும் கொஞ்சம் பணம் இருந்தால், நன்றாக இருக்குமே என்று, நான் எண்ணியது உண்டு. மற்றபடி, இருப்பதில் திருப்தியே இல்லாமல், இன்னும் பணம்,

இன்னும் பணம் என்று, நாம் என்றைக்கு ஞானா, பறந்தோம்? நம்மைப் பொறுத்தவரை, சந்தோஷமாகத்தானே இருக்கிறோம்?" என்று வசுமதி கேட்டாள்.

"நீ சொல்வது சரிதான். என்றாலும், இப்போது என்ன செய்வது என்று, உள்ளூரக் கலக்கமாக இருக்கிறது. சாதாரணமாகப் பையனைப் பற்றி விசாரிக்கலாம் என்று தொடங்கினால், இப்போது, நிலைமை வேறே மாதிரி மாறிவிட்டது. இது, ஒத்து வருமா என்று பயமாக இருக்கிறது. அவ்வளவு பெரிய இடம் என்றால், நரேந்திரன் வீட்டில் ஒப்புவார்களா? அதுவும், பண நலத்தை அதிகம் பார்ப்பார்கள் என்று, அவரே சொல்கிறார்!" என்று மனம் உளம்பினார் ஞானமூர்த்தி.

"ஒப்புக்கொள்ள வைப்பது, அவர் பாடு. பணநலம் பார்க்கும் தன்மை பிடிக்காமல் வந்திருப்பவர், மாற்றுத் திட்டம் ஏதாவதும், வைத்திருக்கலாம். அந்தத் தைரியம் இல்லாமல், அவர் இவ்வளவு பேசமாட்டார். ஆனால், என்னதான் நரேந்திரன் நல்லவராகவே தோன்றினாலும், அவரைப் பற்றி, நீங்கள் இன்னமும் விசாரித்து முடிக்கவில்லை. மகள் விஷயம். அவள், நமக்கு ஒரு கண்ணைப் போல. மும்பைக்கே போய் விசாரியுங்கள். விசாரித்துவிட்டு வந்த பிறகு, அதற்கேற்ப முடிவு செய்யலாம். ஆனால் ஒன்று. நரேந்திரனுடைய குடும்பம், வாழ்க்கை வசதி பற்றி, நளினியிடம் எதுவும் சொல்ல வேண்டாம். அவரே, அதை வேண்டாம் என்று உதறிவிட்டு வந்திருக்கும்போது, அவளுக்கு எதிர்பார்ப்பு எதுவும் வந்துவிடக் கூடாது. எதுவானாலும், நரேந்திரன் மூலமாகவே, அவளுக்குப் போகட்டும். ஆனால், முதலில், அவர் நல்லவர்தான், அவர் சொன்னதெல்லாம் உண்மைதான் என்பது உறுதியாகட்டும்." என்றாள் மனைவி.

மனைவியை விசித்திரமாகப் பார்த்தார் ஞானமூர்த்தி.

"என்ன?"

"தெளிவாகப் பேசுகிறாய். ஆனால், அவ்வளவு பணம்! நம் வீட்டைச் சின்னதாக ஒரு ஃப்ளாட் என்கிறார். அந்த அளவுப் பணம்! அவர் . . மருமகனாக நரேந்திரனை ஒத்துக் கொண்டுவிட்டோம் என்று வைத்துக்கொள். அவர் அந்தப் பணத்தை வேண்டாம் என்றால், போகட்டும் என்று விட்டு விடுவதா என்று, யோசனை வருகிறது." என்றார் ஞானமூர்த்தி.

"வேண்டாம். அந்த மாதிரி யோசிக்கவே யோசிக்காதீர்கள்." என்றாள் மனைவி. "இந்தப் பணம், நமக்குக் கனவில் கண்ட தனம்

மாதிரி. நாம், முதலில் என்ன நினைத்தோம்? நன்றாக இயங்கும் ஃபாக்டரி, வீடு, கார் எல்லாம் இருக்கிறது. நம்மை விடவும் சற்று உயர்வுதான். இந்தப் பையனோடு திருமணம் நடந்தால், நளினி, திருமணமாகிச் செல்லும்போதே, சொந்த வீட்டுக்குப் போவாள்., நம்மைப் போலச் சில ஆசைகளை அடக்கி, வீட்டுக்குச் சேமிக்கத் தேவையிராது . . . இப்படியெல்லாம் தானே? நளின்குட்டிக்கும், அதே எண்ணம்தான் இருக்கும். இப்போது போய், பணத்தை விட்டுவிடாதீர்கள் என்று சொல்லப் போனால், நமக்குப் பேராசை என்று, நரேந்திரன் எண்ணமாட்டாரா? அப்படி நினைத்து, வேண்டாம் என்று விலகிப் போய் விட்டால்? நளினியின் முகத்தை, நீங்களும் பார்த்தீர்கள்தானே? அவரைப் பார்த்தாலே, எப்படிப் பூ மாதிரி, முகம் மலர்கிறது? இன்றைக்கு நரேந்திரன் காட்டுகிற முகமே, அவளுக்கும் பிடித்தமே என்பதுதானே, பொருள்? அவர் வெறுத்துப் போனால், தாங்குவாளா? கோடானு கோடிப் பணம் இருக்கிறதோ, இல்லையோ, எனக்கு, என் மகளின் மகிழ்ச்சிதான் முக்கியம்! இன்று தெரிந்த விஷயம் கிடைத்தால், மேலும் நல்லது என்று நினைப்போம். ஆனால், அது கிடைக்காவிட்டாலும், மகள் மகிழ்ச்சியோடு இருந்தால், எனக்கு, அது போதும்! " என்றாள் வசுமதி உணர்ச்சியோடு.

பெருமை பொங்க மனைவியைப் பார்த்தார், ஞானமூர்த்தி.

"இப்படி ஓர் அசையாத மலை மாதிரி, நீ நிலையாக இருப்பதால்தான், நரேந்திரன் சொன்னாரே, அந்த நேர்மையும், அதில் பிடிப்பும் நம் வீட்டில் நிலைத்திருக்கிறது, வசு. நான் கூட, ஒரு கணம் அசந்து, அலைபாய்ந்துவிட்டேன். நம் குடும்பத்தின் ஆதாரமே நீதாண்டா!" என்றார் உணர்ச்சியோடு.

அவருக்கு மனம் மிகவும் நெகிழ்ந்திருக்கும்போது, இப்படி "டா"ப் போட்டுப் பேசுவார்.

"நீங்கள் மட்டும் என்னவாம்? மகளுக்காகப் பார்த்தீர்கள். மற்றபடி, நீங்கள்தான் நம் வீட்டு மகாமேரு!" என்றாள் வசுமதி.

ஞானமூர்த்திக்கு உச்சி குளிர்ந்து போயிற்று. அதே உற்சாகத்தோடு, மும்பைக்குக் கிளம்பிப் போனர்.

# அத்தியாயம் -6

நரேந்திரனுடைய பெரிய குடும்பம் பல தொழில்களில் ஈடுபட்டிருந்தது.

அவற்றில் ஒன்றுடன், ஞானமூர்த்தி வேலை செய்த நிறுவனம், தொழிலில் தொடர்பு கொண்டிருந்தது.

அதன் மும்பை அதிகாரி மூலமாக, உள்ளே சென்று விசாரித்தார்.

செய்யும் தொழில்களில், அந்தக் குடும்பங்களுக்கு நல்ல பெயர் இருந்தது. தொழிலில் நாணயமானவர்கள் என்று சொன்னார்கள்.

ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு, மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டு என்பார்களே, அது போல வரி கட்டும் விஷயத்தில் நிறையக் கணக்குக் காட்டுவார்கள் என்றாலும், அதை, யார்தான் செய்யவில்லை?

ஆனால், பணம் சேர்த்துவிட்டோம் என்பதற்காக, மற்றவர்களிடம் திமிர் காட்டிப் பெரிய பிழைகள் செய்ததாகக் கேள்வியில்லை., அந்தக் குடும்பங்களுக்கே, பொதுவாகக் குற்றப் பின்னணி கிடையாது என்று, மும்பைக்காரர் சொன்னார்.

நரேந்திரனையும் உயர்வாக, மரியாதையாகப் பேசினார்கள். பொறுப்பேற்றுச் செய்கிற எதுவானாலும் சிறப்பாக இருக்குமாம். வாழ்க்கை வளங்கள் பழகித்தரும் கெட்ட பழக்கங்கள் எதுவும் கிடையாது. பெரிய பார்ட்டிகளில் கூட, அவன் வெறும் பழரசம் கேட்டு வாங்கி அருந்துவான் என்று கேள்வி.

“கம்பெனி கீப்” பண்ணத் தெரிய வேண்டாமா என்று, அவர்களது தொழில் வட்டாரத்தில், அதைச் சிலர் சற்றுக் குறைவாகப் பேசுவது உண்டு என்று மும்பைக்காரர் சொன்னபோது, அதைப் பற்றியும், சந்தோஷப்படுவதா அல்லது வருத்தப்படுவதா என்று ஞானமூர்த்திக்குக் குழப்பம்தான்.

ஏனெனில், பெரும்பாலும் தொழில் துறை பார்ட்டிகளில், அதன் வெற்றிக்கான நீக்குப் போக்கான மனநிலையை ஏற்படுத்தும் என்று மது பரிமாறுவது, இப்போது பழக்கமாகியிருப்பது, ஞானமூர்த்திக்கும் தெரிந்த விஷயமே.

இப்போது, வருங்கால மருமகன் “குடி”மகன் அல்ல என்று மகிழ்வதா? அன்றி, தொழிலில் தோற்பானோ என்று அஞ்சுவதா? எதுவானாலும், பிற்பாடு அவருடையமகளை அல்லவோ பாதிக்கும்?

ஆனால், வெறும் பழரசம் குடித்தாலும், வெற்றிகரமாகக் காரியம் சாதிப்பதில், ரொம்பக் கெட்டிக்காரன் என்று பெயர் பெற்றவன் நரேந்திரனே என்று மும்பை அதிகாரி தொடர்ந்து கூறவும், ஞானமூர்த்திக்கு உச்சி குளிர்ந்து போயிற்று!

இப்போதைக்குத் தொழில் தொடர்பாக ஊரை விட்டுச் சென்றிருக்கிறான். திரும்பி வந்ததும், குடும்பத்தில் அடுத்து வரும் திருமணங்களில், அவனது ஒன்றாக இருக்கலாம் என்று கேள்வி.

அதுவும் சரிதான். அந்த மாதிரி வயதுதானே?

அத்தோடு, அவன் எங்கே போயிருக்கிறான்., ஏன் போனான் என்பதையும் அறிந்தவர் அவர். அந்த மகனாகச் சொல்லாமல், அதைப் பற்றித் தானாக எதையும் வெளியே விட்டுவிடக் கூடாது என்று, அந்தப் பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டார், ஞானமூர்த்தி.

நரேந்திரனுடைய தந்தை தேவராஜனைத் தொழில் விஷயம் பேசுவது போல, அங்குள்ள அதிகாரியோடு சேர்ந்து, அலுவலகத்தில் போய்ப் பார்த்தார்.

சம்பந்தி என்று கலந்து பழகுவது கடினமே என்றாலும், ஞானமூர்த்திக்கு உள்ளூர அவரிடம் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. இந்தத் திருமணத்தை ஆதரிப்பார் என்று எதிர்பார்க்க முடியாது., நிச்சயமாக ஏற்க மாட்டார்தான் என்றே தோன்றினாலும், அதற்காக அடிதடி, சூழ்ச்சி என்று செல்லக் கூடிய கெட்டவர் அல்ல என்றும் தோன்றியது.

மகனுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை கிடையாது என்று சொல்லக் கூடும்.

ஆனால், இது போன்ற எந்தச் சொத்தையும் எதிர்பார்த்து, நரேந்திரனை மருமகனாக வரிக்க, அவர்கள்குடும்பம் எண்ணியதில்லை. அவருடைய மகளும் அப்படித்தான்.

மனைவி வசுமதி சொன்னது போல, இது கனவில் கண்ட தனம். அவ்வளவே.

மகளுக்குக் கிடைத்தால் சந்தோஷமே . . . என்று எண்ணும்போதே, கொஞ்சம் மலைப்பும் மருட்சியுமாகவே, ஞானமூர்த்தி உணர்ந்தார். இது போன்ற இடங்களில், சம்பந்தியாக வந்து பழகுவது, சற்றுச் சிரமமே! சற்று அதிகமான சிரமம்!

மகளைப் பொறுத்த வரையில், முதலில் கஷ்டமாக இருந்தாலும், கணவனின் துணையில், சீக்கிரமே பழகி விடக் கூடும்.

என்றாலும், இந்தப் பணத்துக்கும், நரேந்திரனை மருமகனாகக் கொள்வதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று, ஞானமூர்த்தியால், சற்று இலகுவாகவே, இப்போது எண்ண முடிந்தது.

ஆனால், இந்தத் திருமணத்துக்கு, அவனுடைய பெற்றோரின் சம்மதத்தைப் பெறுவது, நரேந்திரனின் பொறுப்பு.

மணமகனுடைய தாய் தகப்பன் அறியாமல், ஒளிவு மறைவாய், ரகசியக் கல்யாணம் எல்லாம், அவருடைய மகளுக்கு நடக்காது. அதற்குப் பெரிய "ஊகூம்"தான்.

ஒரு வேளை, சொத்து வேண்டாம் என்று விலகி விடுவதுதான், மனைவி சொன்னாளே, நரேந்திரனின் மாற்றுத் திட்டம் என்று, அதுவாக இருக்கலாமோ என்று எண்ணிப் பார்த்தபோதும், அவருக்குப் பெரிதாக வருத்தம் எதுவும் உண்டாகவில்லை.

மொத்தத்தில், ஞானமூர்த்தி மனதில் திருப்தியுடனேயே, சென்னைக்குத் திரும்பிப் போனார்.

விஷயத்தைக் கணவன் சொன்ன விதத்தில், வசுமதிக்கும் மகிழ்ச்சியே.

ஐடி கார்டு, பாஸ்போர்ட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, ஞானமூர்த்தி, தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.

"கட்டாயம் அங்கிள்!" என்றான் நரேந்திரன். "அப்பா, அம்மாவுக்குத் தெரியாமல், எனக்கு ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, நானும் ஒருபோதும் நினைத்ததில்லை. சரியான தருணத்துக்காகத்தான் காத்திருக்கிறேன். அதுவும் சீக்கிரமே வந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு. அதுவரை, இப்போது போலவே, உங்கள் குடும்பத்தோடு சகஜமாகப் பேசிப்பழக, எனக்கு அனுமதி தர வேண்டும். தருவீர்கள்தானே, அங்கிள்? நான் முன்பே சொன்ன மாதிரி, அதிகப்படி உரிமைகள் ஏதும் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று மறுபடியும் உறுதி தருகிறேன். "

குரலில் தெளிவும் திடமுமாக அவன் சொன்ன விதத்தில், "நிச்சயமாக!" என்று தலையாட்டினார், பெண்ணைப் பெற்றவர்.

மனைவியின் விருப்பப்படி, நரேந்திரனின் செல்வ நிலை பற்றி, நளினியிடம் பெற்றவர்கள் எதுவும் கூறவில்லை.

எப்போது உசிதமோ, அப்போது நரேந்திரனே சொல்லிக் கொள்ளட்டும் என்று, விட்டு விட்டார்கள்.

ஆனால், நரேந்திரனும், அதைப் பற்றிப் பேசியதாகவே தெரியவில்லை. ஏதோ தேவையற்ற விஷயம் என்று எண்ணினான் போல!

ஆனால், வாழ்க்கை சந்தோஷமாகவும், வேகமாகவும் சென்றது.

காலையில் நளினி, கிருபாகரோடு நரேந்திரனும் சேர்ந்து, மூவருமாக “ஜாகிங்” செல்வது வழக்கமாயிற்று. அதே போல, மாலையில் ஷட்டில் விளையாடுவதும்.

ஏதாவது காரணமாக, இதில் ஏதேனும் தவறினால், நரேந்திரன் ஞானமூர்த்தியின் வீட்டு வாசலில் நின்று சற்று நேரம் ஏதாவது பேசிவிட்டுப் போவான்.

இரண்டு தடவைகளாவது தரிசனம் கிடைக்காவிட்டால், தூக்கம் வரவில்லையாம்.

நளினியின் காதருகில் இதைச் சொல்லி, அவள் முகம் சிவப்பதைப் பார்த்து ரசித்துவிட்டு அவன் செல்வதைக் காணாதது போலக் கண்டு மகிழ்ந்தார்கள் பெரியவர்கள்.

என்னதான் விழுங்குவது போல நளினியைப் பார்த்தாலும், அவளைத் தனித்துச் சந்திப்பதற்கு, நரேந்திரன் முயன்றது கிடையாது.

அந்த வகையில், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறான் என்று ஞானமூர்த்தி சந்தோஷப்பட்டார்.

வருங்கால மருமகன் என்று மனதில் உறுதியான பிறகு, அவன் வீட்டுச் சாப்பாடே இல்லாமல் இருப்பது, வசுமதிக்கு வருத்தமாக இருந்தது.

ஆனால், சிறு வயது முதலே வெளி உணவு பழகிவிட்டது என்பதோடு, மதிய உணவு தொழில் பங்குதாரனாகிய நண்பன் வீட்டிலிருந்து, இருவருக்கும் சேர்த்தே வருவதால், வசுமதி கவலைப்படத் தேவையே கிடையாது என்றான் நரேந்திரன்.

ஆனால், சாப்பாட்டுக்கு என்று அங்கே வந்து உட்காரவே மாட்டான்.

முன்பு சென்ற அளவு கூட, இப்போது நளினியின் வீட்டுக்குள் நரேந்திரன் செலவது இல்லை.

கிருபாகருக்குச் சிலபல பாடங்களில் நரேந்திரன் உதவி செய்தபோதும், அதைப் பூங்காவில் ஒதுக்குப்புறமாக அமர்ந்தே கற்றுக் கொடுத்தான்.

முன்னை விட அதிகமாகச் சந்தித்தபோதும், கண்ணையும் கருத்தையும் தீட்டி வைத்துக்கொண்டு பார்க்கிறவர்கள் கூடத் தப்பான கருத்துகள் கொண்டுவிடக் கூடாது என்பதில், நரேந்திரன் வெகு கவனமாக இருந்தான்.

பணக்காரப் பையனை, வலை போட்டு இழுத்துவிட்டார்கள் என்ற பேச்சு வந்துவிடக் கூடாதே என்று உள்ளூரக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த ஞானமூர்த்தி தம்பதிக்கு, இது, பெரும் ஆறுதலைத் தந்தது.

கூடவே, நரேந்திரன் மீது, பெரு மதிப்பையும் ஏற்படுத்தியது.

நளினியைப் பொறுத்த வரையில், ஏழாவது சொர்க்கம் என்பார்களே, அதில்தான் இருந்தாள்.

மனம் கவர்ந்தவன், அவள் மீது, அன்பைப் பொழிந்தான். பெற்றவர்களும், அவனை மருமகனாக ஏற்கச் சம்மதித்துவிட்டார்கள். அவளுக்கு வேறு என்ன வேண்டும்?

கிருபாகருக்கும் பெருமைதான்.

எல்லோருமே, நரேந்திரன் சொல்லியிருந்த அந்தச் சரியான தருணத்துக்காகக் காத்திருந்தனர்.

தருணம் வரத்தான் செய்தது. ஆனால், தவறாக வந்தது.

வந்து, “இனி இந்த வீட்டுப் பக்கம் திரும்பியும் பாராதீர்கள்” என்று நரேந்திரனிடம், ஞானமூர்த்தியைச் சொல்லவும் வைத்தது!

தினமும், காலையில் கடற்கரையிலும், மாலையில் ஷட்டில் விளையாடும்போதும் சந்திப்பது என்று பழக்கமாகி விட்டதால், நரேந்திரன் முன்போலப் படியேறி, நளினியின் வீட்டு வழியே செல்வதை நிறுத்திவிட்டான்.

இடையில் பார்த்தால், நின்று இரண்டுவார்த்தை பேசச் சொல்லும். உள்ளே போய், ஒரு காஃபி அருந்த ஆசை வரும்.

ஊர் வாய்க்கு அவல் கொடுக்கக் கூடாது என்று நினைத்த நரேந்திரன், பொது இடங்களில் சந்திப்பது தவிர, ஞானமூர்த்தியின் வீட்டுக்குள் செல்வதை இயன்றவரை தவிர்த்திருந்தான்.

ஆனால், கிருபாவும் நளினியும் இன்று மாலை ஷட்டில் விளையாட வராதது ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை.

வெளியே செல்லப் போவதாக, இருவருமே அவனிடம் கூறவில்லை.

வீட்டிலேயே இருந்துகொண்டு, விளையாட வரவில்லை என்றால், அங்கே யாருக்கும் உடம்பு சரியில்லையோ என்று தோன்றவும், பேருக்குச் சற்று நேரம் மற்றவர்களோடு விளையாடிவிட்டு, நேரே ஞானமூர்த்தியின் வீட்டுக்கு நரேந்திரன் சென்றான்.

அங்கே, அவனை எதிர்பார்த்தே இருந்தவர் போல, ஒரு தரம் அழைப்பு மணியை அழுத்தவுமே, கதவு திறக்கப்பட்டது.

திறந்தவர் ஞானமூர்த்தியே!

ஆனால், வழக்கமான புன்னகை முக மலர்ச்சி எதுவும் அவரிடம் தென்படாததோடு, உள்ளே வருமாறு, அவனை அழைக்கவுமில்லை!

அழையாதது மட்டுமின்றி, அவனாக உள்ளே வந்துவிடாமல் தடுப்பவரும் போல, திறந்த கதவின் வழியை அடைத்தபடி, அங்கேயே நின்றுகொண்டும் இருந்தார்.

ஒரு தரம் அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தவன், “என்ன அங்கிள், ஏதேனும் பிரச்சினையா?” என்று அவரிடம் விசாரித்தான்.

ஒரு கணம், செந்தணல் போலச் சீறிச் சினந்தது, அவர் முகம்.

ஆனால், வாயை விட்டுவிடக் கூடாது என்று எண்ணியவர் போல உதட்டை மடித்து, வெகுவாக முயன்று தன்னைக் கட்டுப்படுத்தினார். அதன் பிறகே வாயைத் திறந்து, “பிரச்சினைதான். ஆனால், நீங்கள் இந்த வீட்டுப் பக்கம் வராமல் இருந்தால், அது உடனே தீர்ந்துவிடும். தயவு செய்து போகிறீர்களா?” என்று இறுகிய குரலில் கூறினார்.

புருவ மத்தியில் சிறு முடிச்சு விழ, “என்ன விஷயம், அங்கிள்? பிரச்சினை என்ன என்று சொன்னால் . . .” என்றவனைக் குறுக்கிட்டு, “பிரச்சினையே நீதான்யா!” என்று பொங்கினார் ஞானமூர்த்தி.

இரு கைகளையும் கூப்பி, வெறுப்புடன் பட்டென்று ஒரு கும்பிடு போட்டு, “வேண்டாமய்யா, வேண்டாம். நாங்களெல்லாம் சாதாரண மனிதர்கள். ஒரு சொல்! ஒரு பேச்சு என்று வாழ்கிறவர்கள். உங்கள் பணக்காரத் தகிடுதத்தங்களைத் தாங்கும் சக்தி எங்களுக்குக் கிடையாது. அதனால், நாலு பேர் பார்த்துக் கேவலம் ஆகுமுன், தயவு செய்து போய்விடுங்கள்! “ என்று கதவை மூட முயற்சி செய்தார்.

“பொறுங்கள்.” என்று, அவரது முயற்சியைத் தடுத்தான் நரேந்திரன். “இந்த அளவு வெறுத்துப் பேசி விரட்டுவதற்கு, நானும் திருப்பிக்கொண்டு போய்விடலாம். ஆனால், அது சிக்கலைத் தீர்ப்பது ஆகாது. நீங்கள் சொல்வது போல, நம் வீட்டுப் பிரச்சினையை மற்றவர்கள் அறியத் தேவையில்லை என்பதால், உள்ளே போய்ப்

பேசுவோமா?”

பேசும்போதே, நரேந்திரன், தன் முழு உயரத்துக்கும் உரிய நிமிர்வோடு மெல்ல நிதானமாக, அதே சமயம் உறுதியோடு உள்ளே வரவும், தன்னையறியாமல் பின்னே நகர்ந்து, அவனுக்கு வழி விட்டார் ஞானமூர்த்தி.

அவன் உள்ளே வந்து, கதவை லேசாகச் சாத்தவும், “இதோ பாருங்கள் நரேந்திரன், நீங்கள் இங்கே வந்து, குண்டா வேலையெல்லாம் செய்ய முயன்றால், நான் போலீசைக் கூப்பிட வேண்டியிருக்கும். ஏய் கிருபா, இவரைப் பிடித்து வெளியே தள்ளு.” என்று மகனைத் துணைக்கு அழைத்தார்.

மீசை அரும்பிக் கொண்டிருக்கும் இளைஞன், கிருபாகரன்.

தந்தையின் அழைப்புக் கிணங்கி, அங்கே வந்தவன், திகைப்புடன் நரேந்திரனைப் பார்த்தான்.

அவனை நோக்கி, “எல்லாப் பேச்சும், உன் காதிலும் விழுந்திருக்கும். நான் விவரம் கேட்க மட்டுமே வந்தேன். அதனால், நீ போகலாம்.” என்றுவிட்டு, மறுபடியும், ஞானமூர்த்தியிடம் திரும்பினான் நரேந்திரன்.

“ஏன் அங்கிள், நான் என்றைக்கு உங்களிடம் குண்டாத்தனம் காட்டினேன்? நம் பேச்சை, ஊர் அறியவேண்டாம் என்பது, உங்கள் விருப்பம்தானே? அதனால்தான், கதவை இப்படிச் சாத்தி வைத்தேன். முதலில், இதைச் சொல்லுங்கள்., இப்போது, இங்கே என்ன பிரச்சினை? விஷயத்தை நீங்கள் இன்னும் சொல்லவே இல்லையே?” என்று விவரம் கேட்டான்.

வெறுப்பும் கோபமுமாக அவர் பார்க்கையில், “கேட்கிறார் அல்லவா? காரணம் என்னவென்று சொல்லி விடுங்களேன் .” என்றாள் வசுமதி.

தொப்பென ஓர் இருக்கையில் அமர்ந்தார், ஞானமூர்த்தி.

ஒரு பெரிய மூச்சை இழுத்துக்கொண்டு, பேசத் தொடங்கினார்.

“பாருங்கள் நரேந்திரன், நளினியை உங்களுக்குத் திருமணம் செய்ய எண்ணியது, உங்கள் பணத்துக்காகவோ, தொழில் வளத்துக்காகவோ அல்ல! உங்களைப் பார்த்ததும், அவள் முகம் பூ மாதிரி மலரும். அந்த ஒரே காரணத்துக்காகத்தான். ஆனால், உங்களாலேயே, அவள் இப்போது, முகம் வீங்க அழுது கொண்டிருக்கிறாள். . . “

குறுக்கிட்டு, "அது ஏன் என்று, முதலில் சொல்லுங்கள், அங்கிள்!" என்றான் நரேந்திரன். "காரணம் தெரிந்தால்தானே, அதைச் சரி செய்யவும் முடியும்?"

அவனை, அவர் வெறித்து நோக்க, "கேட்கிறார், இல்லையா? சொல்லிப் பாருங்கள், ஞானா." என்றாள் வசுமதி மறுபடியும். "ஒரு வேளை . . ."

"என்ன "ஒருவேளை" ?" என்று மனைவியிடம் எரிந்து விழுந்தார் ஞானமூர்த்தி. "அதுதான், அவர் அப்பாவிடம் வரை பேசித் தெளிவாகத் தெரிந்து கொண்டாயிற்றே! அப்புறம் என்னடி, "ஒருவேளை"? "

அவரது பேச்சில் ஒன்றைப் பிடித்து, "அப்பாவா? என் அப்பா, இதில் எங்கே வந்தார்? அவரிடம் என்ன பேசினீர்கள்? எங்கள் திருமணம் பற்றியா? அவர் எதிர்ப்பார் என்பது தெரிந்ததுதானே? அதற்காகவா, நளினி அழுகிறாள்? நான்தான், உரிய நேரம் வரட்டும் என்றேனே! அதற்குள்ளாக ஏன் பேசினீர்கள்?" என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான் நரேந்திரன்.

அவனது ஒவ்வொரு கேள்விக்கும் மேலே மேலே சினம் ஏறிக்கொண்டே போக, உடல் நடுங்க, ஞானமூர்த்தி எழுந்து நின்றார். "ஏனா? கேட்டுக் கொள்ளுங்கள். எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! துணியைக் கிழித்துக்கொண்டு தெருவில் ஓடுகிற நிலை. அதனாலே பேசினேன். போதுமா? இப்போதும் அதே வெறியில்தான் இருக்கிறேன். உங்கள் மேலே பாய்ந்து பிறாண்டுமுன், இடத்தைக் காலி பண்ணினால், உங்களுக்கு நல்லது. சீக்கிரமாக, இங்கிருந்து போங்கள்!" என்றார் கொதிப்புடன்.

அச்சமும் கவலையுமாக, மறுபடியும் கிருபாகர் அங்கே வந்து நின்றான். "நரேன் சார், அக்கா அழுததில், அப்பா ரொம்பக் கோபமாக இருக்கிறார். கோபத்தில் . . கோபத்தில் ஏதாவது பண்ணி விடுவாரோ என்று . . " என்று கலங்கியவனுக்கு வாக்கியத்தை முடிக்கக் கூட முடியவில்லை.

தந்தை கை நீட்டி விடுவாரோ என்று அவனுக்கு அச்சம்.

நரேந்திரனும், அடி வாங்கிக்கொண்டு, சும்மாப் போகிறவன் அல்ல என்று அறிந்திருப்பதால், இன்னமும் அதிக அச்சம்!

"அவர்தான் போகச் சொல்லுகிறாரே, நரேந்திரன்., போய் விட்டு . . எதற்கும், அப்புறமாக வந்து பேசுங்களேன்." என்றாள் வசுமதியும்.

ஆனால், ஞானமூர்த்தியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த

நரேந்திரன், மறுப்பாகத் தலையசைத்தான்.

“மகள் கண்ணீர் விடும்படி ஆகிவிட்டதே என்ற கொதிப்பில், அங்கிள் பேசுகிறார், ஆன்ட்டி. பேசட்டும். ஆனால், அந்தக் கண்ணீரை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான், நானும் பிடிவாதமாக இங்கே நின்று பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை, நீங்களேனும் புரிந்து . . .”

ஆவேசத்துடன் குறுக்கிட்டார் நளினியுடைய தந்தை. “நிற்க வேண்டாம், நிற்க வேண்டாம் என்றுதான், அப்போது பிடித்துக் கத்திக் கொண்டிருக்கிறேன்! போங்களய்யா. போ என்றால், போய்விடுங்கள். உங்களைப் பார்க்கக் கூட, என் மகளுக்குப் பிடிக்கவில்லை. உடனே, போய்விடுங்கள்!” என்று, கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகக் கத்தினார்.

அசையாமல் நின்று, “இதே வார்த்தைகளை, அவள் வந்து சொல்லட்டும் .போகிறேன்.” என்றான் அவன். “அல்லது, ஏன் இப்படி என்று காரணம் சொல்லுங்கள். காரணம் தெரியும்வரை, நான் இங்கிருந்து அசையப் போவதில்லை!”

வெறுப்புடன் சென்று, முகம் திருப்பி அமர்ந்துகொண்டு, “என்னமோ ஒன்றும் தெரியாத மாதிரி டிராமாப் போடுகிறார். நீதான் சொல்லி அனுப்பு. எனக்கு அந்த ஆளுடன் பேசவே பிடிக்கவில்லை.” என்றார் ஞானமூர்த்தி.

இதை விட, அந்த இடத்தில், அவனை ஒருவர் அவமானப்படுத்த முடியாது. ஆனால், மூடிய கதவின் பின்னே, அடக்க முயன்றதை மீறிக் கேட்ட விசும்பல் ஒலி கட்டிப் போட, நரேந்திரன் இறுகி நின்றான்.

தந்தை அப்படி என்ன சொல்லியிருப்பார்? மறுக்கக் கூடியவர்தான். ஆனால், தரம் இறங்கிப் பேசுகிறவர் இல்லையே! இப்போது ஞானமூர்த்தி பேசிய அளவு கூடப் பேசமாட்டாரே!

அத்தோடு, அவரது மறுப்பும் பெருமளவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே எனும்போது, அவன் மீது, இந்தக் கோபம் எதற்காக?

ஆனால் . . .

வாடிய முகத்துடன், வசுமதி அருகில் வந்து நின்றாள்.

“சொல்லுங்கள், ஆன்ட்டி. எனக்கு விவரம் தெரிந்தாக வேண்டும்.”

ஒரு கணம் புரியாமல் நோக்கிவிட்டு, “இன்று காலையில், இங்கே ஒரு பெண் வந்தாள். உங்களைக் கூட்டிப் போவதற்காக,

மும்பையிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னாள். அவள் . . . அந்தப் பெண்ணின் பெயர் சுனிலா." என்று, நரேந்திரனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தவாறே, கூறினாள்.

"ஓ!" என்றவனின் முகத்தில் தெரிந்த திகைப்பும் யோசனையும், அந்தத் தாயின் மனதைச் சோர்வடைய வைத்தன.

அந்த சுனிலா கூறியதை, நரேந்திரனுடைய தந்தையே ஒப்புக்கொண்டபோதும், வசுமதியின் மனதில், சிறு நம்பிக்கை இருந்தது.

மகனின் காதலை அறிந்து, அதைக் கெடுப்பதற்காக, நரேந்திரனுடைய தந்தை ஏதோ சிலுமிஷம் செய்கிறாரோ என்று ஒரு சந்தேகம், அவளுக்கு உள்ளூர இருந்தது.

கணவர் அளவுக்கு, அந்தப் பெரிய மனிதரின் பேச்சில், செயலில் அவளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

ஆனால், அவரிடம் இருந்த அந்த சந்தேகம், நரேந்திரன் மேல் இருந்த நம்பிக்கை எல்லாம், இப்போது ஆட்டம் கண்டுவிட்டன.

பணம் பணத்தோடே என்று, ஒரு பணக்கார வாழ்வை அமைப்பதற்கு அங்கே ஏற்பாடு செய்துவிட்டு, இங்கே வந்து, அவளுடைய செல்ல மகளின் மனதில், இந்த நரேந்திரன் ஆசையை ஏன் விதைத்தான்? என்ன நினைத்து விதைத்தான்? வெறும் பொழுதுபோக்கா?

அவனுக்குப் பொழுதுபோக்காக இருக்கலாம். ஆனால், இதிலிருந்து, பூ மனம் கொண்ட அருமை மகள் எப்படி மீளப் போகிறாள்?

கலக்கத்துடன், அவனையே கேட்டாள். "ஏன் இப்படிச் செய்தீர்கள், நரேந்திரன்?

நளினிக்கு, நீங்கள் என்ன மாதிரி வாழ்வைக் கொடுப்பதாக இருந்தீர்கள்? திருமணத்துக்குப் பெற்றவர்கள் சம்மதம் வேண்டும் என்றோமே, அதிலேயே எங்களை, நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா? அங்கே, அந்த சுனிலாவோடு திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டு, இங்கே எங்களிடம் . . ."

"சற்று நிறுத்துங்கள், ஆன்ட்டி. நீங்கள் தவறான கருத்தோடு பேசுகிறீர்கள். சுனிலாவோடு, எனக்குத் திருமணம் பேசப்பட்டதே தவிர, நிச்சயம் எதுவும் நடக்கவில்லை. இதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றான் அவன் குரலில் அழுத்தத்துடன்.

"எப்படி நம்புவது? அவள், அந்த நிச்சயம் பற்றிய விவரம் வெளி

வந்த பத்திரிகையையே காட்டுகிறாளே!” என்றாள் வசுமதி.

“ஆமாம். அதற்கு, இந்த ஜெகப் புரட்டன் என்ன சொல்கிறார் என்று கேள்!” என்றார், முதுகு காட்டி அமர்ந்திருந்த ஞானமூர்த்தி.

“தாராளமாகச் சொல்லுகிறேன். நீங்கள் சொல்லும் இந்தப் பத்திரிகை விஷயம், எனக்கே புதிதான செய்திதான். எந்த விதமான புரட்டலும் இல்லாத உண்மை இது.” என்றான் நரேந்திரன் வேகத்துடன்.

பத்திரிகையில் செய்தி கொடுக்கிற அளவு போனார்களா என்கிற ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, அவன் தன்னை இங்கே நியாயப்படுத்தவும் வேண்டியிருந்தது.

“ஹூம்!” என்ற கணவரின் உறுமலை அடுத்து, வசுமதியும் வருத்தத்துடன் தலையசைத்தாள். “இது நம்பும்படியாக இல்லையே, நரேந்திரன்!”

நடப்பதைக் கவனித்துக் கொண்டு பேசாமலே நின்ற கிருபாவின் முகமும் ஐயம் காட்டி வாடவும், “நான் சொல்வது, முழுக்க முழுக்க உண்மை, ஆன்ட்டி. அதற்குச் சான்றே அங்கிள்தான்.” என்றான் நரேந்திரன்.

“என்னது?!” என்று மூன்று குரல்கள் சேர்ந்து ஒலிக்கவும், யாரும் பேச இடம் கொடுக்காமல், அவனே தொடர்ந்தான்.

“மெய்தான், ஆன்ட்டி. நான் சொல்வதைக கொஞ்சம் குறுக்கிடாமல் கேட்டால், நீங்களுமே, அப்படித்தான் சொல்வீர்கள். மகளுக்காக என்னைப் பற்றிய விவரம் அறியச் சென்றாரே அங்கிள். , அப்போது என் நடத்தைப் பற்றி, முக்கியமாக என் வாழ்வில் காதல், கல்யாணம் பற்றியும் விசாரித்திருப்பார்தானே? அப்படி விசாரிக்கும்போது, யாராவது . .எனக்குத் திருமணத்துக்கான நிச்சயம் நடந்ததாக, அவரிடம் சொன்னார்களா? அப்படி ஏதேனும் நடந்திருந்தால், அது பற்றி ஒருவர் விசாரிக்கும்போது, கண்டிப்பாகச் சொல்லியிருப்பார்கள்தானே? அதுவும் பத்திரிகையிலேயே வெளி வந்திருந்தால், அவரிடம் தெரிவியாது இருக்க வாய்ப்பே இல்லையே! அப்படி எதுவும் இல்லை என்று தெரிந்ததால்தானே, எங்கள் நேசத்துக்கு, அங்கிள் ஒப்புதல் தந்ததே! அப்போது நடந்திராத நிச்சயம், நான் இங்கே இருக்கும்போது, எப்படி நடந்திருக்கும்?” என்று கேட்டான் அவன்.

வெறுப்புடன் திரும்பிப் பார்த்தார் ஞானமூர்த்தி.

“ஓஹோ! ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையே

கடிக்கிற மாதிரி, இப்போது, என்னையே குற்றம் சொல்கிறாரா? நான் சரியாக விசாரிக்கவில்லை என்கிறாராக்கும்? நான், இந்த மனிதனை நம்பினேனடி! அடுத்து, இவரது திருமணம்தான் என்று, அங்கே பேச்சுதான். ஆனால், இவர் மேல் இருந்த நம்பிக்கையில், கல்யாண வயசு என்பதால், சீக்கிரமாக நடக்கும் என்று ஊகத்தில் சொல்வதாக எண்ணி, மேலே அலசி ஆராயாமல் விட்டுவிட்டேன். அவ்வளவு நம்பிக்கை இவர் மேலே! இப்போது கூட, அந்தப் பெண் சொன்னதைக்கூட, முதலில் நம்மில் யாரேனும், துளியேனும் நம்பினோமா? பத்திரிகைச் செய்தியை அவள் காட்டியபோது கூட, முழுதாக நம்பவில்லையே! இவர் அப்பாவுக்கே, ஃபோன் போட்டுக் கேட்டு, அவரும் "ஆமாம் " என்ற பிறகுதானே, இவர் இவ்வளவு பெரிய அயோக்கியன் என்று, நமக்குத் தெரிந்ததே!" என்று, கோபமும் தாபமுமாகப் பேசினார்.

தீவிர யோசனையில், கண் மூடித் திறந்தான் நரேந்திரன். ஞானமூர்த்தியை நேராக நோக்கி, "என் தந்தையிடம் என்ன கேட்டீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா? இருவரும் பயன்படுத்திய வார்த்தைகள்?" என்று கேட்டான்.

"ஏன்? அதிலே ஏதும் தில்லு முல்லு செய்யலாம் என்று எண்ணமா? ஒன்றும் முடியாது. சுனிலாவோடு உங்களுக்குத் திருமணம் நடக்கப் போகிறதா என்று தெளிவாகக் கேட்டேன். ஆமாம்., அப்படித்தான் நிச்சயித்திருக்கிறோம் என்று அவரும் தெளிவாகவே சொன்னார். இதற்கு மேலும், ஏதாவது, காதில் பூ சுற்ற எண்ணுகிறீர்களா? வாய்ப்பே கிடையாது. இன்னும் இங்கேயே நின்று, அழிச்சாட்டியம் பண்ணாமல், இடத்தைக் காலி பண்ணுங்கள். போங்கள்."

கோபத்தை வருத்தம் மிஞ்ச, ஞானமூர்த்தி இப்போது சற்று அமைதியாக, ஆனால், உறுதியோடு பேசினார்.

மேலும் சற்று யோசித்துவிட்டு, நரேந்திரன் மிகவும் நிதானமாகப் பேசினான். "ஆக, இப்போது நான் என்ன சொன்னாலும் நம்ப முடியாது என்கிறீர்கள். சரி விடுங்கள், நாளா வட்டத்தில் உண்மை விளங்கத்தான் போகிறது., அது எனக்குச் சாதகமாகவே இருக்கவும் போகிறது என்பது, எனக்கு நிச்சயம். அன்றைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று, நானும் இப்போதைக்கு, பிரச்சினையை ஒத்திவைத்துவிட்டுப் போய்விடலாம். ஆனால், அதுவரை, நளினி அழுதுகொண்டு இருப்பாள். அதை, என்னால் சகிக்க முடியாது. எனவே, தானாகப் புரியட்டும் என்று காத்திராமல், உண்மையை விளக்க, நான் வேறு ஒரு முயற்சி செய்யப் போகிறேன். " என்று ஞானமூர்த்தியை நேராகப் பார்த்தான்.

“நளினியை ஏமாற்றிவிட்டு, அந்தப் பெண் சுனிலாவை நான் மணக்கப் போவதாக உங்களுக்கு எண்ணம். அப்படியில்லை என்று, அவள் வாயாலேயே என்னை மறுத்துப் பேச வைத்துவிட்டால்? அப்புறமேனும்,  என்னை நம்புவீர்களா?” என்று கேட்டான்.

“எஎன்ன சார், பெரும் பணத்தைக் கொடுத்து, அவளை அப்படிச் சொல்ல வைக்கப் போகிறீர்களா?” என்று கேட்டார் ஞானமூர்த்தி.

“இல்லை, அங்கிள். பணத்தைக் கொடுத்து அல்ல. பணத்தை மறுத்து!” என்றான் அவன் பூடகமாக!

# அத்தியாயம் -7

நரேந்திரன் என்ன சொல்கிறான் என்று, அங்கிருந்த மற்ற மூவருக்கும் எதுவும் புரியவில்லை.

ஆனால், நரேந்திரனை ஹீரோவாகக் கருதி, அவனோடு கூடவே அலைந்து, சற்று அதிகம் பழகியிருந்ததாலோ, என்னவோ, கிருபாகருக்கு, மற்றவனிடம் நம்பிக்கை உண்டாயிற்று.

"உட்காருங்கள், சார். " என்று சோஃபாவைக் காட்டி உபசரித்தான்.

திடுமென உணர்வு வந்தது போல, வசுமதியும், "ஆமாம். உட்காருங்கள்." என்றாள். கூடவே, "என்ன செய்யப் போகிறீர்கள், நரேந்திரன்? எதுவானாலும், ஜாக்கிரதை. இன்னொர் ஏமாற்றம், நளினி தாங்க மாட்டாள்." என்று எச்சரித்தாள்.

"எப்போதுமே, ஏமாற்றமே கிடையாது என்கிறேன். இதில், இன்னோர் ஏமாற்றம் எப்படி வர முடியும்?" என்றான் அவன்.

"ஆனால், அந்த சுனிலா . . . உங்களைக் காகாதலிப்பதாக . . .நீங்கள் இருவரும் அங்கே ஒன்றாகச் சுற்றியதாக . . . நிநிறையச் சொன்னாளே . . ."

உட்கார்ந்து, இறுக்கம் தளர, உடலை லேசாக முறுக்கி விட்டுக்கொண்டு, நரேந்திரன் கேட்டான். "யாரோ ஒருத்தி வந்து, என்னைப் பற்றி என்ன சொன்னாலும், அதை உடனே நம்பி விடுவீர்களா, ஆன்ட்டி?" என்று சிறு கோபத்துடன் தொடங்கியவன், உடனே தன்னை அடக்கி, "இல்லையில்லை. அவள் தந்த பத்திரிகைச் செய்தி பார்த்து, என் அப்பாவிடம் கேட்டு, அதன் பிறகுதானே நம்பியதாகச் சொன்னீர்கள். போகட்டும். அந்த அளவுக்கு நம்பிக்கை இருந்ததே பெரிய விஷயம்தான். அதை விடுங்கள். இப்போது சுனிலா எங்கே தங்கி இருக்கிறாள்?" என்று வினவினான்.

நடப்பதை ஒரு முகச் சுளிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஞானமூர்த்தி, "ஏன்? அங்கே ஆள் அனுப்பி, அவளை மிரட்டப் போகிறீர்களா?" என்று, சட்டெனக் கேட்டார்.

"அங்கிள் . . ." என்று கண்டனக் குரலில் அழைத்து, இது கூடாது என்பது போல, லேசாகத் தலையசைத்தான் நரேந்திரன். "ஏற்கனவே, நிறையப் பேசிவிட்டீர்கள். தகிடுதத்தம், குண்டாத்தனம், ஜகப்புரட்டல் . . .என்று நிறையவே! இப்போது, நான் ஆள் வைத்து மிரட்டுகிறவனா? சொன்னதெல்லாம் தப்பு என்று அறியும்போது எப்படி இருக்கும்

என்றும், சற்று யோசித்துப் பேசுங்கள். நான், சுனிலாவின் இருப்பிடம் பற்றிக் கேட்டது, அவளை, இங்கே அழைத்து வர ஏற்பாடு செய்வதற்காகத்தான். அதில் உங்களுக்குச் சந்தேகம் வருமானால் . . ஃபோன் எண் கொடுத்திருப்பாள் அல்லவா? செல் . . ? என்னிடம் சொல்ல வேண்டாம். நீங்களே கூப்பிடுங்கள். அவள் வராமல், தீராது, அங்கிள். அவள் தொடங்கி வைத்தது., அவள்தானே முடித்தாக வேண்டும்? அவள் இங்கே, உங்கள் வீட்டுக்கே வரட்டும். உங்கள் முன்னிலையிலேயே, அவளோடு பேசுகிறேன். போதுமா? “ என்று கேட்டான்.

சுனிலாவின் தொடர்பு எண்ணைக் குறித்து, அதை நரேந்திரனிடம் கொடுக்கும்படி, ஞானமூர்த்தி, மகனை ஏவினார்.

ஆனால் அவன், அதை அவரிடமே கொடுக்கும்டி திருப்பி அனுப்பினான். “உங்கள் வீட்டுக்கு, நீங்கள் அழைப்பதுதான் முறை. அப்படி அழைத்துத்தான் வந்தாயா என்று என்னைக் கேட்டுவிடாதீர்கள். இது, வேறு வழியின்றிச் செய்தது. “ என்றான்.

என்னவோ, அவன் பேசிய பாணி உள்ளூரத் தென்பூட்ட, “ஒரு காஃபி குடிக்கிறீர்களா?” என்று வசுமதி வினவினாள். கணவன் பக்கம் பார்வையைச் செலுத்தி, “எப்படியும், அவருக்குத் தேவைப்படும்.” என்றாள் மெல்லிய குரலில்.

“இருக்கட்டும், ஆன்ட்டி. இப்போதைக்கு என் தொண்டைக்குள் எதுவும் இறங்குவது கடினம். எல்லாம் நல்லபடியாக முடியட்டும். அப்புறம் பார்ப்போம். அங்கிளுக்கு மட்டும் கொடுங்கள்.” என்றான் அவன்.

“அவருக்கு மட்டும்தான் இறுக்கமா? நான் என்ன, உல்லாசத்தில் துள்ளிக் குதித்துக்கொண்டா இருக்கிறேன்? இரண்டு பேருக்கும் சேர்த்தே, காஃபி கொண்டு வா.” என்றார், செல்லில் எண்களை அழுத்திக் கொண்டிருந்த ஞானமூர்த்தி.

ஒப்புதலாக எதுவும் சொல்லாவிட்டாலும், வசுமதி காஃபியைக் கொணர்ந்து கொடுத்தபோது, நரேந்திரன் மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

மூடியிருந்த அறைப் பக்கமாக அடிக்கடி பார்வை செல்ல, அருகில் வந்து அமர்ந்த கிருபாகரிடம், “அக்கா எதாவது சாப்பிட்டாளா?” என்று சைகையால் கேட்டான்.

“அம்மா கட்டாயப்படுத்திக் கொஞ்சம் சாப்பிட வைத்தார்கள்.

ஆனால், பேருக்குத்தான் சாப்பிட்டாள்.” என்றான் அவன், மிகவும் தணிந்த குரலில்.

அதே தணிந்த குரலில், “கிருபா, அந்த சுனிலாவோடு நான் பேசும்போது, பெரியவர்கள் யாரும் குறுக்கிடாமல், கொஞ்சம் பார்த்துக் கொள்கிறாயா? “ என்று நரேந்திரன் கேட்டான்.

ஒப்புதலாகத் தலையாட்டிவிட்டுக் கவலையோடு வாயிலைப் பார்த்தான் சின்னவன்.

அவர்களை அதிகம் காத்திருக்க வைக்காமல், சுனிலா சீக்கிரமே வந்துவிட்டாள்.

வந்தவள் வேறு யாரையும் பாராமல், நேரே நரேந்திரனிடம் சேன்று, அவனது தோளில் கைவைத்துக் குனிந்து, அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

அவள் அணிந்திருந்த உடையும், குனிந்த நிலையுமாக, விடலைப் பருவத்தை அடைந்திருந்த கிருபாகர், அனிச்சை போல அருவருப்புடன், நரேந்திரன் அருகிலிருந்து துள்ளி விலகிவிட்டான்.

அதுவே வசதியாகி, நரேந்திரனின் அருகிலேயே அமர்ந்து, அவன் தோளிலேயே, சுனிலா உரிமையோடு சாய்ந்துகொண்டாள். “உன்னைப் பார்த்து, எத்தனை நாள் ஆகிவிட்டது, நரூ டார்லிங்!” என்ற கொஞ்சலோடு.

தோளைப் பற்றியிருந்த அவளது கைகளை விலக்கியவாறு, நரேந்திரன்  எழுந்தான்

விடாமல் கூடவே எழ முயன்றவளைத் தடுத்து, “வேண்டாம். உட்கார். நாம் இருவரும் எவ்வளவு நெருக்கம் என்பதை, நீ வந்ததுமே எல்லோருக்கும் காட்டி விட்டதால், இப்படிப்பட்ட இன்னுமொரு காட்சிக்கு, இப்போது அவசியம் இல்லை.” என்றான் அவன், சாதாரணமாக.

சுனிலாவும் தயாராகத்தான் வந்திருந்தாள்.

கோபம், கலக்கம், அருவருப்பு என்று அங்கிருந்த மற்றவர்களின் முக பாவத்தை அளவிட்டவள், நரேந்திரனிடம் கொஞ்சலாகவே பேசினாள். “ஓ, அதுவா? ரொம்ப நாள் பிரிந்திருந்ததால், என்னால் அடக்கிக் கொள்ளவே முடியவில்லை! ஆனால், இந்த இவர்கள் முன்னிலையில் முத்தமிட்டது தப்பா, நரூ?” என்று புரியாத சிறுமியாய், விழி விரித்துக் கேட்டாள்.

“தப்பே இல்லை. “ என்றான் நரேந்திரன். “அது உண்மையாக இருக்குமானால். ஆனால், ஓர் உதவி செய்கிறாயா? இந்த “நரூ”வை விட்டு விடுகிறாயா? என்னமோ, நரி, நரி என்பது போல இருக்கிறது. குறைந்த பட்சமாக, எனக்கு கொஞ்சமும் நரிப் புத்தி கிடையாது என்பதை நினைவில் வைத்துப் பேசு.” என்று, “எனக்கு” வை, சற்று அழுத்திச் சொன்னான்.

அர்த்தம் புரிந்தபோதும், கலகலவென்று நகைத்து, “நம்மில் யாருக்குமே, நரிப் புத்தி கிடையாது, டார்லிங்! செல்லமாகச் சுருக்கிக் கூப்பிட்டால், உங்களுக்குப் பிடிக்குமே என்றுதான் . . . “ என்று “நரி”ப் பேச்சை அத்தோடு முடித்தாள் சுனிலா.

வேறு யாரும் பேச இடைவெளி விடாமலே, “ஆனால், இவ்வளவு நாட்கள் இங்கேயே இருந்துவிட்டீர்களே, டார்லிங். என்னதான் வேலை முக்கியம் என்றாலும், உங்களைப் பிரிந்து, நான் என்ன ஆவேன் என்று யோசிக்க வேண்டாமா? பழைய மாதிரி, என்னை இறுகக் கட்டிப் பிடித்துப் பாருங்கள், நான் எவ்வளவு மெலிந்துவிட்டேன் என்று உங்களுக்கே தெரியும்.” என்று, தொடர்ந்து தங்கள் நெருக்கத்தைப் பறைசாற்ற முயன்றாள்.

அவளது முயற்சிக்கு வெற்றியே கிட்டினாற்போல, வீட்டினர் மூவரின் முகங்களிலும் அருவருப்பும், சீற்றமும் பெருகலாயிற்று.

அந்த அழுகுணிப் பெண்ணைக் கண்ணிலேயே காணோம். அப்போதே, வெறுத்து ஒதுக்கி விட்டாள் போல! இவர்களும், இனி, இவனை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவார்கள். அப்புறம்?

அப்புறமாக, வாலை ஆட்டிக்கொண்டு, அவள் பின்னே வருவது தவிர, இவனுக்கு வேறு வழி?

விஷயம் முற்றிலும் முடியுமட்டும், இப்படியே கொண்டு செலுத்த வேண்டும்.

சுனிலாவின் திட்டத்துக்குத் தானும் உதவி செய்கிறவனைப் போல, “அதாவது, மும்பையில், நாம் இருவரும் மிகவும் நெருக்கமாகப் பழகினோம். அப்படித்தானே?” என்று கேட்டான் நரேந்திரன்.

புன்னகை விரிய, “ஆமாம்! திருமணம் நிச்சயம் ஆனவர்கள், பின்னே எப்படிப் பழகுவார்களாம்?” என்று செல்லச் சிணுங்கலுடன் கேட்டாள் அவள்.

“சரிதான் சரிதான். அதுவும், பத்திரிகையிலேயே செய்தி வந்து, திருமண நிச்சயத்துக்கு முத்திரையும் இட்ட பிறகு, நெருக்கத்தை யாரால்

தடுக்க முடியும்? நீ சொல்வது, ரொம்பவே சரிதான்." என்று அவளுக்குப் பின்பாட்டு பாடிய நரேந்திரன், மேலும் ஒரு கேள்வி கேட்டான்.

"இப்போது நீ என்னை அழைத்துப் போக வந்திருக்கிறாய். . . . அதாவது, நம் காதல் கல்யாணத்துக்காக! சரியாகச் சொல்கிறேன்தானே? உனக்கு என் மேல் காதல்., எனக்கு உன் மேல் காதல். அப்படித்தானே?" என்று வினவினான்.

துள்ளிக் குதிக்க வேண்டும் போல இருந்தது, சுனிலாவுக்கு. இவ்வளவு எளிதாக விஷயம் முடியும் என்று, அவள் எதிர்பார்க்கவே இல்லை!

மாமியார், நாத்தனார் என்றாலே, கோணல் புத்தி வந்துவிடும் போல!

வெறும் வாத்து மண்டை! இவனைப் பற்றி, என்ன மிரட்டு மிரட்டினார்கள்! இருக்கட்டும், இருக்கட்டும். மும்பைக்குப் போய், அவர்கள் இருவருக்கும், கொஞ்சம் . . . கொஞ்சம் என்ன, நிறையவே பேயோட்ட வேண்டும்!

உடலை நெளித்து, தலையைச் சரித்து, "ஆ . .மாம், டார்லிங். மும்பை போய் அளவு கொடுத்து, நம் திருமண ஆடைகள் தைத்தானதும், நம் திருமணம். அப்புறம், தேனிலவாக உலகச் சுற்றுப் பயணம் என்பது, என் . . இல்லை, நம் திட்டம், டியர்!" என்று கிளியாய் மிழற்றினாள்.

"நல்ல திட்டம்!" என்று நரேந்திரன் அதையும் ஒத்துக் கொள்ளவும், சுனிலாவுக்கு உள்ளூர ஆச்சரியத்தோடு, ஒரே கொண்டாட்டம் ஆகிவிட்டது.

என்னமோ, நரேந்திரனைக் கையாள்வது கடினம் என்று, அவன் வீட்டினர் பூச்சாண்டி காட்டினார்களே! இங்கே விஷயமே வேறே!

எப்படியோ இங்கே வந்த இடத்தில், அந்தப் பெண் நளினி, இவனைப் பிடிக்க முயன்றிருப்பாள் போல. ஆண்பிள்ளைதானே? அந்தக் கழுதையும், ஆள் சற்று நன்றாக இருக்கவும், கொஞ்சம் தலை சுற்றியிருக்கும்! ஆனால், "அந்த" மாதிரி வாழ்ந்துவிட்டு, இந்தக் குச்சு வீட்டுக்குள், இவனால் எத்தனை நாள் இருக்க முடியும்?

அவனாக உதறிக்கொண்டு வருவதற்கு, ஏதாவது வாய்ப்பைத் தேடிக் கொண்டு இருந்திருப்பான் போல. இப்போது நாம் வந்தது, அவனுக்கு வசதியாகிப் போய்விட்டது! அதுதான், அய்யா, இப்படி ஒத்து ஊதுகிறான்!

இருக்கட்டும். இதுவும் நல்லதுதான். கொஞ் . .சம் கிறுக்குத்தனம்

உண்டு என்றார்களே! அதெல்லாம், இப்போது அடியோடு, சுத்தமாய்ப் போய் விட்டிருக்கும்! இனிமேல், நாய்க் குட்டி மாதிரிக் காலைச் சுற்றி வர வைப்பது எளிது! வருவான். அவனைக் கைக்குள் போட்டுக்கொண்டு, மகாராணி மாதிரி வாழலாம்! ஒரு பிள்ளைக்கு ஒரு பிள்ளையாக மூன்றாவது தலைமுறை! நிறையவே சேர்ந்திருக்கும்!

ஏற்றாற்போல, “செய்து விடலாம்!” என்றான் நரேந்திரன். “ஆனால், இங்கே ஒரு சின்ன வேலை இருக்கிறது. அதை முடித்துவிட்டால், உன் . .நம்முடைய எந்தத் திட்டத்துக்கும், எந்த விதத் தடையுமே இராது.” என்றான் நரேந்திரன்.

“சின்ன வேலைதானே? சீக்கிரமாக முடியுங்கள், காதல் மன்னா. நாம் இணைவதற்காக, இன்னும் ரொம்ப நாள் என்னால் காத்திருக்க மடியாது. “ என்று சொக்குப் பார்வை பார்த்தாள், அவள்.

“ரொம்ப சரி.” என்ற நரேந்திரன், கிருபாகரிடம் திரும்பினான்.

உட்கார்ந்திருந்த சுனிலா அறியாமல், கண்களால் அவனுக்கு லேசாகச் சைகை செய்து, பாக்கைட்டில் இருந்த சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தான்.

“வீட்டைத் திறந்து, முதல் படுக்கையறைக்குப் போ, கிருபா. பீரோவுக்குள், மேல் தட்டில், இரண்டு பெரிய பிரௌன் பேப்பர் கவர்கள் இருக்கும். அவை இரண்டையும் எடுத்து வா. “ என்றான்.

அவன் ஓரளவு எதிர்பார்த்தது போலவே, “உங்களுக்கு வேண்டுமானால், நீங்கள் போய் எடுக்க வேண்டியதுதானே? என் பிள்ளை என்ன, உங்கள் வேலைக்காரனா? உங்கள் உத்திரவுப்படி, உங்கள் வீட்டுக்குப் போய்ப் பொருட்களை எடுத்து வருவதற்கு?” என்று ஞானமூர்த்தி ஆத்திரப்பட்டார். “அப்படியே, அந்தம்மாவையும் அழைத்துப் போய்விட்டால், என் வீடு சுத்தமாகும்!” என்றார் வெறுப்புடன்.

“நானே போய் எடுத்து வருவேன், அங்கிள். ஆனால், அதுதான் சாக்கு என்று, கதவை உள்ளே பூட்டிக்கொண்டு விட்டீர்கள் என்றால், என்ன செய்வது? என் வேலை இன்னும் முடியவில்லையே! அதற்காகத்தான், கிருபாவை அனுப்பினேன்.” என்றான் நரேந்திரன்.

சரியாக இடம் சொல்லி அனுப்பியதால், கிருபாகர் விரைவிலேயே கவர்களோடு வந்துவிட்டான்.

உறைகளின் உள்ளே கத்தையாக இருந்தவற்றை வெளியே எடுத்து, டீபாயின் மீது வைத்தான், நரேந்திரன்.

எல்லாம் முத்திரைத் தாளில் எழுதிய பத்திரங்கள்.

“இதெல்லாம் என்ன, என் அன்பே?” என்று சுனிலா தேன் குரலில் கேட்டாள்.

“சொத்துப் பத்திரங்களின் நகல்கள், சுனிலா. மும்பையில் என் சொத்துக்கள். கட்டிடங்கள், கடைகள், வீடுகள், தொழில்களில் என் பங்குகள், என் மொத்தச் சொத்துமே! எல்லாக் கணக்கும் இதில் இருக்கிறது.”

எதற்காக என்று திகைப்பு தோன்றினாலும், மகனின் கை அழுத்தத்துக்கு இணங்கி, பெரியவர்கள் இருவரம் பேசாமலே இருந்தனர்.

ஆனால், “ஓ!” என்ற சுனிலாவின் கண்கள் பளபளத்தன. “எஎல்லாமா? நூறு கோடியை எட்டும் என்று என் அப்பா சொன்னாரே!” என்று பரபரத்தாள்.

அத்தோடு நிறுத்தாமல், “எல்லாவற்றையும் இங்கே . . . ஓ, அதற்காகத்தான் இவர்கள் உன்னை . . . “ என்று, இகழ்ச்சியாக ஏதோ சொல்ல முயன்றவளை, ஒற்றை விரல் உயர்த்தி, “உஷ்!” என்ற ஒரே சீறலில், நரேந்திரன் அடக்கினான்.

அவனது முகமே, இப்போது சினந்து மாறியிருந்தது.

“இந்த மாதிரி, மேலே ஒரு வார்த்தை பேச வேண்டாம், சுனிலா. இந்தச் சொத்துக்களைப் பற்றி, இங்கே யாருக்கும், எதுவும் தெரியாது. . .”

“பின்னே, இதெல்லாம் எதற்காகவாம்? இதைக் காட்டாமலா, அந்தப் பெண், உன் பின்னே சுற்றினாள்?”

ஆத்திரத்துடன் ஞானமூர்த்தி குறுக்கிடு முன்பாகவே, “இது போலப் பேச வேண்டாம் என்று, இப்போதுதான் சொன்னேன், சுனிலா. ஒருவர் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்துகொண்டு, அவர்களையே அவமதிப்பதை, என்னால் அனுமதிக்க முடியாது!” என்றான் நரேந்திரன் கடுமையான குரலில்.

சற்றுத் திகைத்துவிட்டுத் தோளைக் குலுக்கினாள் சுனிலா. “சரி சரி. இவர்கள் எப்படியோ போகட்டும். அது பற்றி எனக்குக் கவலையில்லை. இந்தச் சொத்துக் கணக்கு, இங்கே ஏன் வந்தது? முதலில் அதைச் சொல்லு.” என்று தனக்கு முக்கியம் என்று

தோன்றியதைப் பற்றி விசாரித்தாள்.

“வேறே ஒரு காரணமாக, இவைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தேன். இப்போது, இன்னொரு விதமாக, இவைகளே பயன்படப் போகின்றன.” என்று குனிந்து, இரண்டு கத்தைகளிலும் கடைசியாக வைத்திருந்த முத்திரைத் தாளை, நரேந்திரன் எடுத்தான்.

“எஎன்ன இது?” என்று சந்தேகமாகக் கேட்டாள் சுனிலா.

“இது விடுதலைப் பத்திரம்.” என்றான் நரேந்திரன் தெளிவாக!

எல்லோருக்குமே அதிர்ச்சிதான் என்றாலும், எதிலிருந்து, யாருக்கு விடுதலை என்று புரியாத குழப்பத்தில், ஞானமூர்த்தி குடும்பம் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துவிட்டு, மறுபடியும், நரேந்திரனை நோக்கியது.

ஆனால், உடனே எதையோ ஊகித்து, “என்னது?!” என்று, சுனிலா அதிர்ந்தாள். “இஇது . . . இது விடுதலைப் பத்திரம் என்றால், திருமண ஒப்பந்தம் எழுதி, அதில் உன் சொத்தில் எனக்கு உரிமை கிடையாது என்று, விடுதலைப் பத்திரத்தில் நான் கையெழுத்திட்டுத் தர வேண்டும் என்கிறாயா? ஊகூம். அதெல்லாம் முடியாது. நான் மாட்டேன். சும்மாவே, நூறு கோடியை எட்டும். இன்னும், உன் அப்பா, தாத்தா எல்லோரும் மண்டையைப் போட்டால், இன்னும் இரண்டு மூன்று மடங்காகும். எல்லாவற்றையும், வேண்டாம் என்று விட்டுவிடுவதற்கு நான் என்ன இளிச்சவாயா? அதெல்லாம் முடியாது. முடியவே முடியாது!” என்று ஆத்திரத்துடன் படபடத்தாள்.

அவள் பேசி முடிக்கும்வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, புன்னகை செய்து, “இது நீ நினைக்கிற மாதிரி, திருமண ஒப்பந்தத்தின் ஒரு பகுதி அல்ல, சுனிலா. அந்த மாதிரி எதையும், திருமணம், திருமண ஒப்பந்தம் என்றெல்லாம் நான் கற்பனை கூடப் பண்ணியதில்லை. இது, முழுக்க முழுக்க வேறு விஷயம்!” என்றான் நரேந்திரன்.

“நல்லவேளை!” என்று சற்று அமைதியடைந்தபோதும், “வேறு விஷயம் என்றால், வேறு என்ன விஷயம்? அதை முதலில் சொல்லித் தொலையேன்! எனக்கு நெஞ்சே வெடித்துவிடும் போல, ஒரே பதட்டமாக இருக்கிறதே!” என்று, கையைப் பிசைந்துகொண்டு தவித்தாள் அவள்.

“சொல்லுகிறேன், சொல்லுகிறேன். சொல்லத்தானே, இதை, இங்கே எடுத்து வரச் சொன்னேன்., அதனால் கட்டாயம் சொல்லுவேன். சொல்லியே தீருவேன்!” என்று வார்த்தைகளால் விளையாடி, நையாண்டி செய்தான் நரேந்திரன்.

அவனை வெறித்துப் பார்த்தாள், சுனிலா. “இதோ பார்,

நரேந்திரன். நம் திருமணம் பற்றிப் பலர் அறிய, உன் தந்தையும், தாத்தாவும் பேசியிருக்கிறார்கள். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை நிறுத்த, நீ ஏதாவது குறுக்கு வழியில் முயற்சி செய்தால், என் தந்தை, உன் குடும்பத்தைச் சும்மா விட மாட்டார். மான நஷ்ட வழக்கிலேயே, உன்னிடமிருந்து, பல கோடி பிடுங்கி விடுவார்." என்று மிரட்டினாள்.

நரேந்திரனின் புன்னகை மேலும் விரிந்தது. "நான் ஏனம்மா திருமணத்தை நிறுத்தப் போகிறேன்? நான்தான், நிறுத்துவதோ, நடத்துவதோ, எல்லாம் உன் பொறுப்பு என்று, உன் விருப்பத்துக்கு விட்டு விடப் போகிறேன். இதெல்லாம் என்ன என்று நான் சொல்லி முடித்த பிறகும், நீ என்னை மணந்துகொள்ள விரும்பினால், உனக்குத் தாலி கட்ட, நான் தயார்!" என்றான்.

"அப்படியானால், திருமணத்துக்குச் சீக்கிரமே ஒரு நாளைப் பார்க்கச் சொல்ல வேண்டியதுதான். நூறு கோடிக்கு அதிபதி., முன்னூறு கோடிக்கு அதிபதி ஆகப் போகிறவன்! உன்னை மறுக்க, எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்றாள் அவள் குதூகலத்துடன்.

"அதுதான், சொன்னேனேம்மா, எல்லாம் உன் விருப்பம்தான் என்று. ஆனால், முதலில், இதைப் பார்த்து முடித்து விட்டு, அப்புறமாக, அந்தத் திட்டம் போடலாம்."

பார்வையாளர்களாக மட்டுமிருந்த பெற்றோரும், பிள்ளையும் அதிர்ந்து விழிப்பதை அரைக் கண்ணால் கவனித்தபடியே நரேந்திரன் ஓர் ஒற்றை சோஃபாவில் உட்கார, அந்த சோஃபாவின் கையிலேயே, சுனிலாவும் உரிமையோடு, அவனை ஒட்டி அமர்ந்தாள்.

# அத்தியாயம் -8

ஞானமூர்த்தி குடும்பத்தாரின் முகம் வாட வாட, சுனிலாவுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.

உரிமையோடு, நரேந்திரனின் சிகையை விரல்களால் அளைந்து விளையாடியபடியே, அவன் செய்வதைக் கவனித்தாள்.

டீபாய் மீது இருந்த காகிதக் கற்றைகளின் கீழிருந்து, முன்பே எடுத்து வைத்த முத்திரைத் தாளை, மற்ற காகிதக் கற்றைகளின் மீது, வைத்து விரித்துக் காட்டினான் நரேந்திரன்.

அவன் பத்திரங்களை வைத்த தினுசில், இரண்டிலுமே, அவன் கையெழுத்திட்டு இருந்தது, நன்றாகத் தெரிந்தது.

"பார் சுனிலா, இவைகளில், ஒன்று அப்பாவுக்கு. ஒன்று எனக்கு. இந்த வீடு போலவே, மூன்றாம் தளத்தில் ஒரு வீடும், கீழே நீல நிறத்தில் ஒரு சிறு கார் நின்றதே, அதுவும், இங்கே என் நண்பனோடு பாதிப் பங்கு போட்டுத் தொடங்கியிருக்கும் ஒரு சிறு "ஃபாக்டரி"யும்தான், இனிமேல் என்னதாக இருக்கப் போகின்றன. போதும்தானே? போதும் என்பது, என் கருத்து. என் மனைவியாகப் போகிறவளும் அப்படித்தான் நினைக்க வேண்டும். தப்பித் தவறிக கூடக் குடும்பச் சொத்தில், அவளுக்கு எந்த வித ஆசையும் வந்துவிடக் கூடாது என்பது, என் விருப்பம். அதனால், சட்டப்படியான நடவடிக்கையாக, இந்தச் சொத்துக் கணக்கில் கண்டிருக்கும் அத்தனை சொத்துக்களுக்கும் எனக்கும், இனி எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று முத்திரைத் தாளில் எழுதிக் கையெழுத்தும் போட்டு வைத்திருக்கிறேன். இதில் எழுதியிருப்பதை அப்படியே ஒத்துக் கொள்வதாக நீயும் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டால், பத்திரத்தைப் பதிவு செய்துவிட்டு, ஜாம் ஜாம் என்று, நம் திருமண வேலைகளைக் கவனிக்க, மும்பைக்குக் கிளம்பி விடலாம். என்ன சொல்லுகிறாய்?" என்று, கணீரென்ற குரலில் தெளிவாகக் கேட்டான், நரேந்திரன்.

அறைக்குள் பூட்டிக்கொண்டு கண்ணீர் வடிக்கும் ஒருத்திக்கும், எல்லாம் நன்றாகக் கேட்க வேண்டும் என்று எண்ணினான் போலும்!

விழிகள் தெறித்து விடும்போல, அவ்வளவு ஆச்சரியம், ஞானமூர்த்திக்கு! பார்த்துக் கொண்டிருந்த குடும்பத்தினர் மூவரின் முகங்களிலும், வியப்புடன் மரியாதையும் பெருகலாயிற்று.

ஆனால், உரிமை காட்டுவதாக எண்ணி, நரேந்திரன் கூடவே

அமர்ந்து, பத்திரங்களைத் தெளிவாகப் பார்த்துவிட்ட சுனிலா, துள்ளி எழுந்து, “உஉனக்கென்ன பைத்தியமா?” என்று, அதிர்ந்து போய்க் கேட்டாள்.

“பைத்தியமா? பைத்தியமா என்றா கேட்டாய்? ஆமாம்மா. நான் காதல் பைத்தியம்! நாம் சந்தோஷமாகக் காதல் செய்வதற்கு, எனக்கான மும்பைப் பெரிய வீடு எவ்வளவு இடையூறாக இருக்கும், தெரியுமா? அதனால்தான், அந்த வீடு வேண்டாம் என்று தீர்மானித்தேன். நாம் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே வாழ்வதற்காகவே, குட்டியாக இந்த வீட்டையும் வாங்கினேன்! அப்புறம், சொத்து என்றாலே, ஒவ்வொன்றுக்கும் கணக்கு வழக்குப் பார்ப்பதற்கு எவ்வளவு நேரம் செலவாகும் என்று, உனக்கும் தெரியும்தானே? காதல் கடலில் “தொபுக்கடீர்” என்று குதித்துவிட்டிருக்கும் நீயோ, என்னைக் கொஞ்ச நேரம் பிரிந்திருக்கவே, மிகவும் கஷ்டப்படுவாய் அல்லவா? நம் இருவருக்கும், இப்படிப் பிரிந்திருக்கும் பிரச்சினையே வரக் கூடாது என்றுதான், என் எல்லாச் சொத்துகளையும், அப்பா, தாத்தா பெயருக்கே மாற்றச் சொல்லி, ஏற்கனவே எழுதி வைத்துவிட்டேன். இந்த விடுதலைப் பத்திரத்தையும் சேர்த்து “ரிஜிஸ்டர்” பண்ணிவிட்டால், அப்புறம், நாம் நிம்மதியாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்!”

சந்தோஷக் குரலில் நரேந்திரன் சொல்லிக்கொண்டே போக, “ஏய், நிறுத்து!” என்று சுனிலா கத்தினாள்.

“ஏன் சுனிலா? நம் எதிர்காலம் பற்றித் திட்டம் போட்டால், ஏன் நிறுத்தச் சொல்கிறாய்?” என்று அப்பாவியாக வினவினான் நரேந்திரன்.

கண்கள் இடுங்க, அவனைக் கூர்ந்து பார்த்தாள் அவள்.

“நீ ஏதோ டிராமாப் போடுகிறாய் என்று நினைக்கிறேன். ஏதோ கதை சொல்லி, என்னை விரட்ட முயற்சிக்கிறாயோ என்று . . இப்போது எனக்குத் தோன்றுகிறது. ஆமாம்., அதுதான் உண்மை. என்னை விரட்டிவிட்டு, இந்த வீட்டு மயக்கு மோகினியை மணக்கலாம் என்று திட்டமா? அதெல்லாம் நடக்காது. நான், உன்னை ஒருபோதும் விட மாட்டேன். உன் சொத்தையும் விடமாட்டேன். என்னை ஏமாற்ற, உன்னால் ஒருபோதும் முடியாது. இந்தக் கதை, நிச்சயமாக என்னிடம் நடக்காது!” என்று, கையை ஆட்டிக் கத்திப் பேசினாள்.

அமைதியாகவே, “கதையல்ல, சுனிலா. இந்தப் பத்திரங்களில் உள்ள தேதியைப் பார்! நான், மும்பையிலிருந்து வந்து ஒரு வாரத்தில் வாங்கியது. அங்கிருந்து வந்ததே, அந்த வாழ்வு பிடிக்காமல் போனதால்தான். அந்த ஒரு வாரமும் தீவிரமாகச் சிந்தித்து, நான் எடுத்த

முடிவு, இது. அப்போதே, வருங்காலத்தைப் பற்றி, முடிவு செய்து, இதைத் தயார் பண்ணியும் வைத்துவிட்டேன். அங்குள்ள வாழ்வில் எனக்குப் பிடித்தம் கிடையாது என்பது, என் குடும்பத்தைக் கேட்டால் தெரியும். ஏன், இத்தனை நாளில், நீயும் அவர்களிடம் என்னைப் பற்றிக் கேட்டிருப்பாய்தானே? எனவே, இது கதையோ, நாடகமோ அல்ல என்பதை, நிச்சயமாகத் தெரிந்துகொள். " என்றான் நரேந்திரன்.

அவனது பேச்சு உண்மை என்பதை, முத்திரைத் தாளின் தேதி சொன்னது.

சந்தேகமாக, மேலும் சில தாள்களை எடுத்துப் பார்த்த சுனிலாவுக்கு, வயிறு கலங்கியது.

ஆக, இவன் தாய் சரோஜினியோ, தமக்கை ரூப்மதியோ பொய் சொல்லவில்லை!

இவன் கிறுக்கன்தான்!

ஆனால், நாளாவட்டத்தில் முன்னூறு கோடியை எட்டக் கூடிய சொத்து! ஒன்றுமில்லாமல் போகிறதே! வேண்டாம் என்று, அவளே கையெழுத்துப் போட வேண்டுமாம்! அப்புறம், செல்லாக்காசு, இவனை எதற்காக மணப்பது?

நெஞ்சு எரிய, "அடப் பாவி! ஏன் இப்படிச் செய்கிறாய்? " என்று புலம்பினாள் அவள்.

உற்சாகத்துடன் பேசினான் அவன். "காதல், சுனிலா, காதல்! உன்னோடு காதலில் மூழ்கிக் கிடக்கும் ஆசை! பணம், என்ன பணம்? நீயும் என்னைத்தானே, காதலிக்கிறாய்? கல்யாணத்துக்கு நான் இப்போதே தயார். இதில் கையெழுத்தைப் போட்டுவிட்டாய் என்றால், உடனே . . .

எரித்து விடுவாள் போலப் பார்த்து, "உன்னோடு சேர்ந்து, திருவோடு ஏந்தித் தெருவில் நிற்பதற்கு, என்னையும், உன்னைப் போலப் பைத்தியம் என்றா, நினைத்தாய்?" என்று கொதிப்புடன் கேட்டாள், சுனிலா.

"தெருவில் நிற்பானேன்? மேலே இருக்கும் அழகான, சின்ன வீட்டில், நாம் இருவர் மட்டுமாக, நம் வேலைகளை நாமே செய்துகொண்டு . . . கையால் செய்ய வேண்டாம். மிக்சி, கிரைண்டர், சலவை மிஷின் கூட வாங்கி வைத்திருக்கிறேன்! " என்று பெருமை பேசினான் நரேந்திரன்.

வெறுப்புடன் நோக்கி, "மண்ணாங்கட்டி! " என்று சீறினாள் அவள்.

“இந்தக் குடிசை வீட்டுக்குள் இருந்து, உனக்குக் கூழும் கஞ்சியும் காய்ச்சிக் கொடுப்பதற்கு, நான் என்ன வக்கில்லாத பிச்சைக்காரியா? சீச்சீ! அதற்கு, வேறே ஆளைப் பார்! சே! கொஞ்சம் கிறுக்கன் என்றார்கள். அதனால்தான், நழுவி விடக் கூடாதே என்று பத்திரிகையில் செய்தி வரச் செய்தோம். இப்போது, அதற்கு வேறு மறுப்பு விட வேண்டும்! ஆனால், ஒன்று நிச்சயம். உனக்கு இந்தப் பிறவியில், கல்யாணம் கிடையாது. இவ்வளவு சொத்தைத் தூக்கி எறிகிற பைத்தியக்காரனை, எவள் மணப்பாள்? எப்போது, மேலே விழுந்து பிறாண்டுவானோ என்று பயந்து, ஓடிவிடுவாளே!” என்று தன் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் வார்த்தைகளில் கொட்டினாள்.

ஆனால், அசுசியாய் அவன் பார்த்த பார்வையில், தன்னையறியாமல் பின்னடைந்தாள்.

“எஎன்ன?”

அருவருப்புடன், கையிலிருந்த கண்ணுக்குத் தெரியாத தூசியைத் தட்டிவிட்டு,

“எல்லோரும் உன்னைப் போலப் பணத்தாசை பிடித்தவர்களாக இருப்பதில்லை, சுனிலா.

உண்மையான அன்புக்கும், குடும்ப உறவுக்கும் மதிப்புக் கொடுக்கிறவர்களும், இந்த உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்!” என்றான் அவன்.

“ஓஹோ! இந்த வீட்டு மோகினி, அப்படிப்பட்ட உத்தமி என்கிறாயாக்கும். பைத்தியத்துக்கு ஏற்ற பைத்தியமாகக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்களாக்கும். தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் ஒன்று. கொஞ்ச காலத்தில், நடுத்தெருவில் நின்று பிச்சையெடுக்கும்போது, தப்பித் தவறிக்கூட, என்னிடம் பிச்சைக்கு வந்துவிடாதீர்கள். நான் பைசாப் போட மாட்டேன். “ என்று, வந்ததும் எங்கோ வீசியிருந்த கைப்பையைத் தேடி இங்குமங்கும் பார்த்தாள்.

மனது கலங்கி இருந்ததாலோ என்னவோ, சோஃபாவின் ஓரமாகக் கிடந்தது கூட, அவளது கண்ணில் படவில்லை.

நரேந்திரன் எழுந்து, கைப்பையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அதுவும் ஆத்திரமூட்ட, அவன் கையிலிருந்து, பையைப் பிடுங்கினாள் சுனிலா.

அதே வேகத்தில், “அந்தப் பெண்ணிடமும் இப்படி முதலிலேயே உண்மையைச் சொல்லி எச்சரித்துவிடு. என்றைக்கோ ஒரு நாள், காவி

கட்டிக்கொண்டு சாமியாராய் இமயமலைக்குப் போகிறவன் நீ. அதனால், தனியாக வாழத் தயாராகவும் இருக்க வேண்டும், என்று. அல்லது, உனக்கும் சேர்த்துப் பிச்சையெடுத்துச் சாப்பிட நேரும் என்று, எல்லா நிஜத்தையும் சொல்லி, அதற்குப் பிறகும், அந்த மடச்சி உனக்குக் கழுத்தை நீட்டினால், அவளைத் தாராளமாகக் கட்டிக் கொள்! அதெங்கே நீட்டுவாள்? நீ இனி, அரசமரத்தடிப் பிள்ளையார்தான். . . ." என்று வாயில் வந்தபடி ஏசியவாறே அங்கிருந்து வெளியேறினாள் சுனிலா.

புயலடித்து ஓய்ந்த மாதிரி, சற்று நேரம், அங்கே அமைதி நிலவியது.

அதன் பிறகே சுய உணர்வு வந்த மாதிரி, "பிரமாதம் நரேந்திரன்! இப்படி ஒரு திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று தெரியாமல், கண்டபடி பேசிவிட்டேன்! மன்னித்து விடுங்கள்!" என்று முன்னே வந்த ஞானமூர்த்தியை, வெறித்து நோக்கினான் நரேந்திரன்.

"எஎன்ன . . ரொம்பக் கேவ . . குறைவாகப் பேசிவிட்டேனோ? வாயை விட்டுவிடாதீர்கள் என்று, அவள் சொல்லத்தான் செய்தாள். ஆனால், கொஞ்சம் நிலைகுலைந்து போனேனா . . ."

"அதை நான் பெரிதாக நினைக்கவில்லை, அங்கிள். " என்றான் நரேந்திரன்.

"பிபின்னே, அப்படிப் பார்த்தீர்களே!"

"ஒருத்தி . . . அந்தப் பெண் சுனிலா என்னென்ன சொல்லிவிட்டுப் போனாள் என்று, பார்த்தீர்களா? இனி . . இப்போது, உங்கள் பெண்ணின் முறை! "

"நரேந்திரன்! நீ நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று, பதட்டத்துடன் கேட்டார் அவர்.

"இப்போது உங்கள் பெண்ணைக் கூப்பிடுங்கள், அங்கிள். இந்தப் பெரிய பணம் இல்லாத என்னைத்தானே, நளினி விரும்பினாள்? ஆனால், நிலைமை மாறியிருக்கும் இப்போது, அவள் என்ன சொல்லுகிறாள் என்று பார்ப்போம்!" என்றான் அவன், இப்போதும் கணீர்க் குரலிலேயே!

அந்தக் குரலுக்குப் பதில் போல, தாளிட்டிருந்த அறைக் கதவு, திடுமெனத் திறந்தது. கலைந்த கேசமும், சிவந்து வீங்கியிருந்த கண்களுமாக, அங்கே நளினி நின்றாள்.

நரேந்திரன் அசையாமல் நின்று பார்த்துக் கொண்டிருக்க, அவன் அருகில் சென்று, "சொல்லுங்கள், எங்கே கையெழுத்திட வேண்டும்?"

என்று கேட்டாள்.

“இந்தாக்கா, பேனா.” என்று, பேனாவை எடுத்துக் கொடுத்தான் கிருபாகர்.

நரேந்திரனைக் கேள்வியாய் நோக்கியவள், அப்போதும், அவன் எதுவும் சொல்லாதிருக்கவும், சுற்று முற்றும் பார்த்தாள்.

ஏதோ சொல்ல முயன்ற ஞானமூர்த்தியைத் தலையசைத்துத் தடுத்தாள் மனைவி. இருவரும் ஜன்னல் ஓரமாகச் சென்று, வெளியே எதையோ பார்க்கத் தொடங்கினார்கள்.

நளினி அதற்குள், டீபாயில் கிடந்த காகிதங்களைப் பார்த்துவிட்டு, அங்கே போய் அமர்ந்து, விடுதலைப் பத்திரங்களில், நரேந்திரன் கையெழுத்துக்குக் கீழே, தானும் கையொப்பமிட்டாள்.

பேனாவைத் தம்பியிடம் கொடுத்துவிட்டு, “என்னைப் போய்ச் சந்தேகப் பட்டீர்களே!” என்று நரேந்திரனிடம் குறைப்பட்டாள்.

“ஏன்? நீ படவில்லையா? “ சுருக்கென்று வந்தது கேள்வி.

“நான் . . . நான் ஒன்றும், சும்மா சந்தேகப்படவில்லையே! அவள் பத்திரிகையைக் காட்டுகிறாள்., உங்கள் அப்பாவைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லுகிறாள். நான் வேறு என்ன செய்யட்டும்?”

“எத்தனையோ செய்யலாம். இப்படி “ஊளுஊளு” என்று அழுது, கண்ணையும் முகத்தையும் கெடுக்கத் தேவையில்லை.” என்றவாறு, மறுபடியும் அமர்ந்தான் அவன்.

“சொல்வது எளிது. நான் என்ன செய்திருக்க முடியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்!” என்று, அவன் அருகே வந்து நின்று கேட்டாள் நளினி.

கையைப் பிடித்து உட்கார வைத்துவிட்டு, அவன் சொன்னான். “முதலில், என் வருங்காலக் கணவன் மேலே உரிமை கொண்டாட நீ யாரடி என்று, அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருக்கலாம். அல்லது, பெண்ணே, உனக்கும் எனக்கும் ஒன்றுமில்லை., நரேனிடமே நேரில் பேசி, உன் குழப்பத்தைத் தெளிவுபடுத்திக் கொள் என்று என் ஃபோன் எண்ணை, அவளுக்குக் கொடுத்திருக்கலாம்., குறைந்த பட்சமாக, என்னுடன் தொடர்பு கொண்டு, இப்படி ஒருத்தி வந்திருக்கிறாளே என்று எனக்குத் தகவலாவது தெரிவித்திருக்கலாம். எதுவும் செய்யாமல், அது என்ன அழுகை?”

“ஆஹா! நரேன் சார் சொன்னது போல, எத்தனையோ செய்திருக்கலாம் என்று, இப்போதல்லவா, தெரிகிறது! அதை விட்டு, எத்தனை மணி நேரம் அழுதிருக்கிறாய், பார்! நீ அழுது, உடனே எல்லோரும் கலங்கி . . . எப்படியும், நீ அழுதிருக்கக் கூடாது, அக்கா!” என்றான் கிருபாகர்.

“நன்றாக உறைக்கும்படிச் சொல்லு, கிருபா!” என்றான் நரேந்திரன் இன்னமும் சிறு கோபத்துடனேயே.

“அழுதது தப்புத்தான்! அழுது அழுது, இப்படித் தலை, தொண்டை வலிகளை நான் இழுத்துக் கொண்டிருக்கவே கூடாதுதான். ஆனால், இவர் சொன்னதில், முதல் வழியை மட்டும், என்னால் செய்யவே முடியாதுடா.” என்று தம்பியிடம் உருக்கமாகச் சொன்னாள் நளினி.

“ஏனோ? ஏதோ கராத்தே, கிராத்தே எல்லாம் பயின்றதாகக் கேள்விப் பட்டேன்? அப்புறம் என்ன பயம்?”

“பயம் இல்லை. மரியாதை!”

“யாருக்கு? அவளுக்கா?”

“சீச்சீ! அவளுக்கு எதற்கு மரியாதை? எல்லாம் நரேனுக்குத்தான் மரியாதை! “

“என்ன கிருபா, அதிகப்படி அழுகையில், உன் அக்காவுக்குப் புத்தி ஏதும் புரண்டுவிட்டதா?”

தம்பியும் ஒரு தினுசாகப் பார்க்கவும், “ஏய், அதெல்லாம் ஒன்றும் இல்லை! வருங்காலக் கணவன் மேல் உரிமை என்று ஏதோ இவர் சொன்னாரே! மரியாதையாகக் “கணவர்” எனாமல், “கணவன்” என்று ஒருமையில் சொல்லக் கூடாதில்லையா? அதைச் சொன்னேன்!” என்று நளினி கூறி முடிக்க, “ஐயோ, அறுவை!” என்று உதட்டைப் பிதுக்கினான் கிருபாகர்.

பெரியவர்கள் முகங்களில் புன்னகை மலர்ந்தது.

“ஆ . . மாம்! இதிலெல்லாம் ஒன்றும் குறைச்சல் இல்லை!” என்று அலுப்புடன் கூறினான் நரேந்திரன். “நீயும் அழுது, எல்லோரையும் கஷ்டப்படுத்தி . . .மூடிய கதவுக்குப் பின்னால், உன் விசும்பல் சத்தம் கேட்டால், எனக்கு எப்படி இருக்கும்? ஆனால்,  அவசியமே இல்லாத அழுகை!”

“ஆனால், அந்த நேரத்தில் யாராலும் நிதானமாக யோசிக்க முடியவில்லை, நரேந்திரன். அதுவும், உங்கள் அப்பாவே அப்படிச்

சொன்னதும், ரொம்பவும் கலங்கிப் போனோம்!" என்று பேச்சின் உள்ளே வந்தார் ஞானமூர்த்தி.

"உங்களோடு பேசியது அப்பாதான் என்று நிச்சயமா, அங்கிள்?" என்று நரேந்திரன் கேட்கவும், எல்லோருக்குமே ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

"அந்தக் குரல் . . . " என்று அவசரமாக யோசித்துவிட்டு, "அது, உங்கள் தந்தையின் குரல்தான், நரேந்திரன். நான், அவரோடு பேசியிருக்கிறேனே! அதே தெளிவு., அதே கம்பீரம்! சுனிலா பேச்சை, அவரும் ஆமோதிக்கவும்தான், ஒரேயடியாக மனது தடுமாறிவிட்டது." என்றார், ஞானமூர்த்தி.

"தாத்தாவும், அப்பாவுமாகத் திட்டமிட்ட திருமணம், அது. தொழில் வளர்ச்சிக்கான திருமணம். அப்படியே நடந்துவிட்டால் நல்லது என்று எண்ணியிருப்பார். சுனிலா என்ன சொன்னாளோ? அத்தோடு, நளினி பற்றியும், அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், இப்போது . . ." என்று டீபாய் மீதிருந்த காகிதங்களை ஒரு தரம் பார்த்துவிட்டு, "அப்பாவிடம் நேரே பேச வேண்டியிருக்கிறது. " என்று செல்லை எடுத்து, எண்களைத் தட்டினான், நரேந்திரன்.

எதிர் முனையில் எடுத்தவரிடம், "சுதேஷ், நரேந்தர் பேசுகிறேன். அப்பாவோடு, சற்று அவசரமாகப் பேச வேண்டுமே. அவரது தனி எண்ணுக்கு இப்போது தொடர்பு கொள்ளலாமா என்று, கேட்டுச் சொல்கிறாயா? இதே எண் போட்டுச் சொல்லு. " என்றான்.

செல்லை அணைத்துவிட்டு, "இதுதான் எங்கள் வீடு, அங்கிள். அப்பாவுடன் தனியாக ஃபோனில் பேசுவதற்கு, அவரிடம், முன் அனுமதி பெறவேண்டும்." என்றான் நரேந்திரன்.

பரிவாக நோக்கிவிட்டு, "ஆனால். அந்தப் பெண், நேராக அவரோடு பேசினாள், நரேந்திரன். அதுவும், உரிமையோடு மாமா என்று அழைத்து . . . " என்று இழுத்தார் ஞானமூர்த்தி.

"அதுதான் சொன்னேனே., அவளோடு திருமணம் நடந்தால் என் தொழிலுக்கு நல்லது என்று . . ." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவனது செல் கிணுங்கியது.

எடுத்துக் கேட்டுவிட்டு, "அப்பா உடனே பேசச் சொன்னாராம்." என்றான் .

செல்லில் எண்களை அழுத்தத் தொடங்கியவன், மற்றவர்கள் அங்கிருந்து அகல முயற்சிப்பதைக் கவனித்து, அங்கேயே இருக்குமாறு

சைகை செய்தான்.

“உங்களுக்கு இன்னொரு தரம் சொல்ல வேண்டியிராது.” என்று அவன் சொல்லும்போதே, மறு மனையில் தொடர்பு வந்துவிட, “ஹலோ அப்பா!” என்றான்.

“சொல்லுப்பா. எப்படி இருக்கிறாய்?” என்று, கிட்டத்தட்ட நரேந்திரனின் குரலை ஒத்த, சற்று முதிர்ந்த குரல், மிகவும் லேசான ஒரு கரகரப்புடன் கேட்கவும், அவன் “ஸ்பீக்கரை ஆன்” செய்திருப்பது, எல்லோருக்கும் புரிந்தது.

ஒரு தந்தையாய், இன்னொரு தந்தையின் குரல் கரகரப்புக்கு அர்த்தம் கண்டு, ஞானமூர்த்தி உள்ளூரச் சங்கடத்துடன் மேலே கவனித்தார்.

“ம். நன்றாகத்தான் இருக்கிறேன். நம் குடும்பங்களில்தான், சிறு வயதிலேயே, வெளியே தனித்து வாழக் கற்று விடுகிறோமே! என்றான் நரேந்திரன், இயல்பான குரலில்.

“ஆனால், எங்களைத்தான் அடியோடு மறந்துவிட்டாய், போல?”

“பெற்றவர்களை மறக்க முடியுமாப்பா? நானே வருவதாகத்தான் இருந்தேன். ஒரு சரியான தருணத்துக்காகக் காத்திருந்தேன். “

நரேந்திரன் அவ்வப்போது சொல்லும் “சரியான தருணம்”! குடும்பம் முழுவதும், உன்னிப்பாகக் கவனிக்கலாயிற்று.

“புரியவில்லை, தம்பி. அது என்ன தருணம்?” என்று அவர்களுக்காகவே போல, தேவராஜன் கேட்டார்.

“சுனிலாவின் திருமணம்.” என்றான் நரேந்திரன்.

எல்லோரும் அவனது முகத்தையே பார்க்க, தொடர்ந்து “அவளோடு திருமணம் என்றதுமே, நான் வீட்டை, ஊரை விட்டு வெளியேறியதிலேயே என் மனம் எல்லோருக்கும் புரிந்திருக்கும் என்று நம்பினேன். எனவே, கொஞ்சநாள் பார்த்துவிட்டு, வேறே ஒருவனை அவள் மணப்பாள் . .வேறே ஒரு லாபகரமான இணைப்பை, நீங்கள் பெரியவர்கள் சேர்ந்து ஏற்படுத்திக் கொடுத்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். “ என்றான், இப்போதும் சாதாரணமாகவே.

நம் குடும்பத்துப் பழக்கம் அதுதானே என்பது போல, அவன் இயல்பாகச் சொன்ன விதம், அந்த வீட்டினருக்கு, ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், நரேந்திரனுடைய தந்தைக்கு, அப்படி விசித்திரமாக

எதுவும் தோன்றவில்லை என்பது போல, “அப்படியொரு பேச்சு நடந்தது.” என்று அவரும், இயல்பாகவே கூறினார். “ஆனால், அவளுக்கு உன்னிடம் மயக்கம்! “

ஏளனமாகச் சிரித்து, “மயக்கம் என்னிடம் இல்லை, அப்பா. இப்போது எனக்கு உரியதாகவும், பின்னர் வரக் கூடியதாகவும் இருக்கும் பணம், சொத்தின் மீது, அவளுக்கு அபார மோகம். சொத்தை விட்டுவிடப் போகிறேன் என்றதும், என்னை எப்படி வாய் வலிக்கத் திட்டி, நிறைய சாபங்கள் கொடுத்துவிட்டு, விழுந்தடித்து ஓடிவிட்டாள், தெரியுமா? “ என்றான் மகன். “ஆனால், இதற்குள், உங்களுக்கும் தகவல் வந்திருக்குமே! சொன்னாள்தானே? “

சற்று சங்கடப்பட்டவர் போல, “அது, தம்பி . . “ என்று தொடங்கி, “சுனிலா அப்பா கொன்னார். ஆனால், நீ ஒன்றும் அவசரப்பட்டு, அவளிடம் சொன்னது போல எதுவும், பண்ணி விடாதேப்பா.” என்றார் பெற்றவர்.

பிறகு, “நம் குடும்பங்களில், உனக்குப் பொருத்தமாக இன்னும் . . “ என்று, அவர் தொடர்ந்து சொல்லத் தொடங்கவும், மகன் குறுக்கிட்டான்.

“பொறுங்கள், அப்பா. ஒரு முக்கியமான விஷயம், உங்களுக்குச் சொல்ல வேண்டும். சொத்து, பணம் வேண்டாம் என்று விடுதலைப் பத்திரம் எழுதிவிட்டேன் என்றதும், நீங்கள் பார்த்து வைத்த சுனிலா ஓடிவிட்டாள். ஆனால், என் விருப்பமே பெரிது என்று, தானாக முன்வந்து, பத்திரத்தில், என் பெயரை அடுத்துத் தானும் கையொப்பம் இட்டிருக்கிறாள் ஒருத்தி. சொல்லுங்கள், அப்பா. நான் யாரை மணப்பது, எனக்கு நல்லது?” என்று கேட்டாக் அவன்.

ஆஹா! மறுக்கவே வழியில்லாதபடி, தகப்பனாரை எப்படி மடக்கி விட்டான் என்று ஞானமூர்த்தி குடும்பம் விழி மலர்ந்து, வியந்து நோக்கும்போது, ஒரு சிறு தயக்கத்தின் பின், “ஒன்று சொன்னால், தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயேப்பா?” என்று தேவராஜன் கேட்டார்.

“சொல்லுங்கள்.”

“நம் குடும்பத்தில், நீ நாலாவது தலைமுறை, நரேன். உன் கொள்ளுத் தாத்தா . . .அதாவது, என் தாத்தாவும், அவருடைய நண்பருமாகச் சேர்ந்து வந்து, தொடங்கி, ஆணும் பெண்ணுமாச் சேர்ந்து உழைத்து வளர்த்த தொழில் சாம்ராஜ்யம், இது. ஒன்றிலிருந்து ஒன்றாக, எத்தனையோ கிளைத் தொழில்களுடன் கப்பும் களையுமாக வளர்ந்து

பெருகியிருக்கிறது. அம்மா இதற்கு என்ன செய்கிறாள் என்று நினைக்காதே. மாதர் மன்ற நிகழ்ச்சிகள், கிட்டீஸ் கிளப், கலை நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் இதிலெல்லாம், அம்மா, அம்மா போல நம் குடும்பத்து மற்ற பெண்கள் எல்லோரும் ஏன் பங்கேற்கிறார்கள் என்று தெரியுமா? பெண்களிடையே நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காகத்தான். பெண்களுக்குள் ஒற்றுமை இருந்தால், ஆண்களுக்குள்ளும், அது நிலைக்கும். ஒன்றுக்கு ஒன்று ஒத்துழைத்துத் தொழில் வளமும் சிறக்கும். என் அம்மா செய்தது., உன் அம்மா செய்வது. இப்போது, உன் அக்கா தொடங்கியிருக்கிறாள். இப்படி, ஆணும் பெண்ணுமாகக் கட்டிக் காத்து வளர்த்து வந்திருப்பது, இந்தச் சொத்தும் பணமும். சட்டென்று, எதுவும் வேண்டாம் என்று தூக்கிப் போட்டால், அதைத் தடுத்து, சொத்தைக் காப்பது, ஒரு நல்ல மனைவியின் கடமையா, இல்லையா? அதை, நீதானே சொல்லுப்பா." என்று அவர் முடிக்கவும், நளினியுடைய மொத்தக் குடும்பமும் திகைத்துப் போயிற்று!

யப்பா! இதற்கு, நரேந்திரனால், என்ன பதில் சொல்ல முடியும்?

எல்லோரும் திகைப்புடன் நோக்குகையில், அவன் வேறு கூறினான்.

"அப்பா, இப்போது, நீங்கள்தான் விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை. கொள்ளுத் தாத்தாவும் அவருடைய நண்பரும், மும்பைக்கு வரும்போது, என்ன நிலையில் இருந்தார்கள்? குடும்ப வரலாறில், நானும் படித்தேன். இவ்வளவு பெரிய தொழில் சாம்ராஜயத்துக்கு அஸ்திவாரம் போட்டு வளர்த்தது, ஒன்றுமில்லாமல் வந்த அவர்கள்தானே? அதையே, நானும் என் நண்பனுமாக, இங்கே செய்ய முடியும் என்று, உங்களுக்கு ஏன் தோன்றவில்லை? செய்வேன்ப்பா! என்னை நம்புங்கள்! " என்றான், குரலில் சிறு வற்புறுத்தலோடு.

தந்தைக்கும் மகனுக்கும் நடந்த, உள்ளர்த்தம் நிறைந்த இந்த வார்த்தைப் போரில், ஞானமூர்த்திக்கு மூச்சு முட்டியது. ஆனால், அங்கேயே இருக்கும்படி வருங்கால மருமகன் கூறிய பிறகு, மீறி வெளியே செல்லவும் அவருக்கு மனம் வரவில்லை. எனவே, எழுந்து சென்று, ஜன்னலருகே நின்று, வெளியே பார்த்தார்.

இப்போது என்ன நடக்கப் போகிறது?

நரேந்திரன், நளினியை மணக்க மாட்டானோ என்ற சந்தேகம் அவருக்கு வரவில்லை. அவர்கள் இருவருக்கும் திருமணம் நடப்பது, நிச்சயம் . அதை, நரேந்திரன் எப்படியாவது சாதிப்பான்.

ஆனால்,  மகனைத் தேவராஜன் மும்பைக்கு வரவழைத்து விடுவாரோ என்றுதான், அவருக்கு அச்சம்.

நரேந்திரனுக்கே பிடிக்காத அந்தச் சூழ்நிலையை, மகள் எப்படி சமாளிப்பாள்?

அதுவே அவரது கலக்கம்!

மூச்சைப் பிடித்துக்கொண்டு, எல்லோரும் காத்திருந்த சில வினாடிகளின் பின், பெற்ற மனம் இளகி, இறங்கி வந்தது.

“நீ சொல்வதும், சரியாகத்தான் தெரிகிறது. உன் விருப்பம் போலச் செய். ஆனால், செய்வதை, இங்கிருந்தே செய்யலாமில்லையா? வேண்டுமானால், மருமகளிடம் நான் பேசட்டுமா?” என்று அவர் தணிந்து போன விதத்தில், எல்லோருமே இப்போது, சந்தோஷத்தில் அதிர்ந்து போயினர்.

மருமகள் என்று ஒத்துக் கொள்கிறாரே!

நளினிக்கு மகிழ்ச்சியோடு, பயமும்!

எவ்வளவோ கெட்டிக்காரனான நரேனையே, பேச்சில் கிடுக்கிப் பிடி போட்டுத் திணறடிக்கிறார்.  அவருடன், அவள் என்ன பேசுவது?

விறைத்துப் போய் அமர்ந்திருந்தவளின் கை மீது கை வைத்து லேசாகத் தட்டிக்  கொடுத்தான், நரேந்திரன். அப்படியே, தந்தையுடனும் பேசினான்.

“உங்கள் மருமகளிடம், நீங்கள் தாராளமாகப் பேசலாம்ப்பா. ஆனால், நாங்கள்  அங்கே வருவதும், வராதிருப்பதும், நளினியின் முடிவல்ல. என்னுடையது மட்டுமே. நம் குடும்பத்துப் பெண்கள் பற்றி, நீங்கள் கூறியது, சரியாகவே இருக்கலாம்ப்பா. அவர்கள், தொடக்கத்தில், இப்படி நினைத்தே, பலதையும் தொடங்கியும் இருக்கலாம். ஆனால், எதற்காக எது என்பது இல்லாமல், இப்போது எல்லாமே சற்று அளவு மீறிப் போய்விட்டது என்று, எனக்குத் தோன்றுகிறது. அங்கே வந்தால், அதிலிருந்து, நளினியாலும் மீள முடியாது. தன் அடையாளத்தை, நளினி அங்கே தொலைப்பது, எனக்குப் பிடிக்கவில்லை.  அதனால், இங்கேயே இருக்கலாம் என்று தீர்மானித்து இருக்கிறேன்.” என்று, அவரைப் போலவே, தெளிவாகக் கூறினான்.

“அப்படியா சொல்கிறாய்?” என்று அவர் யோசிக்கவும், “எல்லோரும் ஏதாவது சொல்வார்களோ என்று இருக்கிறதாப்பா? கவலைப்படாதீர்கள். பத்து ஆண்டுகளுக்கு முன், மாலிக்கா வீட்டில், அவர்கள் தம்பி, ஒரு நார்வே பெண்ணை மணந்துகொண்டு,

அங்கேயேதானே, இருக்கிறார்? இப்போது, அந்தப் பகுதியில், நம் தொழில்களின் ஏற்றுமதிப் பொறுப்பை, அவர்தானே பார்க்கிறார்? அதைப் போல, இதையும், எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்." என்று, அவரை அமைதிப்படுத்தினான் நரேந்திரன்.

"ஆனால் தம்பி . . அந்த விடுதலைப் பத்திரத்தைக் கிழித்துப் போட்டு விடுவாய்தானே? நாலு தலை முறையின் உழைப்பு, கண்ணா! அதை அலட்சியப் படுத்த வேண்டாம். பிள்ளை, குட்டி, பேரன் பேத்தி என்று, வருங்கால சந்ததி நன்றாக இருக்க வேண்டும் என்றுதானே, உழைப்பதும், சேமிப்பதும்? அதை உதாசீனப் படுத்துவது, தப்பும்மா. நியாயமே ஆகாது!"

தேவராஜனின் குரலில் இழையோடிய மன்றாடலை, எல்லோராலும் உணர முடிந்தது. அவரது பேச்சில் ஒரு நியாயம் இருப்பதாகவும் தோன்றியது.

ஆனால், அவருக்கு சாதகமாக ஒரு வார்த்தை சொல்லவும், யாருக்கும் வாய் வரவில்லை. பணத்தாசை என்று, நரேந்திரனுக்குத் தோன்றிவிடக் கூடுமோ என்ற அச்சம்!

ஆனால், நரேந்திரனும் அதையே உணர்ந்தவனாக, "இப்போதைக்கு, அதை நான் பதிவு பண்ணாமல் வைத்திருக்கிறேன், அப்பா. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். " என்று இறங்கி வந்தான்.

"அப்புறம், திருமணம்? அதை எங்கே, எப்படி நடத்துவது? அது பற்றி, ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாயா?"

"ஆமாம்!" என்றான் மகன், தெளிவாகவே. "இங்கே நளினி குடும்பத்தில், இது முதல் திருமணம். ஏற்கனவே, நிறையத் திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறார்கள். தாத்தா பாட்டிகளில் இருந்த, நம் குடும்பம் மட்டும் வாருங்கள். திருமணம் முடிந்த உடனேயே, தொழிலில் ஏற்றுமதியையும் பார்த்துக்கொண்டு, அப்படியே தேனிலவாய், உலகப் பயணம் போகலாம் என்றிருக்கிறேன். திரும்பி வரும்போது, மும்பையில் வரவேற்பு வைத்துக் கொள்ளலாம், அப்பா. தேவையான ஏற்பாடுகளைச் செய்ய, உங்களுக்கும் அவகாசம் கிடைக்கும். முக்கியமாக, எங்கள் திருமணச் செய்தி, பரவிப் பழசாகிவிடும் என்பதால், வரவேற்புக்கு வருகிறவர்கள் எல்லோருக்கும் விளக்கம் சொல்லிக்கொண்டு நிற்கும் சங்கடமான பணி, உங்களுக்கு இராது! "

லேசாகச் சிரித்து, "ஆக, அப்பாவுக்காகவும் பார்க்கிறாய் என்று சொல்லு." என்று கிண்டல் செய்தார் தந்தை. "அப்படியே, அப்பா, தாத்தாவுக்கு வயதாகிறது., வேலைச் சுமையைக் குறைப்பது எப்படி

என்றும், சற்று யோசி.” என்று வாய்ப்பை விடாமல் அறிவுறுத்தவும் செய்தார்.

மகனும் அவரைப் போலவே சிரித்து, “என் அப்பா, தாத்தாவின் பொறுப்பைக் குறைப்பது பற்றி யோசிக்கும் தேவை, இன்னும் பல ஆண்டுகள் வராது என்று, எனக்கும் தெரியும், அப்பா. அது வரை, நிம்மதியாகத் தொழிலைப் பாருங்கள். பார்த்து, உங்கள் பேரன் பேத்திகளுக்கும் சேர்த்து வையுங்கள். “ என்று கூறி நழுவவும், தோல்வியை நல்லவிதமாகவே ஏற்று, பெற்றவர் கலகலவென்று நகைத்தார்.

சிரித்தவாறே, அவருடன் பேச்சை முடித்துக்கொண்டு, ஞானமூர்த்தியைப் பார்த்தான், நரேந்திரன்.

“எல்லாம் கேட்டீர்கள் தானே, அங்கிள். இனி, நீங்களும் மகளின் திருமண ஏற்பாடுகளைத் தொடங்கலாம். அத்தோடு, இனிமேல், நளினியோடு சற்றுத் தனியே பேச அனுமதி கிடைக்கும் அல்லவா? “ என்று கேட்டவாறே, நளினியின் கையைப் பற்றி எழுப்பினான்.

தந்தையுடன் அவன் பேசிய விதத்தைக் கேட்டிருந்த ஞானமூர்த்திக்குச் சிரிப்பு வந்தது. கையைப் பற்றிக் கூடவே எழுப்பிவிட்டு, அதற்கு மேல், பேருக்கு அனுமதி கேட்கிறானாக்கும்.

ஆனால், இப்போது மறுப்பதற்கும் காரணம் இல்லை என்பதோடு, மறுத்தால் மகளும் நிற்க மாட்டாள் என்பதும் அவருக்குப் புரிந்தது.

எனவே, பிள்ளையைப் பெற்றவரைப் போலவே, அவரும், புன்னகையுடனேயே “கௌரவமாக” அனுமதி வழங்கினார்.

நரேந்திரன், நளினியை அழைத்துச் சென்ற இடம், அவனது குடியிருப்பே!

“உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும்.” என்று உள்ளே அழைத்துச் சென்று, அமர வைத்தான்.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு, அவள் எதிரே தானும் அமர்ந்தான்.

அவளது ஒரு கையைப் பற்றித் தன் கைகளுக்குள் அடக்கிகொண்டு சொல்லலானான். “நம் வாழ்க்கைக்கு, இது மிகவும் அவசியம் என்று இல்லை, நளின்.

ஆனால், யாராவது வம்பு வளர்க்க நினைத்து ஏதாவது கதை சொன்னால், அதைக் குப்பையாகக் கருதி ஒதுக்குவது இலகுவாக

இருக்கும் என்பதற்காகவே சொல்லுகிறேன். “ என்று தொடங்கி, நீலிமாவோடு திருமண நிச்சயம், அது பற்றிய தன் மனநிலை, தொடர்ந்து நடந்தது பற்றி, எதையும் மறைக்காமல் எடுத்துரைத்தான்.

மனதுக்கு மதிப்புக் கொடுக்காமல், பணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எல்லோரும் நடந்துகொண்ட விதத்தில், மனம் அடியோடு வெறுத்துப் போனதை விவரித்தான்.

கொஞ்சம் கத்தி மேல் நடக்கிற நிலைதான்.

ஆனால், இப்போது தந்தையின் விருப்பத்துக்காக, அவ்வப்போது மும்பைக்குச் சென்று வர வேண்டியிருக்கும் என்றாகிவிட்ட நிலை. அந்தச் சமயத்தில், நீலிமாவின் இழப்பைத் தாங்க முடியாமல், அவன் மும்பையை விட்டு ஓடியதாக யாரும் . . . நல்லது, கெட்டது எல்லாம் சேர்ந்ததுதானே, சமூகம்? அதில் சுனிலா போல யாரும் வந்து, ஓதி, நளினியின் மனதைக் காயப்படுத்தி விடக் கூடாதே என்று முன்னெச்சரிக்கையாக, நரேந்திரன் இதையெல்லாம் அவளிடம் சொல்ல வேண்டியிருந்தது.

சூட்டோடு சூடாக, இந்த விளக்கங்களை எல்லாம் முடித்துவிட்டால், அப்புறம், இதை அப்படியே ஒதுக்கிவிட்டு, நிம்மதியாக இருக்கலாம் என்பது, அவனது கருத்து!

ஆனால், “சும்மாக் கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி” என்று ஒரு பழமொழி உண்டு. அதன்படி, நரேந்திரனின் விளக்கத்தையே, நளினி தவறாக எடுத்துக் கொள்ளவும்  வாய்ப்பு உண்டு.

ஆனாலும், கெடுதலை விரும்பிச் சொல்லுகிறவர்களை விட, தன் வாய்மொழி மூலமாகவே வருங்கால மனைவி விஷயம் அறிவது நல்லது என்று எண்ணிச் சொன்னான் அவன்.

ஆனால், அவன் சற்றும் எதிர்பாராதபடி, அவள் வேறு கூறினாள்.

“ஆக, இந்தப் பெண்களைப் போல என்று எண்ணித்தான், அன்று நீங்கள், என்னை அப்படிப் பார்த்தீர்களா?” என்று கேட்டாள்.

“எஎன்றைக்கு . .எப்படிப் பார்த்தேன்?” என்று குழப்பத்துடன் கேட்டான், அவன்.

முறுவலித்து, “நாம் முதல் முதலாகச் சந்தித்த அன்று! கதவைத் திறந்ததும், வெறுப்பு, அருவருப்பு, ஏளனம் எல்லாம் கலந்த மாதிரி ஒரு பார்வை பார்த்தீர்களே!” என்று என்று விளக்கினாள் நளினி.

“பெரிய மகாராஜா மாதிரி, எங்களை அலட்சியமாகப் பார்த்தீர்கள் என்று அப்போது ரொம்பக் கோபப் பட்டேன். ஆனால், இரண்டு பெண்களால், அருவருத்து வந்திருந்தீர்கள் என்று, இப்போதல்லவா, தெரிகிறது!” என்று அவள் தொடர்ந்து கூற,

“ரொம்பக் கோபப் பட்டதாகச் சொல்கிறாய், ஆனால், அது பற்றி என்னிடம் காரணம் கேட்கவே இல்லையே, ஏன்?” என்று இன்னொரு கேள்வி கேட்டான் நரேந்திரன்.

விழி மலர அவனை நோக்கியவளின் கன்னங்கள் லேசாகச் சிவந்தன.

“சொல்லும்மா!” என்றான் அவன் ஆர்வத்துடன்.

இமை தாழ்த்தி, “கேட்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால், உங்களைப் பார்க்கும்போது, அது மறந்துவிடும். அத்தோடு, நீங்கள், தம்பிக்கும் எனக்கும் நல்லதே செய்ததால், உங்கள் முன் அசடு வழியவே பாதி நேரம் சரியாக இருந்தது. அப்புறம் . . அந்த மயக்கம் வேறா? அந்தப் பார்வை, என் கற்பனையோ என்றுகூடத் தோன்றிவிட்டது. இல்லை என்று நினைக்கும்போதும், நானே அதற்கு ஒரு காரணம் கண்டுபிடித்தேன். ஏதோ டீவி சீரியல் பார்த்துவிட்டுத் தூங்கப் போயிருப்பீர்கள்., அதில்தான் இப்போது பெண்களை வில்லாதி வில்லிகளாகக் காட்டுகிறார்களே, அப்படி எதையோ பார்த்து, வெறுத்துப் போய்த் தூங்கத் தொடங்கியவர், அரைத் தூக்கத்தில் ஒரு பெண் எழுப்பவும், அதே போல எண்ணிப் பார்த்திருப்பீர்கள் என்று . . . எண்ணினேன். “ என்றாள் அவள்.

புன்னகை விரிய, “என் கண்மணி!” என்று கனிவோடு தலையசைத்தான் நரேந்திரன்.

எழுந்து, அவள் அருகே வந்து அமர்ந்து, “ரைட் நளின். எல்லா வகையிலும், எல்லாமே தெளிவாகிவிட்டதல்லவா? இப்போது, மிக முக்கியமான விஷயத்துக்கு வருவோம். இப்போதுதான் நம் திருமணத்தை எல்லாத் தரப்பும் ஒத்துக் கொண்டாயிற்றே.

அடுத்து, திருமணம்தானே? இப்போதைக்கு, அச்சாரமாக ஒன்று கிடைக்குமா?” என்று காதருகே குனிந்து கிசுகிசுத்தான்.

சிரித்தவாறே சற்று நகர்ந்து, “ஓ! கிடைக்குமே!” என்று மறு கையை ஓங்கிக் காட்டினாள் நளினி.

ஓங்கிய கையைப் பற்றி, “ஓஹோ, முதலில் கையைக் கொடுக்கிறாயா? அதாவது, காரியம் யாவிலும் கை கொடுப்பாய் என்று

குறிப்பாய் உணர்த்துகிறாயாக்கும். ரொம்ப சந்தோஷம்மா முதல் மரியாதையை, அந்தக் கைக்குச் செய்வோம். அப்புறம், முக்கியமான காரியத்தைப் பார்ப்போம்!" என்று குறும்பாக நோக்கி அவளைச் சிவக்கடித்துவிட்டு, பற்றிய கையில் அழுந்த முத்தமிட்டான் அவன்.